# ஏ.ஏ.ஹெச்.கே.கோரி சிறுகதைகள்

(பகுதி 2)

ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

# ஏ.ஏ.ஹெச்.கே.கோரி சிறுகதைகள்

(பகுதி 2)

ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

நிலா புக்ஸ்

முகவரி

Nilacharal Ltd
18 Collingwood Road
Crawley
RH10 7WG
UK
E-mail: team@nilacharal.com

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | ஏ.ஏ.ஹெச்.கே.கோரி சிறுகதைகள் (பகுதி 2) |
| ஆசிரியர் | : | ஏ.ஏ.ஹெச்.கே.கோரி |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பகம் | : | நிலாச்சாரல் லிமிடட் |
| காப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பாசிரியர் | : | நிலா |
| பதிப்பு எண் | : | 1.0W |
| காலம் | : | டிசம்பர் 2012 |
| Wrapper design | : | Fairy |


**“உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்குத் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்குத் தமிழ் இலக்கியப் பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே 'நிலா புக்ஸ்'-ன் இலட்சியம்”**

**Nilacharal Ltd**
**18 Collingwood Road**
**Crawley**
**RH10 7WG**
**UK**
**E-mail: team@nilacharal.com**

**TERMS OF USE:**

- You may not sell, exchange, distribute or otherwise transfer this book in any form what so ever.
- You may make one (1) printed copy of this book for your personal use. You may not sell, exchange, distribute or otherwise transfer this copy to any other person for any reason.
- You may make one (1) electronic copy each of this book for archival purposes. Except for the single (1) permitted print copy and the single (1) archival copy, you may not make any other copies of this book in whole or in part in any form.

*******

**உபயோக நிபந்தனைகள் :**

- நீங்கள் இந்த நூலை எந்த வடிவத்திலும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு எந்த விதத்தில் கைம்மாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்த நூலின் ஒரு (1) பிரதியை உங்கள் சொந்த உபயோகத்துக்கு அச்சிட்டுக் கொள்ளலாம். அந்த அச்சுப்பிரதியை எந்த ஒரு நபருக்கும் எக்காரணம் கொண்டும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு விதத்தில் கைமாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்நூலின் ஒரு (1) மின் பிரதியை ஆவணத்திற்காக உருவாக்கிக் கொள்ளலாம். ஒரே ஒரு (1) அனுமதிக்கப்பட்ட அச்சுப் பிரதியையும் ஒரே ஒரு (1) ஆவணப் பிரதியையும் தவிர இந்நூலின் முழுதையுமோ அல்லது பாகத்தையோ எவ்விதத்திலும் வேறு பிரதிகள் எதுவும் எடுக்கக்கூடாது.

*******

# உள்ளடக்கம்

அக்னிப் பிரகாசம் ....................................................................1

அன்புள்ள அக்கா ....................................................................8

இது வேறுலகம் தனியுலகம் ....................................................................15

கரும்பூனைகள் ....................................................................25

காட்டுக்குள்ளே திருவிழா....................................................................28

காமாட்சிபுரம்....................................................................36

கிரீடத்தைக் கழட்டி வை ....................................................................40

கொல்லத்தான் நினைக்கிறேன் ....................................................................48

தர்ட் க்லாஸ் ....................................................................57

நான் பேச நினைப்பதெல்லாம் ....................................................................60

பெண் பால்....................................................................62

மத்தாப்புக் கொளுத்தும் மனசு ....................................................................72

வெளிச்சம் ....................................................................76

அப்பன் தொழில்....................................................................79

அமாவாசையும் அப்துல்காதரும்....................................................................84

# அக்னிப் பிரகாசம்

ஆனந்த், தன்னுடைய ஆஃபீஸ் அறைக்குள்ளே சந்தடியில்லாமல் பிரவேசித்ததைப் பார்த்த அப்பாவுக்கு ஆச்சர்யம். அதோடு ஒரு குறுகுறுப்பும். விஷயமில்லாமல் இந்தப் பயல் இந்தப் பக்கம் தலைவைத்துக்கூடப் படுக்க மாட்டானே!

“வாடா மகனே, என்னது இது திடீர் ஆஃபீஸ் பிரவேசம்? என்ன விசேஷமோ?”

அப்பா எதிரில் ஆனந்த் நுனி நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

“ஒண்ணுமில்ல டாடி, ஒங்க சொமயக் கொஞ்சம் கொறைக்யலாம்னு ரொம்ப நாளாவே யோசிச்சிட்டிருந்தேன். இன்னிக்கித்தான் டைம் கெடச்சது.”

“என் சொமயக் கொறைக்யப் போறியா? நாளைலயிருந்து கம்ப்பெனிப் பொறுப்ப நீ எடுத்துக்கிட்டு என்ன ரிலீவ் பண்ணப் போறேங்கற. நா இன்னிக்கே ரெடி. வா வந்து இந்தச் சேர்ல ஒக்காரு.”

“அட, அந்த சொமயில்ல டாடி. இது வேற சொம.”

“வேற என்னடா சொம எனக்கு?”

“அதாவது டாடி, என்ன ஒரு நல்ல எடத்ல கல்யாணம் பண்ணிக்குடுத்துக் கரையேத்தணுங்கற பொறுப்பு ஒங்களுக்குகில்லியா. அது சொம இல்லயா டாடி?”

“ஓ, நீ அங்க வர்றீயா? இது ஒங்க அம்மாவோட டிப்பாட்மென்ட்டாச்சே!”

“மம்மி ஒரு போர் டாடி. நாலு பொண்ணு பாத்து வச்சிருக்காங்களாம்.”

“நாலு பத்தாதுங்கிறியா?”

“அதில்ல டாடி, வந்து.... அஞ்சாவதா நா ஒண்ணு பாத்து வச்சிருக்கேன்.”

“அவ்ளோ தான? கவலய வுடு முடிச்சிருவோம். பொண்ணு யாரோ?”

“லாவண்யா.”

“மொட்டையாச் சொன்னா?”

“கமர்ஷியல் டாக்ஸ் ஆஃபீசர் பொண்ணு.”

“அப்பா ஸி.டி.ஓ. வா. ஓக்கே.”

“அப்பா இல்ல டாடி, அம்மா.”

“அம்மாவா!”

அப்பாவின் முகம் திடீரென்று பிரகாசங்குன்றிப் போனது. நெற்றியில் இருந்திருந்தாற்போல சில கூடுதல் கோடுகள் விழுந்தன.

“பேர் தெரியுமா?” என்றார்.

“அம்மா பேரா டாடி? தெரியாதே!”

“எந்த ஸர்க்கிள்னு தெரியுமா?”

சொன்னான்.

அப்பாவின் முகம் முன்னிலும் இறுகியது.

அப்பாவின் முக மாற்றம் ஆனந்துக்கு லேசாய்க் கிலி கொடுத்தது.

“ஏன் டாடி, ஒங்களுக்கு அவங்களத் தெரியுமா?”

“தெரியும்னே வச்சுக்கோயேன். நம்ம ஸர்க்கிள் தான். நீ அவங்களப் பாத்திருக்கியோ?”

“இல்ல டாடி. “

“பாக்கறியா?”

“பாக்கறியான்னா?”

“ஓக்கே சொல்லு. அரேஞ்ஜ் பண்றேன்.”

“எப்படி டாடி?”

“ஸஸ்பென்ஸ் ஒண்ணுமில்லடா. நம்ம அக்கவுன்ட் டன்ட் ரஹீம் சார் ஸேல்ஸ் டாக்ஸ் ஆஃபீஸ்க்குக் கிளம்பிட்டிருக்கார். நீயும் அவர் கூடப் போய்ட்டு வா. லாவண்யா அம்மாவப் பாக்கலாம்.”

ஆனந்த் தன்னோடு வருவதில் அக்கவுன்ட்டுக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷம். தன்னுடைய சந்தோஷத்தை வார்த்தைகளில் வெளிப்படுத்தினார்.

“ரொம்ப புண்ணியந் தம்பி ஒங்களுக்கு ஒங்க தயவுல ஜம்ன்னு ஒங்க கூடக் கார்ல வர்றேன். இல்லன்னா பஸ்ல அடிச்சுப்புடிச்சி ஏறி இடிச்சிக்கிட்டே வரணும்.”

“ஏன், ஆட்டோல வர்றது தான, ரஹீம் சார்.”

“வரலாந் தம்பி. எம்.டி. அப்படித்தான் சொன்னார். பஸ்ல வந்தாக்கூட ஆட்டோ சார்ஜ் க்ளெய்ம் பண்ணிக்கலாம். ஆனா மனசு கேக்கணுமே. மத்த பிஸினஸ்மேன்களப் போல கள்ளக் கணக்கு எழுதறவங்க, கருப்புப் பணம் வச்சிருக்கறவங்கன்னா, அங்க வேல செய்றவங்களுக்கும் அந்தப் புத்திதான் இருக்கும். ஆனா ஒங்கப்பா அந்த மாதிரி குறுக்குப் புத்திக்காரர் இல்லியே தம்பி. நேர்மை, நாணயத்துக்கு மரியாத தர்றவர். பிஸினஸ்ல தர்மஞாயம் பாக்கறவர். கோடியில ஒருத்தர். அவருக்கு விஸ்வாசக் கொறையா நடக்க யாருக்குத் தம்பி மனசு வரும்!”

ஆனந்துக்கு அப்பாவைக் குறித்து மிகவும் பெருமையாயிருந்தது. அவருடைய கள்ளங்கபடமில்லாத உள்ளம் வியாபாரத்தில் மட்டுமல்ல, வாழ்க்கையிலும் கூடத்தான். இவனுக்கு விவரந் தெரிந்த நாள் முதல் இன்றுவரை அப்பா இவனுக்குத் தந்தை கம் சிநேகிதன். சின்ன வயசில் அப்பா இவனைக் கை நீட்டியோ கடிந்து கொண்டோ தன்னுடைய தந்தை ஸ்தானத்தை நிலை நாட்டிக் கொண்டதாய் இவனுக்கு நினைவில்லை.

அப்பாவின் உதவியால் அம்மாவை வழிக்குக் கொண்டு வந்து லாவண்யாவை சிரமமில்லாமல் கைப்பிடிக்கலாம். ஆனால்... லாவண்யாவின் அம்மாவைக் குறித்து அப்பா கவலை கொண்டதாய்த் தெரிந்ததே அது ஏன்?

“தம்பி, இப்படி ஓரமாப் பார்க் பண்ணிட்டு எறங்குங்க” என்று அக்கவுன்ட்டன்ட், இடம் வந்ததை நினைவுபடுத்தினார்.

ஸி.ட்டி.ஓ.விடமிருந்து அழைப்பு வந்ததும் ரெண்டு பேரும் அறைக்குள்ளே போனார்கள்.

படபடக்கும் நெஞ்சோடு தன்னுடைய வருங்கால மாமியாரின் முன்னே அமர்ந்தான் ஆனந்த்.

“தம்பி யாரு?”

“எங்க எம் டி யோட ஸன் மேடம். ஒரே மகன். ஒரே வாரிசு.”

“ஸ்மார்ட் லுக்கிங் பாய்.” மாமியாரின் முதல் ஸர்ட்டிஃபிகேட் ஆனந்துக்கு சந்தோஷந் தந்தது.

லாவண்யாவின் முக ஜாடை அம்மாவிடம் இருந்தது. இன்னும் முப்பது வருஷங் கழித்து இவனுடைய லாவண்யா இப்படித்தான் இருப்பாள்.

“புக்ஸ் எல்லாம் நேத்தே கொண்டு வந்து வச்சுட்டுப் போய்ட்டேன் மேடம். நீங்க பாத்துக் கையெழுத்துப் போட்டுட்டீங்கன்னா முடிஞ்சிரும்” என்று அக்கவுன்ட்டன்ட் ஆரம்பித்தார்.

*“அதென்ன, அஞ்சு நிமிஷ வேல. கவர் கொண்டு வந்திருக்கிங்கல்ல?”*

*‘கவர்’ என்றதும் கலவரமானார் அக்கவுன்ட்டன்ட். “ஒரு நிமிஷம் மேடம். இதோ வந்துடறோம்” என்று ஆனந்தை இழுத்து கொண்டு அறைக்கு வெளியே வந்தார்.*

*“தப்புப் பண்ணிட்டேன் தம்பி. கவர் எடுத்தேன். காஷ் எடுக்க மறந்துட்டேன். ஒங்கட்ட பணம் இருக்குமா தம்பி?”*

*“எதுக்கு ரஹீம் சார்?”*

*“கப்பங்கட்டத்தான், இந்த பொம்பளக்கி ரெண்டாயிரம் ரூவா கவர்ல வச்சுக் குடுக்கணும். அப்பத்தான் சனியன் கையெழுத்துப் போடும்.”*

*“லஞ்சமா?”*

*“அப்படித்தான் வச்சுக்குங்க. ஒங்கட்ட காஷ் இருக்கா தம்பி?”*

*“நாமதான் நேர்மையான பிஸினஸ் பண்றோமே ரஹீம் சார், பின்னே எதுக்கு லஞ்சம் குடுக்கணும்?”*

*“அதனாலதான் ரெண்டோட போகுது. கோல்மால் பிஸினஸாயிருந்தா பத்து பதினஞ்சுன்னு கறந்துருவாங்க. இது வருஷா வருஷம் அஸஸ்மென்ட் டைம்ல கட்ற மாமூல் தம்பி. கேள்வி கேக்கவே முடியாது. இந்த மாதிரி ஜென்மங்களைப் பாக்க ஒங்க அப்பாவுக்குப் புடிக்கவே புடிக்காது. அதான் அவர் இங்கேயெல்லாம் வர்றதில்ல. சரி அதிருக்கட்டும், ஒங்கட்டக் காஷ் இருக்கா இல்லியா?”*

*“சட்டுப்புட்டுன்னு இந்த லஞ்ச லாவண்யாவுக்கு அழுதுட்டுக் கௌம்புவோம்.”*

*லஞ்ச லாவண்யா! இவனுடைய லாவண்யாவின் அம்மா. வருங்கால மாமியார்.*

*ஆனந்த் ஜடமாகிப் போனான். எந்திரம் மாதிரி பான்ட் பாக்கெட்டில் கையை விட்டு வாலட்டை எடுத்து அக்கவுன்ட்டன்டிடம் நீட்டினான்.*

*அவர், பிரித்துப் பார்த்துவிட்டு, “ஆயிரம் ரூவா இருக்கு எடுத்துக்கவா” என்றார்.*

*இவன் தலையாட்டினான்.*

*அக்கவுன்ட்டன்ட்டுக்கு திருப்தியில்லை. “ரெண்டாயிரம் தரணும். ஷைத்தான் என்ன சொல்லப் போகுதோ. ட்ரை பண்ணிப் பாப்பம் உள்ள வாங்க தம்பி.”*

*உள்ளே போய் உட்கார்ந்தார்கள்.*

எதிரேயிருந்த தாய்க்குலத்தை ஆனந்த் ஆத்திரத்தோடு பார்த்தான். "முப்பது வருஷங் கழித்து கடவுளே என்னுடைய லாவண்யா இவளைப் போல இருக்கக் கூடாது. இருக்கவே கூடாது."

தயங்கித் தயங்கி அக்கவுன்ட்டன்ட் சுவரை நீட்டினார்.

"எவ்வளவு சார் இருக்கு?"

"தவ்ஸண்ட் இருக்கு மேடம்."

"ஏன் சார், நீங்க என்ன மொதல் தடவையா வர்றீங்க? ரேட் தெரியாதா ஒங்களுக்கு?"

"பாலன்ஸ் நாளக்கிக் கொண்டு வந்து தர்றேன் மேடம்."

"அப்ப புக்ஸ் எல்லாம் இங்க இருக்கட்டும். நாளக்கி பாலன்ஸ் கொண்டு வந்து குடுத்துட்டு எடுத்துட்டுப் போங்க."

ஆனந்தைக் கூட்டிக் கொண்டு அக்கவுன்ட்டன்ட் வெளியேறினார்.

ஆஃபீஸில் அப்பாவின் முன்னால் போய்த் தொப்பென்று உட்கார்ந்தான். நடந்த விஷயங்களை அக்கவுன்ட்டன்ட் சொல்லி விட்டுப் போனார். அவர் போன பின்னால் அப்பா இவனிடம் பேச்சுக் கொடுத்தார்.

"என்ன ராஜா, மாமியாரப் பாத்தியா?"

ஆனந்த் ஒன்றும் பேசாமலிருந்தான். அப்பாவே தொடர்ந்து பேசினார்.

"ஆனந்த், பழைய சினிமாப் பாட்டு ஒண்ணு எனக்கு ஞாபகத்துக்கு வருது. சிவாஜி நடிச்ச தெய்வப்பிறவி படம். கட்டடத்துக்கு மனைப்பொருத்தம் அவசியம்ங்கற அந்தப் பாட்டுல ஒரு வரி வருது பார், மட்டச்சுத்தம் பாத்து வீட்டக் கட்ட வேணும். மாமியாளப் பாத்துப் பொண்ணக் கட்ட வேணும்னு அருமையான வரி அது. மாமியாள நீ பாத்துட்ட. இனி என்ன செய்யப் போற?"

ஆனந்த் மெல்ல வாயைத் திறந்தான். "லாவண்யா அவங்க அம்மாவப் போல இல்ல டாடி."

"ஒனக்கு அப்படித்தான் ராஜா தெரியும். தாயப்போல பிள்ள நூலப் போல சேலன்னு சொல்லிவச்சிட்டுப் போயிருக்காங்க. யோசிச்சிக்க."

அப்பாவின் முன்னே என்ன நியாயத்தை எடுத்து வைப்பது என்று தெரியாமல் ஆனந்த் தலை கவிழ்ந்து உட்கார்ந்திருந்தான்.

அப்பா தொடர்ந்து பேசினார்.

"ஆனந்த், ஊழல், லஞ்சம் எல்லாம் இந்தக் காலத்துல சர்வ சாதாரணம் தான். ஆனா அத ஒரு பொம்பள செய்யற போது நம்மால தாங்கிக்க முடியலப்பா.

ரொம்ப விகாரமாத் தெரியுது. இன்னுஞ் சொல்லப் போனா, கற்பு மாதிரியான சமாச்சாரம் இது. கற்புங்கறது இரு பாலருக்கும் பொதுன்னு ஏட்டுல எழுதி வச்சிருக்காங்களே யொழிய நடைமுறைல அப்படியில்ல. ஆண் கெட்டுப் போனா சம்பவம், பெண் கெட்டுப் போனா சரித்திரம்ங்கறதுதான் நடைமுறை. லஞ்ச ஊழலும் அப்படித்தான். இந்த வகயில லாவண்யாவோட அம்மா சரித்திரம் படச்சிட்டிருக்கா. பொம்பளைங்க எல்லாம் லஞ்சம் வாங்குவாங்கன்னு நா நம்பவேயில்ல, இந்த அம்மாவப் பாக்கறவரக்யும். லாவண்யாவோட அம்மா ரேட் பேசற ஜாதிடா ராஜா. இந்தக் குடும்பத்துல பெண் எடுத்தா நமக்கு ஸூட் ஆகுமான்னு பார். ரஹீம் சார் உர்துல சரியாச் சொல்லுவார். ஹராம் கா பைசான்னு. ஒன்ன டிஸ்க்கரேஜ் பண்றேன்னு நெனைக்யாத. நா மஹாத்மா காந்திய பூஜிக்கிறவன்னு ஒனக்குத் தெரியும். அப்புறம் உன் இஷ்டம்."

அன்றைக்கு ராத்திரி ஆனந்துக்குத் தூக்கம் பிடிக்கவில்லை.

அடுத்த நாள், வணிக வரி வளாகத்துக்குப் போகப் பிடிக்கவில்லையானாலும், அக்கவுன்ட்டன்ட் தனியாய்ப் போனால் பஸ்ஸில் அவதிப்படுவாரே, அவரைக் காரில் கூட்டிக் கொண்டு போய், திரும்ப ஒருமுறை புண்ணியங் கட்டிக் கொள்ளலாமே என்று அவரோடு போனான்.

அழைப்பு வருவதற்காக அறைக்கு வெளியே அக்கவுன்ட்டன்ட்டோடு காத்திருந்த போது கொஞ்சமும் எதிர்பாராமல் அங்கே ப்ரசன்னமானாள் லாவண்யா.

"ஹாய் ஆனந்த் நீ எங்க இங்க?"

அவளைப் பார்க்கிற போது வழக்கமாய மனசில் வீசுகிற தென்றல் இன்றைக்கு வீசவில்லை. ஒப்புக்கு, அவளுடைய கேள்வியையே இவன் திருப்பிக் கேட்டான்.

"நீ எங்க இங்க?"

"எங்கம்மாவப் பாக்க வந்தேன். அம்மாவுக்கு லஞ்ச் கொண்டு வந்திருக்கேன். ஆமா, நீ?"

"நானும் ஒங்கம்மாவப் பாக்கத்தான் வந்தேன். நீ லஞ்ச் குடுக்க வந்திருக்க, நா லஞ்சங் குடுக்க வந்திருக்கேன்."

லாவண்யா ஆடிப் போனாள். எட்டி அவனுடைய கையை இறுகப் பற்றிக் கொண்டாள். கை நடுங்கியது, குரலும். "ஆனந்த்! என்ன சொல்ற நீ?"

"எல்லாம் சொல்றேன், எங்கூட வா" என்று ஆனந்த், அக்கவுன்ட்டன்ட்டிடம் சொல்லிக் கொண்டு, லாவண்யாவோடு வளாகத்தை விட்டு வெளியே வந்தான்.

காரில் உட்கார்ந்து அவளிடம் எல்லாவற்றையும் விவரமாய்ச் சொன்னான். பேயறைந்த முகத்தோடு கேட்டுக் கொண்டிருந்தாள் லாவண்யா. பிறகு, ரெண்டு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டு பொங்கிப் பொங்கி அழுதாள்.

அழுகைக்கு நடுவே சில வாக்கியங்கள் வெளிவந்தன. கண்ணீரில் தோய்ந்து.

“எங்கம்மா நாங் கேட்டு எதுவும் இல்லன்னு சொன்னதில்ல ஆனந்த். எதக் கேட்டாலும் மறுக்காம ஒடனே வாங்கிக் குடுப்பாங்க. புது டிரஸ், வாட்ச், கம்ப்யூட்டர், ஸ்கூட்டர்.... இப்பத்தான் புரியுது ஆனந்த். எல்லாமே லஞ்சப்பணம்.

பாட்டால ஒரு புது மாடல் செருப்புப் பாத்தேன். காஸ்ட்லி செருப்பு. ஆயிரம் ரூபா. அம்மாட்ட சொன்னேன். நேத்து ஆஃபீஸ்லந்து வரும்போது வாங்கிட்டு வந்துட்டாங்க. இப்ப தெரியுது. ஒங்கட்டயிருந்து புடுங்கின லஞ்சத்துல தான் எனக்கு இந்தச் செருப்பு வாங்கியிருக்காங்க. செருப்பு இல்ல இது, நெருப்பு!”

இந்த இடத்தில் லாவண்யா நிறுத்தினாள். பிறகு மெல்ல “நெருப்பு நெருப்பு” என்று ஆரம்பித்தவள், “நெருப்பு நெருப்பு நெருப்பு” என்று வால்யூமைக் கூட்டிக் கொண்டே போனாள்.

ஆனந்த் அவளைப் புதிராய்ப் பார்த்துக் கொண்டிருக்க, லாவண்யா காரிலிருந்து இறங்கி, வணிகவரி வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவளுடைய ஸ்கூட்டரைக் கிளப்பி, அதில் ஏறிக் கொண்டு பறந்தாள்.

ஆனந்த் அடித்துப் பிடித்துக் கொண்டு காரில் அவளைப் பின் தொடர்ந்தான்.

லாவண்யா தன்னுடைய வீட்டையடைந்து பூட்டைத் திறந்தாள். உள்ளே ஓடிப்போய் நெருப்புப் பெட்டியை எடுத்து வந்து, ஸ்கூட்டரின் பெட்ரோல் டாங்க்கைத் திறந்து அதற்குள்ளேயே நெருப்புக் குச்சியைக் கிழித்துப் போட்டாள். குபுக் கென்று நெருப்புப் பற்றிக் கொண்டு ஜெகஜ்ஜோதியாய்க் கொழுந்து விட்டு எரிந்தது.

திரும்பவும் உள்ளே ஓடினாள். தன்னுடைய விதவிதமான ஆடைகளையெல்லாம் அள்ளிக்கொண்டு வந்து அந்த நெருப்பில் போட்டாள். கம்ப்யூட்டரை சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு வந்து டமாலென்று போட்டாள். கைக்கடிகாரத்தைக் கழட்டிப் போட்டாள். ஆயிர ரூபாய்ச் செருப்பையும் நெருப்பில் எறிந்தாள்.

லஞ்ச சமாச்சாரங்களெல்லாம் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தன.

லாவண்யா, வீட்டைப் பூட்டி, சாவியை அந்த நெருப்புக்குள்ளே வீசினாள்.

உடுத்தியிருந்த உடையோடும் வெறுங்காலோடும் வந்து காரை சமீபித்து ஆனந்தை ஏறெடுத்துப் பார்த்தாள்.

ஆனந்த், அவளுக்குக் கார்க் கதவைத் திறந்து விட்டான், புன்னகையோடும் பெருமிதத்தோடும்.

நன்றி : க்ருஹஷோபா, அக்டோபர் 2003

(சுட்டும் விழிச்சுடராய்)

# அன்புள்ள அக்கா

*ஆறு ஐம்பதுக்கு வந்து சேரவேண்டிய நெல்லை எக்ஸ்ப்ரஸ் வழக்கம் போல ஏழு ஐம்பதுக்கு சாவகாசமாய் எழும்பூர் ஸ்டேஷனுக்குள் நுழைந்தது.*

*ரயிலை விட்டுக் கீழே இறங்கி, ரெண்டு பக்கமும் பார்த்தான்.*

*கூட்டம் கரைந்து கொண்டிருந்தது. அக்காவையோ அத்தானையோ காணோம். காலையில் ஆஃபீஸுக்கு போக வேண்டியவர் அத்தான். ஸ்டேஷனுக்கு வந்திருப்பார். ரயில் ஒரு மணி நேரம் லேட் என்றறிந்ததும் வேறே வழியில்லாமல் கிளம்பிப் போயிருப்பார். அது சரி, இப்போ இவன் அண்ணா நகருக்குப் போய்ச் சேர்வது எப்படி? எந்த பஸ், எங்கே ஏற வேண்டும், எங்கே இறங்க வேண்டும் என்கிற விவரங்களெல்லாம் தெரியாது. தெரிந்தாலும், அம்மா சுட்டுக் கொடுத்த முறுக்கு டின்னின் கனத்தைத் தூக்கிக் கொண்டு பஸ் நெரிசலில் ஏறி இறங்குவதென்ப தெல்லாம் இயலாத காரியம். மெட்ராஸ் பஸ் கண்டக்டர்களின் விருந்தோம்பலையும் கனிவையும் அக்கா சொல்லிக் கேட்டிருக்கிறான்.*

*ஆட்டோவில் அக்கா வீட்டு வாசலில் பந்தாவாய்ப் போய் இறங்கலாம் என்றால், அண்ணா நகருக்கு எவ்வளவு கேட்பான் என்று தெரியவில்லை. ஆட்டோக்காரர்களும் ஏமாற்றுவார்கள் என்று அக்கா சொல்லியிருக்கிறாள்.*

*கவனம். ஒரு திருநெல்வேலிப் பையன் மெட்ராஸில் வந்து ஏமாந்தான் என்கிற பழிச் சொல் நெல்லைச் சீமைக்கு வந்து விடக்கூடாது.*

*தன்னுடைய பெட்டியை ஒரு கையிலும் முறுக்கு டின்னை மறு கையிலும் சுமந்து கொண்டு, ஸ்டேஷனை விட்டு வெளியே வந்து, ரொம்ப புத்திசாலித்தனமாய், மீட்டர் திருத்தப்பட்டது என்று எழுதியிருந்த ஆட்டோ ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஏறிக் கொண்டு அண்ணா நகர் போங்க என்றான்.*

*"எழும்பூர் சிக்னல் வரைக்கும் ஆட்டோவில் மீட்டர் போடப்படாததையுணர்ந்து, மீட்டர் போடலியா?" என்றான்.*

*"மீட்டர் வேல செய்யல சார்" என்றொரு அலட்சியமான பதில் வந்தது.*

*"மீட்டர் திருத்தப்பட்டதுன்னு எழுதியிருக்கீங்க?"*

*"நாம திருத்தலாம் சார், அது திருந்தணும்ல?"*

*சிரிப்போடு கலந்து வந்தது டிரைவரின் பதில்.*

அவருடைய சாதுர்யமான பதிலை ரசிப்பதா அல்லது, தான் ஏமாந்து விட்டதை நினைத்துக் குமுறுவதா என்று இவனுக்குத் தெளிவாகவில்லை.

"மீட்டர் போட்டா நாப்பது ரூபா ஆகும். ஒரு பத்து ரூபா போட்டு அம்பதாக் குடுங்க."

பல்லைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அண்ணா நகரில் அட்ரஸைக் கண்டு பிடித்து வாசலில் இறங்கிக் கொண்டபோது, அத்தான் ஸ்கூட்டரை உதைத்துக் கொண்டிருந்தார்.

இவனைப் பார்த்ததும், உதைப்பதை நிறுத்திவிட்டுப் புன்னகைத்தார்.

"ரொம்பக் கஷ்டப்பட்டியா டேய்? காலைல எக்மோர்க்கு வரத்தான் கெளம்பினேன். ஒங்கக்காத்தான் வேண்டான்ட்டா. எந்தம்பி திருநவேலிச் சண்டியராக்கும், அவன் கண்டு பிடிச்சி வந்துருவான், நீங்க போக வேண்டாண்ட்டா."

ஆட்டோ டிரைவரை அத்தானுடைய கஸ்ட்டடியில் விட்டு விட்டு, பெட்டியையும் முறுக்கு டின்னையும் சுமந்து கொண்டு இவன் உள்ளே பிரவேசித்த போது அரவங்கேட்டு அக்கா வெளியே வந்தாள்.

அவளுடைய முகம் நிறைந்த சிரிப்பைப் பார்த்தபோது இவனுக்குப் பொத்துக்கொண்டு வந்தது.

முறுக்குட் டின்னையும் பெட்டியையும் பொத்தென்று கீழே வைத்தான்.

"அத்தான் ஸ்டேஷனுக்கு வர்றேன்னாராம், நீ வேண்டான்ட்டியாமே?"

"ஹேய், ரிலாக்ஸ் யங் மேன், கொஞ்ச நாள்ல எஞ்சினிராகப் போற (எதுகையக் கவனிச்சியா?) இன்னும் நீ டிபன்டன்ட் டாவா இருக்கறது? நீயாவே எப்படியாவது வந்து சேந்துருவங்கற நம்பிக்கையில தான் அத்தான அனுப்பல. கோபமா?"

தன்னுடைய ரெண்டு கைகளாலும், தன்னைவிட வளர்ந்திருந்த தம்பியின் தலைமுடியை எட்டிச் செல்லமாய்ச் சிலுப்பி விட்டாள்.

இவனோ, இன்னமும் முறுக்கிக் கொண்டுதான் நின்றான்.

"இந்த முறுக்கையெல்லாம் எக்மோர்லயே வித்துப்புட்டு அடுத்த ட்ரெய்ன் ஏறி ஊர் போய்ச் சேர்ந்துர லாமான்னு யோசிச்சேன். ஒம்மேல எரக்கப்பட்டுத்தான் முறுக்கோட வந்து சேந்தேன்."

"இளமை முறுக்குடா ஒனக்கு" என்று தம்பிக்கு அக்கா நற்சாட்சிப் பத்திரம் வழங்கிய போது, வாசலில் அத்தானின் குரல் கேட்டது.

"அறுக்கறீங்க அக்காவுந் தம்பியும். நா தப்பிச்சிக்கறேன். நா ஆஃபீஸ் போய்ட்டு சாயங்காலமா வாறேன் டேய், எத்தன மணிக்கி இன்ட்டர்வ்யூ?"

"மத்யானம் மூணு மணிக்கி அத்தான்."

"சரியான சம்மர்ல மெட்ராஸ்க்கு வந்து சேர்ந்துருக்க. ஆல் த பெஸ்ட். நா வாறேன்."

அத்தான் போன பின்னால், டிஃபன் சாப்பிட்டுவிட்டு, அக்காளும் தம்பியும் ஊர்க் கதைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

அப்புறம், இந்த இன்ட்டர்வ்யூவைப் பற்றிப் பேச்சு திரும்பியது.

"இன்னும் ரிஸல்ட்டே வரல, அதுக்குள்ள என்னடா இன்ட்டர்வ்யூ" என்றாள் அக்கா.

"இது நல்ல கம்பெனிக்கா. விட்டா கெடக்யாது என்றான் இவன்."

"இருக்கட்டுமே, படிச்சி முடிச்சிட்டு ஒரு வருஷமோ ரெண்டு வருஷமோ வாழ்க்கைய அனுபவிக்காம இது என்னடா காலேஜ விட்டு வெளிய வர்றதுக்கு முன்னாடியே வேல? நெல்லு வித்த காசு அப்பா மூட்ட மூட்டாயாக் கட்டிப் பரண்மேல போட்டு வச்சிருக்காகல்ல? அதுல ஒரு மூட்டயத் தூக்கிக்கிட்டு ஒரு ஆல் இண்டியா டூர் போய்ட்டு வரலாம்ல நீ?"

"நீ ஒண்ணுக்கா, இந்த முறுக்கு டின்னத் தூக்கியே கையொடிஞ்சிப் போச்சு!"

"பேச மட்டும் கத்துக்கிட்ட. இந்த மெட்ராஸ்ல தண்டையார்ப் பேட்டையிலயோ திருவான்மியூர்லயோ போய் விட்டா அங்கேயிருந்து தனியா அண்ணா நகர்க்கு வந்துசேர ஒனக்குத் தெரியுமா? எக்மோர்லயிருந்து வந்து சேரவே மூணு கிலோ மெலிஞ்சு போய்ட்ட!"

"சும்மா நக்கல் பண்ணாதக்கா, செய்துங்கநல்லூர்ல யிருந்து திருநவேலிக்கி வந்து, திருநவேலியிலருந்து தன்னந்தனியா மெட்ராஸ்க்கு வந்திருக்கேன், திருவான்மி யூர்லருந்து வரமாட்டேனாக்கும்?"

"அதெல்லாம் கத. நீங்க செய்துங்கநல்லூர்க் காரங்களுக்கெல்லாம் திருநவேலிதான் பட்டணம். உண்மையான பட்டணம் ஒங்களுக்கெல்லாம் தெரியவே தெரியாது."

"நீ என்னமோ மெட்ராஸ்லயே பொறந்து வளந்தவ மாதிரி தான்."

"இல்லாமலிருக்கலாம். ஆனா நா மூணு வருஷமா இங்க ஸெட்டில் ஆய்ட்டேன். இப்ப நா ஒரு கம்ப்ளீட் மதராஸி. நீயும் ஒரு ரெண்டு மாசம் மூணு மாசம் மெட்ராஸ்ல தங்கு. ஊரெல்லாம் ஜோரா சுத்திப் பார். மதராஸியா மாறு. அப்புறம்…"

*"அப்புறம்?"*

*"வடக்கக் கெளம்பு. பாம்பே, டெல்லி, ஆக்ரா, கல்கத்தா, ஜெய்ப்பூர் எல்லாம் சுத்திப் பார். தாஜ்மஹால் பாத்திருக்கியா நீ? தாஜ்மஹால் பாக்காதவன் ஒரு இந்தியனா?"*

*"தாஜ்மஹால் பாக்காதவன் இந்தியன் இல்லதான். எனக்கு அவமானமாத்தான் இருக்கு. போதுமா? இப்ப ஆள வுடு. நா குளிச்சிட்டு, இன்ட்டர்வ்யூக்கு ப்ரிப்பேர் பண்ணனும்."*

*அக்கா வாயடைத்துப் போனாள்.*

*சில நிமிஷங்கள் கழித்து வாயைத் திறந்தாள்.*

*"என் ஆருயிர்த் தம்பியே?"*

*"ம்?"*

*"நீ இன்ட்டர்வ்யூக்கு ப்ரிப்பேர் பண்றதப் பத்தியோ இன்ட்டர்வ்யூ அட்டெண்ட் பண்றதப் பத்தியோ எனக்கு ஆட்சேபனையில்ல. ஆனா, குளிச்சிட்டுன்னு ஒரு கொக்கி போடறியே. இந்த சம்மர்ல, இந்த மெட்ராஸ்ல, இந்தத் தண்ணியில்லாத காட்டுல நீ எங்க போய்க் குளிக்கப் போற?"*

*"ஐயையோ, பாத்ரூம்ல தண்ணி இல்லியா அக்கா?"*

*"ஒடனே பயந்துராத. பாத்ரூம்ல உப்புத் தண்ணி புடிச்சி வச்சிர்க்கேன். அதுல குளிக்க முடியாது. அஞ்சு மணிக்கித்தான் டாங்க்கர் வரும். நீ என்ன செய்ற, வெளி வெராண்டல இருக்கற பைப்புக்குக் கீழ ஒரு பக்கெட்ட வை. அதுல சொட்டுச் சொட்டாத் தண்ணி விழுந்து, ஒரு மணிபோல முக்கால் பக்கெட் நெறஞ்சுரும். மூணு மணிக்கித்தான இன்ட்டர்வ்யூ, நீ குளிச்சிட்டுக் கெளம்ப சரியாயிருக்கும்."*

*"அடக் கஷ்டகாலமே, இப்படித் தெரிஞ்சிருந்தா நா ஊர்லயே குளிச்சிட்டுக் கௌம்பியிருப்பேனே."*

*அக்காவின் காது பட முணுமுணுத்தவாறே குழாயடியில் ஒரு பக்கெட்டை வைத்துவிட்டு இவன் பெட்ரூமுக்குள் புகுந்து கொண்டான்.*

*ஆடைகளைக் களைந்து, லுங்கி கட்டிக் கொண்டு கையில் ஒரு புஸ்தகத்தோடு ஜன்னலை ஒட்டியிருந்த கட்டிலில் சரிந்தான்.*

*கையில் காஃபிக் குவளையோடு அக்கா அந்த அறைக்குள் நுழைந்தபோது, இவன் ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.*

*"படிக்கப் போறேன்னு பராக்குப் பாத்துட்டிருக்க?" என்று சீண்டினாள் அக்கா.*

*"அப்படிச் சொல்லு. ப்ளேன் பாக்கறியாக்கும்? இந்த ஏரோ ப்ளேன் பாக்கற புத்தி போகவே போகாதே ஒங்களுக்கு!"*

*ஏரோப்ளேன் பாக்கற புத்தி என்று அக்கா குத்திக் காட்டியது இந்த எதிர்கால இஞ்சினியரின் தன்மானத்தைத் தொட்டது.*

*முகத்தை இறுக்கிக் கொண்டு புஸ்தகத்தால் மூடிக் கொண்டான்.*

*அக்கா வந்து புஸ்தகத்தை விலக்கினாள், சிரித்தவாறு.*

*"அடேயப்பா, ரோஷத்தப் பார். வெளயாட்டுக்குச் சொன்னேண்டா. சுருக்னு கோச்சுக்கிறியே. நீ மட்டுந்தானா ப்ளேன் பாக்கற, ஒங்க அத்தான் பாக்கலியா! அவர் இதப் பத்தி ஒரு கவிதை கூட எழுதி ஒரு பத்திரிகைக்கி அனுப்பிச்சார். ப்ளேன் வேகத்துல அது திரும்பி வந்துருச்சு. ஆனா எனக்குப் புடிச்சிருந்தது. கொண்டு வந்து காட்டறேன் பார்."*

*கவிதையைத் தேடி எடுத்து வந்து அக்கா இவன் கையில் கொடுத்தாள்.*

*பதினஞ்சு வருஷமாச்சு*
*நெல்லையிலிருந்து குடிபெயர்ந்து*
*சென்னையிலே காலூன்றி*
*வேக வாழ்க்கை ஏக வசனங்கள்*
*எல்லாம் பழகிப் போச்சு*
*மவுன்ட் ரோடு மயக்கம் தெளிஞ்சாச்சு*
*பாரிமுனை நெரிசலும் பாண்டிபஜார் அவசரமும்*
*மரத்துப் போய் நாளாச்சு*
*பட்டணத்துப் பிரமிப்பெல்லாம் அடங்கிப் போய்*
*மதராஸியாய் நானும் மறுபிறவி யெடுத்து*
*வருஷம் பல ஓடிப் போச்சு.*
*ஆனாலும்*
*ஆகாயத்திலொரு அரவங் கேட்கிற போது*
*அண்ணாந்து ஏரோப்ளேன் பார்க்கிற*
*புராதனப் பழக்கத்தை மட்டும்*
*மறக்க இயலவில்லை இன்னும்*

*"ஹை, அத்தான் நல்லாத்தான் எழுதியிருக்கார்" என்று மெச்சினான் இவன்.*

*"அதனால தம்பி, ப்ளேன் பாக்கறது வெக்கப்பட வேண்டிய விஷயமில்ல. வானத்துல சத்தங்கேக்கற போது அண்ணாந்து பாக்கத்தான் தோணும். அதுதான் இயற்கை. இந்த மெட்ராஸ் மனுஷங்க, மெஷின் மனுஷங்க. அனாவசியமான கட்டுப்பாட்டோட போலி வாழ்க்கை வாழ்ந்துட்டிருக்காங்க. ப்ளேன் பறக்கறதப் பாக்கறது ஒரு அழகு. பறவைகள் பறக்கறது ஒரு அழகு. அதையெல்லாம் ரசிக்க நாம பக்குவப்படணும்டா. சலீம் அலி கேள்விப்பட்டிருக்கியா? பறவைகளுக்காகவே வாழ்க்கைய அர்ப்பணிச்சவர். மனிதன் இல்லாமப் பறவை வாழலாம். ஆனா பறவைகள் இல்லாம மனிதன் வாழ முடியாதுன்னு சொன்னவர். நம்ம பாரதியார் சொல்லலியா, காக்கைக் குருவி எங்கள் ஜாதின்னு? இப்ப கூட பாண்டிச்சேரில சிவகணபதின்னு ஒரு பறவைப் பிரியர் இருக்கார்னு பத்திரிகைல வந்ததே பாத்தியா?"*

*"பாக்கல."*

*"பாக்காட்டி பரவாயில்ல. நா என்ன சொல்றேன்னாடா, வாழ்க்கையில பாக்கறதுக்கு, ரசிக்கிறதுக்கு எவ்வளவோ இருக்கு. அதுக்கெல்லாம் இதுதாண்டா டைம். நீ இன்ட்டர்வ்யூக்குப் போவ, அப்புறம் வேலக்கிப் போயிருவ. பணம் சம்பாதிக்கிறதுலயே குறியா இருப்ப. அப்பறம் சௌதிக்கோ, ஸ்டேட்ஸ்க்கோ போகணும்னு ஆசப்படுவ. ஒனக்குக் கல்யாணம் பண்ணி வப்பாங்க. கொழந்த பெத்துக்குவ. அதுகளுக்குப் போய் பால் டின் வாங்கணும், அப்புறம் ஸ்கூல்ல போடணும்... இப்படியே காலம் ஓடிரும். ஒரு அருமையான வசந்த காலத்த நெரந்தமா இழந்துருவ."*

*"இப்ப என்னக்கா சொல்ற, இந்த இன்ட்டர்வ்யூ அட்டண்ட் பண்ண வேணாங்கறியா?"*

*"அப்படித்தான் வச்சிக்கோயேன், நீ ஃபஸ்ட் க்ளாஸ்ல பாஸ் பண்ணப் போற. ராங்க் வாங்கினாலும் வாங்குவ. ஒன்னத் தேடி எத்தனையோ இன்ட்டர்வ்யூ வரும். ஆனா இந்த வசந்தகாலம் வருமா?"*

*"சரி, ஆள வுடு, நா குளிக்கல, இன்ட்டர்வ்யூக்குப் போகல. போதுமா?"*

*"அட மண்டு, ஒன்னக் குளிக்க வேண்டாம்னா சொன்னேன்? குளி. பக்கெட் நெறஞ்சிருக்கும் பார். குளிச்சிட்டுக் கெளம்பு."*

*வெளி வராண்டாவில் பக்கெட் நிரம்பியிருக்கிறதா என்று பார்த்தான். முக்காலுக்கும் கொஞ்சம் அதிகமாகவே நிரம்பியிருந்தது.*

*பாத்ரூமுக்குள்ளே டவல், சோப் எல்லாம் செட்அப் செய்து விட்டு பக்கெட்டை எடுக்க வெளியே வந்தவன், சடன் பிரேக் போட்டு நின்றான்.*

*பக்கெட்டின் விளிம்பில் கால் பதித்து ஒரு காகம் தண்ணீர் அருந்திக் கொண்டிருந்தது.*

*அதன் தாகம் தணிந்ததும் காகாவென்று கரைந்து தன் இனத்தை அழைத்தது. அதன் அழைப்பை ஏற்று இன்னும் ரெண்டு காகங்கள் வந்து சேர்ந்தன.*

*தண்ணீர் பருகிவிட்டு அவையும் கரைய, இன்னும் சில காகங்கள் வந்து தாகந்தணித்தன.*

*காக்கைக் கரவாக் கரைந்துண்ணும் மட்டுமல்ல, காக்கைக் கரவாக் கரைந்து பருகும் கூட.*

*ஓசைப்படாமல் ஒரு ஸ்டூலை எடுத்து வாசலில் போட்டுக் கொண்டு, அந்த காகங்கள் கலைந்து விடாத தொலைவில் உட்கார்ந்து கொண்டான்.*

*உட்கார்ந்து கொண்டு அந்தக் கருப்புப் பறவைகள் பருகுகிற அழகைப் பார்த்து கொண்டிருந்தான். இவனுடைய உடலைக் கழுவ சேகரிக்கப்பட்ட தண்ணீருக்கு,*

*சில ஜீவராசிகளின் கோடைத் தாகத்தைத் தணிக்க விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்கிறபோது சின்னதாய் ஒரு சந்தோஷம்.*

*"என்ன தம்பி, குளிக்கலியா, இன்ட்டர்வ்யூக்குக் கௌம்பலியா" என்று பின்னாலிருந்து அக்காவின் குரல் கேட்டது.*

*அக்காவை அண்ணாந்து பார்த்து, உதட்டில் விரல் வைத்தான்.*

*"ஸ்ஸ்... மெதுவாப் பேசு அக்கா. அது கலஞ்சிரும் இந்த வேகாத வெயில்ல ஒவ்வொண்ணுக்கும் எவ்ளோ தாகம் பார்!"*

*அக்கா மெல்ல குனிந்தாள். தம்பியை நோக்கித் தணிந்த குரலில் கிசுகிசுத்தாள்.*

*"குளிக்கலியா?"*

*"இல்ல."*

*"இன்ட்டர்வ்யூக்குப் போகலியா?"*

*"இல்ல."*

*சிரித்தபடி அக்கா, தம்பியின் தலைமுடியைத் தன் ரெண்டு கைகளாலும் சிலுப்பி விட்டாள்.*

*மிகச் செல்லமாய்.*

*இந்த முறை சிரமப்படாமல், ரொம்ப சுதந்திரமாய்...*

*(கல்கி, 24.08.2003)*

# இது வேறுலகம் தனியுலகம்

*"வேணி, காலைல வாசல் தெளிக்க எந்திரிக்கிறப்ப என்னயும் எழுப்பி விடறியா?"*

*பரிமாறிக் கொண்டிருந்த வேணி, தம்பியை ஆச்சர்யமாய்ப் பார்த்தாள். குறும்பாயும். "உத்தரவுங்க மஹாராஜா. சமூகத்துல நாளக்கி என்ன விசேஷமோ?"*

*"இப்ப கிண்டலாத்தானிருக்கும். நாளக்கி இந்நேரத்துக்கு ஐயா காலரத் தூக்கி விட்டுட்டுத்தான் ஒக்காந்திருப்பார். நாளக்கி ஒரு வி.ஐ.ப்பி. கூட லஞ்ச் சாப்புடப் போறேனாக்கும். கோடீஸ்வர வி.ஐ.ப்பி. என்னோட பரம விசிறி. இன்னுங் கொஞ்சம் நெய் விடு. ஓ, ஐ ம் ஸாரி, இது ரசமா! ஒன்னோட நிதானத்தப் பாத்து நெய்யாக்கும்னு நெனச்சிட்டேன்."*

*'கிண்டலப்பாரு' என்று தம்பியின் தலையில் ஒரு ஊமைக் குட்டு வைத்த வேணி, ஒரு பதில்க் கிண்டலில் ஈடுபட்டாள்.*

*"ஏனுங்க கவிஞர் கம் எழுத்தாளரே, சம்மர் வருதே, ஒங்க கோடீஸ்வர விசிறி கிட்ட சொல்லி ரெண்டு ஸீலிங் ஃபேன் வாங்கிக் கூரையில தொங்க விடப் படாதோ."*

*சிரிக்காத வேணி. "இந்தக் கவிஞர் கம் எழுத்தாள ரோட மகிமை வெளியுலகத்துக்குத் தெரிய ஆரம்பிச்சிருச்சு. நீயும் அதை விரைவில் உணர்வாய் மிஸ் வேணி, விரைவில் உணர்வாய்."*

*இவர்களுடைய உரையாடலை அவதானித்துக் கொண்டிருந்த அம்மா, தன் அதிருப்திக்கு சொல் வடிவம் கொடுத்தாள். "என்னடா இது வார்த்தக்கி வார்த்த வேணி வேணின்னுட்டு, ஒன்ன விட மூணு வயசு மூத்தவ, அக்கான்னு அழகாக் கூப்ட்டா என்ன? அவனுக்குத்தான் எட்டல. நீயாவது சொல்லேண்டி"*

*"நீ அலட்டிக்காதம்மா. அக்கா தம்பி ஒறவுக்கு மேலா நாங்க ஃப்ரண்ஸ். அப்படித்தான் பேசிக்குவோம். எனி அப்ஜெக்ஷன் மிஸ் வேணி?"*

*"யூ ஆர் அப்ஸல்யூட்லி ரைட் ஃப்ரண்ட்." வேணி அவனை ஆமோதித்தாள்.*

*அம்மாவுக்குக் கடுப்பாகி விட்டது.*

*"எப்படியாவது போங்க. பேரச் சொல்லித்தான் கூப்புடற, வெறும் வேணின்னு கூப்ட்டா என்ன. மிஸ் வேணி என்ன மிஸ் வேணி? இருவத்தெட்டு ஆரம்பிச்சிருச்சு, இன்னும் மிஸ்ஸாத்தான் இருக்கா. எனக்கு பக்கு பக்குன்னுது, நீங்க கேலியும் கிண்டலுமா இருக்கீங்க."*

*அடுப்பில் பொங்கி வழிகிற பால், ஜ்வாலையாகக் குறைத்ததும் கமுக்கமாய் அமுங்குவதைப்போல, வேணியின் உற்சாகம் தணிந்து போனது. அம்மாவை தீர்க்கமாய்ப் பார்த்தாள்.*

*"தெரியுதும்மா. கல்யாண வயசு பார் ஆயிருச்சு. இன்னும் எங்களுக்கு பாரமா இருக்கியேடீன்னு சொல்றீங்க."*

*மகள் சொன்னதைக் கேட்டு அம்மாவுக்குக் கண்கள் கலங்கி விட்டன.*

*"ஐயையோ, என்னடிம்மா நீ இப்படிப் பேசிட்ட. நாங்க தானம்மா ஒனக்குப் பண்ணி வக்யணும். ஒங்கப்பாவும் அலஞ்சிட்டுத்தான் இருக்கார், நம்ம தகுதிக்கி ஒண்ணும் சரியா அமைய மாட்டேங்குதேம்மா. இன்னிக்கிக் கூட ஆஃபீஸ் விட்டு மாம்பலம் புரோக்கரப் பாத்துட்டு வர்றேன்னுதான் சொல்லிட்டுப் போனார். மணி ஒம்போதாகப் போகுது. எங்க அலஞ்சிட்டிருக்காரோ, எப்ப வர்றாரோ!"*

*வேணி அம்மாவைப் பின்புறமாய்க் கட்டிக் கொண்டு கன்னத்தோடு கன்னம் பொருத்தினாள்.*

*"ஸாரிம்மா, அநியாயத்துக்கு ஒங்க மனச நோகப் பண்ணிட்டேன். எனக்கும் இப்பக் கல்யாணம் பண்ணிக்க இன்ட்ரஸ்ட்டே இல்லம்மா. நீயும் அப்பாவும் என்ன வச்சி காப்பாத்துவீங்கன்னு சொல்லுங்க, காலம் பூரா நா ஒங்களோடயே இருந்துருவேன்."*

*"சீ, என்ன ஒளர்ற. அப்படியெல்லாம் இருக்க விட்ருவோமா என்ன!"*

*"அப்ப, என்ன வச்சுக் காப்பாத்த மாட்டீங்களா?"*

*"அவங்கள வுடு ஃப்ரண்ட், நா ஒன்னக் காலம்பூராக் காப்பாத்தறேன். நீ மட்டும் கட்சி மாறி வரதட்சணக்கிக் கழுத்த நீட்டிராத. பாரதி கண்ட புதுமைப் பெண்ணா இரு."*

*"தங்கள் சித்தம் கவிஞர் கம் எழுத்தாளரே."*

*"சரி, திரும்பவும் ஆரம்பிச்சிட்டீங்களா, டேய் சீக்கிரம் படு. காலைல சீக்கிரம் எழுப்பச் சொன்ன?"*

*"ஃப்ரண்ட் இரு இரு. நீ எழுதின ஆன்ட்டி வரதட்சணைக் கவிதைய அம்மாக்குக் படிச்சிக் காட்டணும். என்ன பத்திரிகை அது?"*

*"காலச்சுவடு."*

*"குமுதம், ஆனந்த விகடன்ல எல்லாம் எழுத மாட்டியா நீ? சரி அத எடுத்துட்டு வாயேன். வரதட்சணை அசிங்கத்தப் பத்தி நறுக் நறுக்னு எழுதியிருக்காம்மா. ரியலி ஸூப்பர்ப்."*

*"ஆமா. அத நறுக்கி சட்டியில போட்டு பொறிக்க வேண்டியது தா."*

*"ஐ, இங்க பாத்தியா ஃப்ரண்ட், எங்கம்மாக்குக் கூட எதுகை மோனையெல்லாம் சரளமா வருது, கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்ங்கற மாதிரி!"*

*"அதெல்லாமில்லடி, இது சகவாச தோஷம்."*

*"அம்மா மூட்ல இருக்காங்க ராஜா, அதக் கொண்டா வாசிப்போம்."*

*"இப்ப ஒண்ணும் நீ வாசிக்க வேண்டாம். அப்பா வர்ற மாதிரியிருக்கு. அவர் எந்த மூட்ல வர்றாரோ. சத்தங்கித்தம் போடாம கம்னு இருங்க."*

*அப்பா வந்தார். சோர்வாக வந்தார்.*

*வீடு நிசப்தமானது.*

*காலையில் ஆறுமணிக்கே வேணி இவனை எழுப்பி விட்டு விட்டாலும், இப்படிப் புரண்டு அப்படிப் புரண்டு, பாதிக்கண்ணைத் திறந்து நோட்டம் பார்த்து, ராத்திரிக் கனவை அசைபோட்டு, சோம்பல் முறித்துப் பள்ளியெழுச்சி நிறைவு பெற ஏழாகி விட்டது.*

*கண்ணாடியில் தாடையைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.*

*'ஷேவிங் இன்றைக்கு டியூ இல்லைதான். ஆனாலும் பண்ணிக் கொள்ளலாம். பரவாயில்லை. விசிறிக்கு தரிசனந்தர ஸ்மார்ட்டாய்ப் போக வேண்டாமா?'*

*முந்தா நாள் துவைத்துத் தொங்கப் போட்டிருந்த சட்டையில் மடிப்புகள் திருப்திகரமாயில்லை.*

*தெருமுனை இஸ்திரி வண்டியில் அயண் பண்ணி வாங்கி வந்தான்.*

*அவ்வப்போது அம்மாவை அனத்தி வாங்குகிற பாக்கெட் மனியில் ரெண்டு ரூபாய் காலி.*

*இந்த உபரிச்செலவைச் சரிக்கட்ட இன்றைக்கு அயனா வரத்திலிருந்து அண்ணா நகருக்குப் பாதயாத்திரை தான் மேற்கொள்ள வேண்டும். வேண்டாம். தூய தமிழிலேயே நடக்கலாம்.*

*வழி நடைப் பயணம்.*

*பான்ட் இதே போதும். இன்றைக்கு அஞ்சாவது நாள்தான்.*

*ஏழே முக்காலுக்கு ஆள் ரெடி.*

*அப்பா டிஃபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.*

*அவர் கிளம்பிப் போன பின்னால் தான் இவன் வீட்டை விட்டு வெளியேற முடியும்.*

காலையிலிருந்து இவனுடைய பரபரப்பை வேவு பார்த்த அப்பா, அவனைக்குறித்து அம்மாவிடம் மெல்லக் கேட்பது, அவரை வேவு பார்த்துக் கொண்டிருந்த இவனுடைய காதில் விழுந்தது.

"தொரை காலங்காத்தால டிப் டாப்பா எங்கக் கௌம்பிட்டாராம், கலெக்டர் வேலக்கி எதாச்சும் இன்ட்டர்வ்யூ வந்திருக்காமா? எந்த இன்ட்டர்வ்யூக்குப் போய்க் கிழிச்சான். கதை எழுதறேன் கவிதை எழுதறேன்னு பீச்லயோ பார்க்லயோ ஒக்காந்து பராக்குப் பாத்துட்டிருப்பான். எழுதறது தான் எழுதறான், காசு குடுக்கற பத்திரிகைக்கி எழுதறானா, எல்லாம் தண்டம்!"

அம்மா அப்பாவை அடக்கினாள்.

"சும்மா சும்மா கரிச்சிக் கொட்டாதீங்க. நீங்க நெனக்கிற மாதிரி இல்லீங்க, ஒரு பெரிய ஆளப் புடிச்சி வச்சிர்க்கான். இவனோட ரசிகராம். அண்ணா நகர்ல பெரீய்ய கடை வச்சிர்க்காராம். இன்னிக்கி மத்யான சாப்பாட்டுக்கு இவனக் கூப்ட்டிர்க்காராம். அதான் கௌம்பிட்டிர்க்கான்."

"அப்ப, ஒரு வேள தண்டச் சோறு மிச்சம்."

'ரெண்டு வேளை' என்று இவன் தனக்குள் சொல்லிக் கொண்டான். காலையில் டிஃபனும் வேண்டாமென்று அம்மாவிடம் நேற்றே சொல்லியாச்சு.

இந்த இட்டிலிகளுக்கு வயிற்றில் இட ஒதுக்கீடு செய்து, மதிய உணவுக்கு மனக்கசப்பு ஏற்படுத்துவானேன்?

அப்பாவின் ஆதங்க வெளிப்பாடுகள் புதுசில்லை இவனுக்கு. இது ஒரு வயசுக்கோளாறு.

நடுத்தர வயசிலிருந்து முதுமையை நோக்கி நகர்கிற ஒரு ரெண்டுங் கெட்டான் பருவத்தில், பெற்ற மகனைக் கரித்துக் கொட்ட ஓர் அரிப்பு எல்லாத் தகப்பன்களுக்கும் ஏற்பட்டாக வேண்டும் என்பது இந்தக் கவிஞன் கம் எழுத்தாளனின் ஆராய்ச்சி முடிவு.

அப்பா ஆஃபீஸுக்கு கிளம்பியதும் அம்மாவிடமும் வேணியிடமும் சொல்லிக்கொண்டு கிளம்பினான்.

அயனாவரம் மேட்டுத் தெருவில் படியிறங்கி, மெட்ரோ வாட்டர் காம்பவுண்டை ஒட்டி நடந்து, புதிய ஆவடிச் சாலையைக் குறுக்கு வெட்டில் கடந்து எட்டிப் பார்த்தால் அண்ணா நகர்.

மிஞ்சி மிஞ்சிப்போனால் முக்கால் மணி நேர நடை.

நடந்தான்.

அவ்வப்போது கர்ச்சீஃபையெடுத்துக் கழுத்தைச் சுற்றி வியர்வையைத் துடைத்தபடி நடந்தான்.

*அந்த ஆர்ப்பாட்டமான டிபார்ட்மென்ட் ஸ்டோரின் முகப்பைப் பார்த்தாலே ஒரு மனச் சிலிர்ப்பு.*

*வறுமைக் கோட்டைப் பற்றிக்கொண்டு ஊசலாடிக் கொண்டிருக்கிற இவனுடைய வர்க்கத்துக்கு மறுக்கப் பட்டிருக்கிற பாணியிலமைந்த பிரமாண்டமான கடை. இதன் உரிமையாளர் சந்தேகமில்லாமல் ஒரு மேல் தட்டுக் கோடீஸ்வரனாயத்தானிருக்க வேண்டும்.*

*ஜோல்னாப்பை அறிவுஜீவிகள் பாஷையில், பூர்ஷ்வா.*

*ஸோ வாட்?*

*இவர் என்னுடைய வாசகர்.*

*ஏதோ ஓர் அம்சத்தில் என்னைவிடத் தாழ்ந்தவர்.*

*ஆரம்பத் தயக்கத்தைத் தலையைத்தட்டி அமுக்கி விட்டுப் படியேறினான்.*

*இவனுடைய வரவுக்காகவே காத்திருந்த மாதிரி முகம் நிறையப் புன்னகையோடு எதிர்த்திசையிலிருந்து வந்தவர், “மிஸ்டர் ராஜா?” என்கிற வரவேற்போடு இவனைக் கை குலுக்கக் கரம் நீட்டினார்.*

*வசீகரம் வஞ்சனையில்லாமல் வியாபித்திருக்கிற முகம். வயது நாற்பதைத் தாண்டியிருக்கலாம். ஆனாலும் முப்பதுகளுக்கான கம்பீரமான இளமை. தொப்பை கிப்பை போடாத கச்சிதமான உடலமைப்பு.*

*ரொமான்ட்டிக் புளூ கலரில் முழுக்கை சட்டை. அதைத் தாங்கிப் பிடிக்கிற மாதிரி அடர்ந்த நீலத்தில் பான்ட். என்ன நிறம் என்று ஊகிக்க சிரமப்படுத்துகிற பளபளக்கும் ஷூ. உடையின் வர்ணத்தோடு இழைக்கிற மாதிரிப் பொருத்த மாய் ஒரு ட்டை. தாராளமாய், ஏராளமாய்த் தலைமுடி. சிகரெட் கறையால் களங்கமடைந்து விடாத உதடுகளின் மேலாய் நேர்த்தியாய்ச் செதுக்கப்பட்ட மீசை. அதற்குக் கீழே ஒரு காந்தப் புன்னகை.*

*கவிஞர் கம் எழுத்தாளனாய் மட்டுமல்லாமல், கவிஞர் கம் எழுத்தாளர் தம் ஓவியராய் இருந்திருந்தால் இந்த உருவத்தை மனசில் இருத்தி, வீட்டுக்குப் போய்த் தூரிகை கொண்டு தீட்டியிருக்கலாம்.*

*தன்னுடைய ப்ரத்யேக அறைக்கு இவனைக் கை பிடித்து வழி நடத்திச் சென்றார்.*

*உள்ளே புகுந்ததும் முகத்தில் பனியடித்தது.*

*இவனுடைய கதைகளிலிருந்து சில விசேஷமான வரிகளை மிகுந்த ஈடுபாட்டோடு இவனோடு பகிர்ந்து கொண்டு இவனைப் புளகாங்கிதப் படுத்தினார்.*

இவனுடைய லேட்டஸ்ட் வரதட்சணைக் கவிதையை வார்த்தை வார்த்தையாய் அலசினார்.

"இந்த அற்புதமான கவிதை மட்டும் ஒரு பதினஞ்சு வருஷம் முந்தி எழுதப்பட்டிருந்தா மிஸ்டர் ராஜா, நா நிச்சயமா வரதட்சணை வாங்காமத்தான் கல்யாணம் பண்ணியிருந்திருப்பேன். ஒங்களுக்கு இருக்கிற முற்போக்கு சிந்தனை, ஒங்க வயசுல அப்ப எனக்கு இல்லாமப் போனதுக்கு நா வெக்கப்படறேன் மிஸ்டர் ராஜா. ஆனா, அதுக்கு ப்ராயச்சித்தம் பண்றதுக்கு சில வருஷங்கள்ள எனக்கு ஒரு சந்தர்ப்பம் வரத்தான் போகுது. எனக்கு ஒரு பொண்ணு, ஒரு பையன். பையனுக்குக் கல்யாண ஏற்பாடு நடக்கறப்ப நிச்சயமா அவனுக்கு வரதட்சணைப் பேரம் பேச மாட்டேன். ஒரு பைசாக் கைமாறாமத்தான் அவன் கல்யாணம் நடக்கும். திஸ் இஸ் ய ப்ராமிஸ்."

உணர்ச்சி கொப்பளிக்க அவர் சொன்னதற்கு ஒரு திருத்தத்தை ராஜா முன்வைத்தான்.

"பாதி ப்ராயச்சித்தம் தான் சார் அது."

"என்ன சொல்றீங்க?"

ஆமா சார். பையனுக்கு வரதட்சணை வாங்கறதில்லன்னு எப்படி உறுதியாயிருக்கீங்களோ, அதே உறுதி, பொண்ணுக்கு வரதட்சணை குடுக்கறதில்லங்கறதிலயும் இருக்கணும். முன்னத விட இதான் கஷ்டமான காரியம். இதயும் நீங்க செஞ்சு காட்டிட்டீங்கன்னா, அதான் முழு ப்ராய்ச்சித்தம். முழு வெற்றி."

மேஜைக்குக் குறுக்காய்க் கைகளை நீட்டி இவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டார் அவர்.

"மிஸ்டர் ராஜா, யூ ரியலி ஆர் ய ஜீனியஸ் ஐ ஸே! இந்த விஷயம் எனக்குத் தோணாமப் போயிருச்சு பாத்தீங்களா! இதான் ஒரு இலக்கியவாதிக்கும் ஒரு வியாபாரிக்குமுள்ள வித்யாசம். என்ன சொல்றீங்க!"

என்ன சொல்லுவான்?

சிரித்தான்.

மனசுக்குள் அப்பா எட்டிப் பார்த்து விட்டுப் போனார்.

இப்படியாகவே மதிய உணவுக்கு வேளை வந்தது.

"வாங்க மிஸ்டர் ராஜா, லஞ்ச்சுக்குப் போகலாம். வீட்ல யாருமில்ல, ஹோட்டேல் தான். எங்க போலாம் சொல்லுங்க."

"ஹோஸ்ட் நீங்க, எங்க கூட்டிக்கிட்டுப் போனாலும் சரிதான்."

செவிவழிச் செய்தியாய் மட்டுமே இவன் அறிந்திருந்த நட்சத்திர ஹோட்டேல் ஒன்றின் பெயரை உச்சரித்து, அங்கே போகலாம் என்றார்.

கிழக்கிந்தியக் கம்பெனி சிப்பாய் மாதிரியான தோற்றத்திலிருந்த உயரமான காவலாளி திறந்து விட்ட, டாலடிக்கிற உலோகக் கைப்பிடியால் பார்டர் போட்ட ராட்சசக் கண்ணாடிக் கதவுக்குள்ளே பிரவேசிக்கவே பிரமிப்பாயிருந்தது.

மெத்து மெத்தென்ற கார்ப்பெட் விரிப்புக்கு இவனுடைய ரப்பர் செருப்புகள் ஒரு முரணாயிருந்தன.

பிரமிக்கவோ சங்கடங்கொள்ளவோ இதிலென்ன இருக்கிறது ராஜா?

நீ ஒரு தமிழ்க் கவிஞன்.
நீ ஒரு தமிழெழுத்தாளன்.
நீ சராசரிக்கு மேம்பட்டவன்.
நீ வித்யாசமானவன்.

நட.
நெஞ்சை நிமிர்த்தி நட.
தலை நிமிர்ந்து நட.
தமிழ்த் திமிரோடு நட.

நடந்தான்.
உள்ளே ரெஸ்ட்டாரன்ட்டில், செவிவழிச் செய்தியாய்க் கூட இவன் அறிந்திராத உணவு வகைகள்.

அப்புறமாய் அம்மாவிடமும் வேணியிடமும் ஒப்பிப்பதற்காகச் சில பெயர்களைப் பரிச்சயம் செய்து கொண்டான்.

அப்பழுக்கில்லாத நாப்கினை உதடுகளின் விளிம்பில் ஒற்றியெடுத்தபடி இவனுடைய குடும்பத்தைப் பற்றிக் கேட்டார்.

சொன்னான். பட்டம் பெற்று மூணேமுக்கால் வருஷமாய் வேலை அமையாமலிருப்பதை.

சகோதரியும் சிநேகிதியுமான வேணிக்குக் கல்யாணத்துக்கு வேளை வராமல் காலங்கடந்து கொண்டிருப்பதை.

லௌகீக யதார்த்தங்களுக்கு முன்னால் இவனுடைய எழுத்துக்கள் அவமரியாதைப்பட்டு நிற்பதை.

இவனைக் குறித்து அப்பாவுக்கு நிறைய வருத்தம் இருப்பதை.

எல்லாவற்றையும் சிரத்தையோடு செவியேற்றுக் கொண்டவர், கொஞ்சம் யோசனையோடு சொன்னார், “மிஸ்டர் ராஜா, நா ஒண்ணு சொல்லுவேன், நீங்க தப்பாவே எடுத்துக்கக் கூடாது.?”

“நீங்க ஒரு படைப்பாளி, நா ஒங்களோட தீவிர வாசகன்ங்கற உன்னதமான நிலையிலயிருந்து பூமிக்கி எறங்கி வந்து நாம நண்பர்களாப் பேசுவோம். ஒரு ஃப்ரண்டுங்கற மொறையிலயும், ஒங்களவிட வயசுல மூத்தவன்ங்கற மொறையிலயும், ஒங்களவிட தேவைகள் குறைவா உள்ளவன்ங்கற மொறையிலயும் ஒங்களுக்கு எதாவது செஞ்சாகணும்னு நா ஆசப்படறேன். அந்தக் கடமையும் உரிமையும் எனக்கிருக்குன்னு நெனக்கிறேன். ஆனா ஒங்க ப்ரியாரிட்டி என்னன்னு எனக்குத் தெரியாது. அத நீங்கதான் சொல்லணும். சொல்லுங்க. மிஸ்டர் ராஜா, நீங்க ஏதாவது ஏன்ட்டக் கேட்டுத்தான் ஆகணும். ப்ளீஸ். இப்ப சொல்லாட்டி கூட பரவாயில்ல. சாவகாசமாச் சொல்லுங்க. ஆனா, கட்டாயம் சொல்லணும். நா காத்திட்டிருப்பேன்.”

இவனுக்கு என்ன சொல்லவென்று புரியவில்லை.

இலக்கிய சிம்மாசனத்திலிருந்து இறங்கி வந்து, படைப்பாளி கிரீடத்தைத் துறந்து விட்டு ஒரு சாமான்யனாய், பாமரனாய் இந்தத் தொழிலதிபர் முன்னே நின்று கொண்டிருப்பது போலிருந்தது.

அம்மாவும் வேணியும் மனசுக்குள் இட வலமாய்ப் பெண்டுலமாடினார்கள்.

அப்பாவுந்தான்.

தேவைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றில் ஒன்றிரண்டைத் தீர்த்து வைக்க ஒரு புண்ணியவான் தயார் நிலையிலிருக்கிறார்.

‘சந்தர்ப்பத்தை புத்திசாலித்தனமாய்ப் பயன்படுத்திக் கொள், தப்பே இல்லை’ என்றது பொது அறிவு.

‘உன்னுடைய மேதாவிலாசத்தை இந்தப் பணக்காரக் கால்களில் இடற விடத்தான் போகிறாயா’ என்று கேட்டது சிந்தனைச் செருக்கு.

“சார், நா அப்பறமா யோசிச்சிச் சொல்றேனே” என்று சமாளித்தான்.

“நோ ப்ராப்ளம், ஐ வில் வெய்ட். ஆனா என்ன ஏமாத்திரக் கூடாது, நா அப்செட் ஆயிருவேன்.”

வீட்டில், ராத்திரி சாப்பாட்டு வேளையிலும் மனசு யோசனையாய்த்தானிருந்தது.

அம்மாவிடமும் வேணியிடமும் அன்றைய நிகழ்வுகளைத் தொகுத்துச் சொல்லி முடித்திருந்தான். இந்தக் கடைசி ஐட்டத்தை மட்டும் கொஞ்சம் ஓரங்கட்டி வைத்திருந்தான்.

அப்பா இன்றைக்கு சீக்கிரமே வீடு திரும்பியிருந்தார். வேணி பரிமாறிக் கொண்டிருந்தாள்.

“ரசம் இன்னுங்கொஞ்சம் விடட்டா ஃப்ரண்ட்? நெய்யில்ல, ரசம்.”

அவளை நிமிர்ந்து பார்த்துச் சிரித்தான். இப்போது சொல்லி விட வேண்டியது தான்.

சொன்னான்.

“நீ என்னடா கேட்ட?” என்றாள் அம்மா, ஆர்வத்துடனும் எதிர்பார்ப்புகளுடனும்.

“யோசிச்சிச் சொல்றேன்னு சொன்னேம்மா.”

“யோசிக்க என்னடாயிருக்கு, பெரிய பணக்காரங்கற, பெரிய கடை வச்சிர்க்கார்ங்கற, அவரோட கடையில ஒரு சூப்பர்வைசர் வேல போட்டுத் தரச் சொல்லிக் கேக்கறது தான?”

“அவர் பணக்காரர் தாம்மா, ஆனா என்னோட வாசகர். எம்மேல மரியாதை வச்சிர்க்கறவர். அவர்ட்ட கை கட்டி எப்டீம்மா நா வேல பாக்க முடியும்.”

இவன் சொன்னதைக் கேட்டு அம்மாவின் சுருதி பிசகி விட்டது.

“சரிப்பா, அவர் கடையில வேண்டாம். அவருக்குத் தெரிஞ்ச பெரிய மனுஷங்க எத்தன பேர் இருப்பாங்க, யார்ட்டயாவது சொல்லி ஒரு வேல வாங்கிக் குடுப்பார்ல்ல, நீ கேட்டிர்க்கலாமே ராஜா?”

இந்தக் கட்டத்தில் அப்பா உள்ளே புகுந்தார்.

“அவர் தாம் பெரிய எழுத்தாள மேதையாச்சேடி, யார்ட்ட கை கட்டி சேவகம் செய்வார்? எவனாவது ஓசியில தீனி போட்டா போய்த் தின்னுட்டு வருவார். ஏண்டா அந்த ஆள் அவ்ளோ ஸீரியஸ்ஸாப் பேசினான்னு சொல்றியே, கேக்க வேண்டியது தானடா. எங்கக்காக்குக் கல்யாணம் ஆகவேண்டியிருக்கு, கொஞ்சம் ஹெல்ப் பண்ணுப்பான்னு கேக்க வேண்டியது தானடா, கேட்டியா நீ?”

அவர் முஸ்லிம்ப்பா.

சொல்லிவிட்டு நாக்கைக் கடித்து கெண்டான். வழுக்கி விட்டது உறைத்தது. அனிச்சைச் செயல் மாதிரி, இவன் சொல்லக் கருதியிராத வாக்கியம் எப்படியோ வெளியே வந்து விழுந்து விட்டது.

அப்பா பிடித்துக் கொண்டார்.

“ஒங்கக்காவ ரெண்டாந்தாரமாக் கட்டிக்கவாடா அந்த ஆளக் கேக்கச் சொல்றேன்? கல்யாணச் செலவுக்கு அம்பதாயிரமோ ஒரு லட்சமோ அந்த ஆள அசத்தி வாங்கப்பாருன்னா, சம்மந்தமேயில்லாம அவர் முஸ்லிம்ங்கறியே. கேட்டுப் பாக்கறது, குடுத்தா வாங்கிக்கிறது குடுக்காட்டி போடான் னுட்டு வந்துர்றது. ஒனக்கு எங்க அவ்ளோ பொறுப்பு! ஒங்கக்காவையும் ஒன்னையும் காலேஜ்ல படிக்கவக்க அழுத பணத்துல இவ கல்யாணத்த முடிச்சிர்க்கலாம்.”

*வழக்கமாய் இவனுக்காகப் பரிந்து பேசுகிற அம்மா இப்போது வாயைத் திறக்காதது, அப்பா சொன்னதில் அம்மாவுக்கும் சம்மதந்தான் என்று உணர்த்தியது.*

*இவனுக்குள் நியாயமாகவோ அநியாயமாகவோ ஒரு சங்கடம் பரவியது. தான் தனிமைப்படுத்தப்பட்டு விட்டதை ஒப்புக் கொள்ள இயலவில்லை. தலை கவிழ்ந்து, பருக்கைகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தான்.*

*நிசப்பத்தை விலக்கிக் கொண்டு இவனுடைய தலைக்கு மேலாய் ஒலித்தது வேணியின் குரல்.*

*“ஊறுகா வக்யட்டுமா ஃப்ரண்ட்?”*

*இந்த சந்தர்ப்பத்தில் அப்பா திரும்பவும் வெடித்தார். “ப்ரண்ட் என்னடி ஃப்ரண்ட்? பேரச் சொல்லிக் கூப்புடேண்டி! நீயும் அவனுக்கு ஜால்ரா தட்டித் தட்டித்தான் ஒன்னால நாங்கெட்டேன், என்னால நீ கெட்டேன்னு ஆய்ட்டீங்க.”*

*ராஜாவைப் போல மௌனியாயிராமல், வசமாய் ஒரு சந்தர்ப்பம் வாய்த்தால் வேணி அப்பாவை மீறிக் குரல் கொடுப்பாள்.*

*அப்படியரு சந்தர்ப்பம் இப்போது.*

*“ஸு.. கொஞ்சம் சும்மா இருங்கப்பா. ஒங்களுக்கு இதெல்லாம் புரியாது. ப்ரண்ட், ஊறுகா?”*

*அவளைத் தலைநிமிர்ந்து பார்க்க இயலாதவனாயிருந்தான். “ம்” என்கிற ஓரெழுத்தில் ஊறுகாய்க்கு ஒப்புதல் அளித்தான்.*

*கண்ணாடி பாட்டிலிருந்து ஒரு ஊறுகாய்த் துண்டைக் கரண்டியிலெடுத்து இவனுடைய ப்ளேட்டின் விளிம்பில் வைத்தபடி வேணி சொன்னாள் மெல்ல:*

*“ஃபைவ் ஸ்டார் ஹோட்டேல்ல லஞ்ச் சாப்ட்டியே, ஒன்னோட ஹோஸ்ட் கிட்ட சொல்லி லெஃப்ட் ஓவர்ஸ் எல்லாம் பாக் பண்ணி எடுத்துட்டு வந்திர்க்கலாம்ல நீ, இந்த ஃப்ரண்டுக்காக...”*

*இப்போது இவன் அவளைத் தலைநிமிர்ந்து பார்த்தான்.*

*(தீராநதி, ஏப்ரல் 2003)*

# கரும்பூனைகள்

*குட்டித் தலைவரின் சின்ன பங்களா அல்லோகோலப்பட்டது.*

*சின்ன பங்களா என்றால் சைஸில் சின்னது என்று அர்த்தங் கொள்ளக் கூடாது.*

*சின்ன வீடு என்கிற மாதிரி இது சின்ன பங்களா. தலைவரின் மேல் பாசங் கொண்ட தீவிரத் தொண்டர்கள், பக்கத்துத் தொகுதிகளிலிருந்து டெய்லி பாட்டாவுக்குத் தருவிக்கப்பட்ட விசேஷ அழைப்பாளர்கள் எல்லோரும் தலைவர் இல்லத்தில் பரிமாறப்பட்ட கோழி பிரியாணியை ஒரு பிடி பிடித்துவிட்டு, அங்கே விநியோகிக்கப்பட்ட டோக்கன்களை மெய்ன்ரோடிலிருந்த, தலைவருக்கே சொந்தமான கடையில் கொடுத்து ஒரு தீர்த்தம் அருந்திவிட்டு வந்து மிதப்பில் குழுமியிருந்தார்கள்.*

*தொண்டர்களைத் திரட்டுவது ஊர்வலத்தை ஒழுங்கு செய்வது மற்றும் இன்றைக்கு வேட்பு மனு தாக்கல் சம்மந்தமான எல்லா ஏற்பாடுகளுக்கும் இன்சார்ஜ், தலைவரின் இடது கரமான மாடசாமி.*

*வலது கரமாயிருந்த அறிவழகன் தேர்தல் நேரத்தில் ஒரு ஸ்டன்ட் அடித்து மாற்றுக்கட்சிக்குத் தாவி விட்டான்.*

*புகைப்படத்தோடு ஒவ்வொரு பத்திரிகை ஆபிசாய் ஏறியிறங்கி செய்தி கொடுத்துவிட்டு வந்தான். மூணுநாள் கழித்து மாலைச்சுடரிலும் தினபூமியிலும் மட்டும் செய்தி போட்டிருந்தார்கள் சின்னதாய். புகைப்படம் பிரசுரமாக வில்லை.*

*அறிவழகன் அப்ஸெட். மாடசாமிக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தேர்தலுக்குப் பிறகு மாடசாமிக்கு வலது கரமாய்ப் பதவி உயர்வு கிடைக்கும். அதன் பிறகு, தன்னுடைய பெயரை தமிழ்மாறன் என்று நெறிப்படுத்திக் கொள்கிற யோசனை இருக்கிறது.*

*தலைவரே, இந்நேரத்துக்குக் கௌம்பினாத்தான் ஊர்வலம் போய்ச்சேர டயம் சரியாயிருக்கும். கௌம்புவோம் என்று தலைவரைத் துரிதப்படுத்தனான் மாடசாமி.*

*மத்த கச்சிக்காரனெல்லாம் மனுத்தாக்கல் பண்ணிட் டானாயா, ஏதாவது தெரியுமா? என்று மெல்ல விசாரித்தார் தலைவர்.*

*அவனுங்களப்பத்தி நமக்கென்ன தலைவரே, அவனுங்கல்லாம் கடேசி நாள் தான் பண்ணுவானுங்க. நாம பஸ்ட்டா வரப்போற கச்சி, மனுத்தாக்கல்லயும் பஸ்ட்டா இருக்கணும். நாம இன்னிக்கிக் காட்டற கூட்டத்தப்பாத்து அவனவனுக்கு வயித்தால போகப் போவுது பாருங்க.*

மாடசாமி அட்டகாசமாய்ச் சிரித்தான்.

தலைவர், சிம்மாசனத்திலிருந்து எழுந்து கொண்டார். வேஷ்டியையும் துண்டையும் சரி செய்து கொண்டு, கிராமத்திலிருக்கிற குலதெய்வத்தை ரகசியமாய் மனசுக்குள் தொழுது கொண்டு தலைவர் வலதுகாலை வாசலுக்கு வெளியே வைத்தபோது, விசுவாசமிக்க தொண்டனொருவன் அவசரமாய் வழி மறித்தான்.

அப்படியேயிருங்க தலைவரே, முன்னேராதீங்க அப்படியேயிருங்க.

டாய் ஜகா வாங்குடா பேமானி. தலைவர் மனுத்தாக்கல் பண்ணப்போற நேரம் அபசகுனமா ராங் பண்றியே, ஒம் மூஞ்சில எங்கைய வக்ய.

இன்னொரு அதிவிசுவாசமான தொண்டன் முன்னவனைப் பிடித்துத் தள்ளினான்.

முன்னவன் முரண்டு பிடித்தான்.

நானா அபசகுனம்? பூனை ஒண்ணு குறுக்கால அபசகுனமா ஓடுது பார்றா சோமாறி. தலைவரே, லேட்டானாலும் பரவாயில்ல தலைவரே, இப்ப வாணாம் தலைவரே.

தலைவர் கொஞ்சம் தயங்கினார். பிறகு சமாளித்தார். சகுனமெல்லாம் நாம பாக்கக்கூடாது தம்பி. நம்ம கொள்கைக்கு முரண்பாடானது அது. வழிவிடுங்க. தைரியமாய்ப் புறப்படுவோம். வெற்றி நமக்குத்தான்.

தொண்டன் தலைவரின் கொள்கைக்கு இணங்குவதா யில்லை.

வாணாம் தலைவரே. சாதாப்பூனை இல்ல. அது கருப்புப் பூனை.

கருப்புப் பூனை என்றதும் மாடசாமியின் முகம் கறுத்தது. மெல்ல தலைவரின் காதைக் கடித்தான்.

அவன் சொல்றது வாஸ்தவந்தான் தலைவரே, கருப்புப் பூனை சாகவாசமே கூடாது. போன தேர்தல்ல நாம மனுதாக்கலுக்குப் போனப்பவும் இதே போல ஒரு கருப்புப் பூனை குறுக்கால போச்சி. அப்ப அறிவழகன் பந்தா பண்ணிட்டிருந்தானா, அதால நா கண்டுக்காம வுட்டுட்டேன். நாம் பாத்த கருப்புப் பூனையைப் பத்தி யார் கைலயும் சொல்லல. சனியன் அந்தக் கருப்புப் பூனையாலதான் போனதபா நாம தோத்துப் போய்ட்டோம். இப்ப நாம கௌம்பவாணாந் தலைவரே, காத்தால வச்சிக்குவோம்.

காத்தாலயும் ஒரு கருப்புப் பூனை குறுக்கால போச்சின்னா.?

தலைவர் கிளப்பிய சந்தேகத்துக்கு மாடசாமி அநாயாசமாய் ஒரு ஐடியாவை எடுத்து விட்டான்.

*நம்ம ஏரியால இருக்குற கருப்புப் பூனை அல்லாத்தையும் ராவோட ராவா க்ளோஸ் பண்ணிட்டா?*

*மாடசாமியுடைய மெகா திட்டத்தைக் கேட்டுத் தலைவரே கொஞ்சம் அசந்து விட்டார். மாஸ் மர்டர்! அதுவும் போக, இது சத்தியமா!*

*மாடசாமி மனவுறுதியோடிருந்தான்.*

*யோசிக்காதீங்க தலைவரே, நம்ம கைல வுடுங்க. ரெண்டு கால் பிராணிகளையே நைட்டோட நைட்டா எத்தினி க்ளோஸ் பண்ணியிருக்கோம். இது இன்னாத் தலைவரே தம்மாத்துண்டு நாலு கால் பிராணி. கவலையேப் படாதீங்க, விடியறதுக்கு முந்தி அல்லாத்தையும் பிரியாணி பண்ணிருவோம்.*

*மாடசாமியுடைய புலால் ரசனை தலைவருக்குக் குமட்டலை ஏற்படுத்தினாலும், இந்தக் கொலைமுயற்சிகள் மங்களமாய் நிறைவேற வேண்டுமே என்கிற கவலைதான் இப்போது பெரிதாயிருந்தது.*

*ஊர்வலமும் மனுத்தாக்கலும் நாளைக்குத்தான் என்று தொண்டர்கள் மத்தியில் அறிவித்து விட்டு உற்சாகமாய் உள்ளே திரும்பிய மாடசாமி, திடீரென்று சிந்தனை வசப் பட்டுத் தலையைச் சொறிந்தது தலைவரைக் கலவரப் படுத்தியது.*

*என்ன மாடசாமி?*

*ஒன்னுமில்ல தலைவரே, ஒரு சின்னச் சிக்கல். நாம கருப்புப் பூனையையெல்லாம் புடிச்சிக் கசாப்புப் போட்டுட்டோம்னா, நம்ம தொகுதியில கருப்பு பூனையே காலாவதியாயிரும்...*

*ஆமா, நல்லது தானே!*

*ஒரு வகையில நல்லது தான். ஆனா இன்னொரு வகையில பாத்தா, மாற்றுக்கச்சிக் காரனுக்குக் குறுக்கால போக ஊர்ல கருப்புப் பூனையே இல்லாமப் பூடுமே!*

*அவனுடைய சந்தேகத்திலிருந்த நியாயம் தலைவரைத் தாக்க, தலைவர் யோசனையிலாழ்ந்தார்.*

*(ஆனந்த விகடன், 13.05.2001)*

# காட்டுக்குள்ளே திருவிழா

*ராஜா அன்றைக்கு ஸ்கூலுக்குப் போகவில்லை. அவனுடைய சின்ன மம்மிக்கு குழந்தை பிறந்திருந்தது. ராஜாவையும், பாபுவையும் பாலச்சந்தர் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு வந்தான். பிள்ளைகள் ரெண்டு பேரையும் சந்தியா இருந்த அறைக்குள் விட்டுவிட்டு டாக்டரைப் பார்க்கப் போனான்.*

*பாபு மம்மியிடம் ஓடினான். கட்டிலில் ஒருக்களித்து சந்தியா, பாபுவை அணைத்து கன்னத்தில் முத்தமிட்டாள்.*

*"குட்டிப் பாப்பா பாத்தியா பாபு?"*

*"குட்டிப் பாப்பா எப்படி வந்தது மம்மி?"*

*"ம்? கொக்குதான் கொண்டு வந்து போட்டுட்டுப் போச்சு."*

*"என்னக் கொண்டு வந்த போட்டுட்டுப் போச்சே அந்த ஸேம் கொக்கா மம்மி?"*

*"இல்ல கண்ணா, இது வேற கொக்கு."*

*"எல்லா பாப்பாவையும் கொக்குதான் கொண்டு வந்து போடுமா மம்மி?"*

*"நல்ல பாப்பாவையெல்லாம் கொக்குதான் கொண்டு வந்து போட்டுட்டுப் போகும்."*

*"அண்ணாவையும் கொக்குதான் கொண்டு வந்து போட்டுட்டுப் போச்சா மம்மி?"*

*"அது யாரது, ஒனக்கு அண்ணா!"*

*"ராஜா அண்ணா."*

*"அவனா? அவனக் கொரங்கு கொண்டு வந்துப் போட்டுட்டுப் போயிருக்கும்."*

*இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த ராஜாவுக்கு முகம் சுண்டிப் போனது. மனசும்.*

*குழந்தைகளைக் கொண்டு வந்து போட்டுப் போவது கொக்குகளின் வேலையாயிருக்க, இவனைக் கொண்டு வந்து போட்டுப் போக மட்டும் குரங்கொன்று அமர்த்தப்பட்டது இவனுக்கு வேதனையாயிருந்தது.*

டாக்டரைப் பார்க்கப் போயிருக்கிற டாடி திரும்பி வந்த பின்னால், டாடியின் பாதுகாப்பில் மெல்லப்போய்ப் பாப்பாவை அருகாமையில் பார்க்க வேண்டும் என்கிற ஆசையை ஓசையில்லாமல் விழுங்கிக் கொண்டான்.

குரங்கு கொண்டு வந்து போட்டு விட்டுப் போன பிள்ளை! ராஜாவின் கண்களில் கண்ணீர் திரண்டது. இந்தக் குரங்கு விவகாரத்தை டாடியிடம் கேட்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டான். ஆஸ்பத்திரியிலிருந்து கிளம்பி பைக்கில் போகிற போதோ அல்லது போகிற வழியில் டிரைவ் இன்னில் டிஃபன் சாப்பிடுகிற போதோ கேட்க முடியவில்லை; தம்பி கூட இருந்தான். அவன் எதையாவது புரிந்து கொண்டு அவனுடைய மம்மியிடத்தில் தத்துபித்தென்று ஏதாவது உளறி வைத்தானென்றால் இவனுக்கு உதை விழும்.

ராத்திரி, பாபு தூங்கிவிட்டானென்று உறுதி செய்து கொண்டு, படுக்கையிலிருந்து எழுந்து, ஹாலில் புஸ்தகம் படித்துக் கொண்டிருந்த அப்பாவிடம் வந்தான்.

"டாடி."

"நீ இன்னும் தூங்கலியா ராஜா, காலைல ஸ்கூலுக்குப் போகணும்ல?"

"டாடி ஒங்கட்ட ஒரு டௌட் கேக்கணும்."

"டௌட் கேக்கணுமா!" பாலச்சந்தர் சிரித்தான்.

"டௌட்டெல்லாம் காலைல கேக்கலாம்; மணி பத்தாச்சு பார், போய்த் தூங்கு."

"இல்ல டாடி, இது அர்ஜன்ட். ஏன் டாடி, நம்ம குட்டிப் பாப்பாவ கொக்கா டாடி கொண்டு வந்து போட்டுச்சு?"

"ம்? ஆமா, ஏன்?"

"பாபுவ?"

"அதுவும் கொக்குதான்."

"அப்ப என்ன மட்டும் கொக்கு கொண்டு வந்து போடலியா டாடி?"

"ஒன்னயும் கொக்குதான் கொண்டு வந்து போட்டுச்சி. சரி போய்த் தூங்கு."

"இல்லியாம் டாடி, என்னக் கொக்கு கொண்டு வந்து போடலியாம். என்னக் கொரங்கு கொண்டு வந்து போட்டுச்சாம்."

பாலச்சந்தருக்கு முகம் இறுகியது.

"நான்ஸென்ஸ். யார் சொன்னது அப்படி?"

"சின்ன மம்மி தான் சொன்னாங்க டாடி."

*பாலச்சந்தர் மகனை இழுத்து அணைத்துக் கொண்டான். தகப்பனின் தோளில் ஆறுதலாய் முகம் புதைத்துக் கொண்டான் ராஜா. தகப்பனின் விரல்கள் தலைமுடியைக் கோதிவிடுவது சுகமாயிருந்தது.*

*பாலச்சந்தருக்கு சாவித்ரியின் ஞாபகம் வந்தது. ராஜாவைப் பெற்றுப் போட்டுவிட்டு, கடமை முடிந்ததென்று கண்மூடிக் கொண்டுவிட்ட சாவித்ரி. பிறகு சந்தியாவைக் கல்யாணம் பண்ணிக்க கொண்டது, தனக்கு ஒரு துணை வேண்டுமென்பதற்காக மட்டுமல்ல. ராஜாவுக்குத் தாய் வேண்டுமென்பதற்காவுந்தான்.*

*கல்யாணத்துக்கு முன்னால், பலம்மாய்த் தலையாட்டி வைத்த சந்தியா, முதலிரவு முடிந்த கையோடு தன்னுடைய சுயரூபத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டாள். ராஜா தன்னை மம்மியென்று கூப்பிடவே அவள் சம்மதிக்கவில்லை. பாலச்சந்தர் மம்மியென்று சொல்ல, அவள் ஆன்ட்டியென்று அடம் பிடிக்க, கடைசியில் ரெண்டுக்கும் பொதுவாய் சின்ன மம்மி என்று முடிவாயிற்று.*

*அவளுக்கென்று ஒரு பாபு பிறந்த பின்னால், சந்தியாவின் மாற்றாந்தாய்த்தனம் மூர்க்கமடைந்தது. இப்போது ரெண்டாவது குழந்தையாகிவிட்டது. நிலைமை இன்னும் மோசமடையலாம். ஒன்றிரண்டு வருஷத்துகாவது ராஜாவைத் திருநெல்வேலியில், சாவித்ரியின் பெற்றோரிடம் விட்டு வைத்தாலென்ன என்று தோன்றியது. பேரன்மேல் உயிரையே வைத்திருக்கிறவர்கள் அவர்கள். ராஜாவைத் தங்களிடம் விட்டுவிடும்படிக் கேட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். பையனைப் பெற்றவனுக்குத்தான் ஒரு வறட்டுக் கௌரவம்.*

*மாற்றாந்தாய் ஹிம்சையிலிருந்து மகனைக் காப்பாற்ற வேண்டுமென்றால், திருநெல்வேலிதான் சரி. நாளைக்கே ஸ்கூலில் ட்டி.ஸி. வாங்க எற்பாடு செய்ய வேண்டும்....*

*அப்பாவின் அணைப்பிலிருந்து மெல்ல விடுபட்ட ராஜா, அப்பாவின் முகத்தைப் பார்த்துக் கேட்டான்.*

*"டாடி, சின்ன மம்மி சொன்னது நெஜந்தானா டாடி?"*

*"ம்? எது?"*

*"கொரங்கு."*

*மனசு புண்பட்டிருக்கிற மகனை என்ன சொல்லி சமாதானப்படுத்துவது என்று கொஞ்சம் குழம்பின பாலச்சந்தரின் சிந்தனையில் ஒரு பொறி தட்டியது.*

*"ராஜா நீ இப்ப எந்த க்ளாஸ் படிக்கிற?"*

*"செகண்ட் ஸ்டாண்டர்ட் ஸி செக்ஷன்."*

*"நீ தர்ட் ஸ்டாண்டர்ட் ஃபோர்த் ஸ்டாண்டர் டெல்லாம் படிச்சிப் பெரிய்ய க்லாஸ்க்குப் போகும் போது ஒனக்கு சொல்லிக் குடுப்பாங்க, மனுஷங்க எல்லாமே கொரங்குலயிருந்து தான் வந்தாங்கன்னு. ராஜாவோட தாத்தாவுக்குத்*

*தாத்தாவுக்குத் தாத்தா ஒரு கொரங்கு. ராஜாவோட பாட்டிக்குப் பாட்டிக்குப் பாட்டி ஒரு கொரங்கு. நாம எல்லாருமே கொரங்குக்குப் பொறந்தவங்க தான் ராஜா. நானும் கொரங்குக்குப் பொறந்தவன்தான். நீயும் கொரங்குக்குப் பொறந்தவன்தான். அதனால ராஜா, ஒங்க சின்ன மம்மி சொன்னதுல தப்பொண்ணுமில்ல. ஸோ, எதப்பத்தியும் கவலப்படாம நீ போய்த் தூங்கு."*

*ராஜாவின் முகத்தில் ஒரு தெளிவு தெரிந்தது.*

*"டாடி டாடி, நம்ம எல்லாருக்கும் அம்மா அப்பாவான கொரங்க நா பாக்கணும் டாடி."*

*"அதான் வண்டலூர் ஸூல பாத்தோம்ல?"*

*"அந்தக் கொரங்கெல்லாம் நல்லாவேயில்ல. டாடி, எங்க க்ளாஸ்ல ஸி.அம்ருதான்னு ஒரு கேள் இருக்கா டாடி. அவ குத்தாலத்துக்குப் போய்ட்டு வந்தாளாம். அங்க அழகழகா நெறய்ய கொரங்கு இருக்காம். டாடி டாடி, நாமளும் குத்தாலத்துக்குப் போலாம் டாடி."*

*பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல இருந்தது பாலச்சந்தருக்கு. "அப்ப நீ திருநெல்வேலிக்கித் தாத்தா பாட்டிக்கிட்ட போறியா? அங்க பக்கத்துலதான் குத்தாலம். தாத்தா ஒன்ன அடிக்கடி குத்தாலத்துக்குக் கூட்டிட்டுப் போவார், நெறய்ய கொரங்கு பாக்கலாம். அழகழகான கொரங்கு பாக்கலாம். என்ன?"*

*"ஓ! நா ரெடி டாடி!"*

*அன்றைக்கு ராத்திரி ராஜாவின் மனசெல்லாம் குரங்கு.*
*கனவெல்லாம் குரங்கு.*
*விதவிதமான குரங்கு.*
*அழகழகான குரங்கு.*
*அப்பா அம்மாவான குரங்கு.*

*ராஜா திருநெல்வேலிக்குக் குடிபெயர்வது சந்தியாவுக்கும் சந்தோஷமான விஷயம் என்பதால் காரியங்கள் துரிதமாய் நடந்தன. நெல்லை எக்ஸ்ப்ரஸ்ஸில் போய் அப்பாவோடு திருநெல்வேலி ஜங்ஷனில் இறங்கியதுமே, வரவேற்க வந்திருந்த தாத்தாவிடம் குத்தாலம் குத்தாலம் என்று அனத்த ஆரம்பித்துவிட்டான் ராஜா.*

*ஸ்கூலில் அட்மிஷன் கிடைத்த பிறகு குற்றாலம் என்று சொல்லப்பட்டது. அட்மிஷன் கிடைத்ததற்கு அடுத்த நாளே திரும்பவும் அனத்தல். குளிப்பதற்கில்லையே குரங்கு பார்க்கத்தானே, அதற்கு மெதுவாய்ப் போகலாம். இப்போது ஸீஸன் டைம், ரொம்பக் கூட்டமாயிருக்கும், குரங்கெல்லாம் ஒளிந்து கொண்டிருக்கும் என்பது போன்ற சமாதானங்கள் ராஜாவிடம் எடுபடவில்லை. சனி ஞாயிறு வரை காத்திருக்கக்கூட அவனுக்குப் பொறுமையில்லை.*

இந்தத் தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தாவான குரங்கு, இந்தப் பாட்டிக்குப் பாட்டிக்குப் பாட்டியான குரங்கு, மனிதர்களெல்லாருக்குமே அப்பா அம்மாவான குரங்கு, தன்னைக் கொண்டு வந்து போட்டுவிட்டுப் போன குரங்கு, எல்லாவற்றையும் பார்க்க வேண்டும், உடனடியாய்ப் பார்க்க வேண்டும்.

வேறே வழில்லாமல், புதன் கிழமை அதிகாலை, தாத்தாவும் பாட்டியும் அவனைக் கூட்டிக் கொண்டு, வீட்டைப் பூட்டிக் கொண்டு ஜங்ஷனிலிருந்த தென்காசிக்கு பஸ் ஏறினார்கள். தென்காசியிலிருந்து ஒரு டாக்ஸி பிடித்துக் கொண்டு குற்றாலம்.

ஐந்தருவிக்குப் பக்கத்தில், தாத்தாவுக்குப் பழக்கமான ஒரு பண்ணையாரின் பங்களாவில் காலை உணவுக்கு ஏற்பாடாகியிருந்தது. டிஃபன் சாப்பிட்டுவிட்டு, பிரயாணக் களைப்புத் தீர தாத்தாவும் பாட்டியும் நீட்டி நிமிர்த்திப் படுத்து விட்டார்கள்.

“வெயில் வந்த பெறவு குளிக்கப் போவலாம். அது வரக்யும் ராசா, நீ வாசல்ல ஒக்காந்து கொரங்கு பாத்துட்டிரு.”

ஆனால் ராஜாவுக்கு வாசலில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிற மனநிலை இல்லை. திருநெல்வேலியிலிருந்து தாத்தா வாங்கிக் கொண்டு வந்திருந்த பழங்கள், பிஸ்கெட், சாந்தி ஸ்வீட்ஸ் ஹல்வா, பக்கோடா எல்லாவற்றையும் கூடையோடு எடுத்துக் கொண்டு சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு கேட்டைத் திறந்து கொண்டு வெளியே நடந்தான். இங்கொன்றும் அங்கொன்றுமாய்க் குரங்குகள் தரிசனந் தந்தன.

திருப்தியாயில்லை. நிறைய குரங்குகளை எதிர்கொள்ள வேண்டுமானால் காட்டுப் பாதையில் போக வேண்டும். இந்தப் பதார்த்தங்களையெல்லாம் அவற்றோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்.

ஜன நடமாட்டம் நிறைந்த பாதையிலிருந்து விலகி, ஜன நடமாட்டம் அறவே இல்லாத காட்டுப் பாதையில் தாவரங்களுக்குக்கூடே நடந்தான். மரங்களின் கிளைகளிலிருந்து பல ஜோடிக் கண்கள் ஆர்வமாய்ப் பார்க்கிறதை உணர்ந்தான், இவனையும், இவனுடைய கையிலிருந்த பதார்த்தக் கூடையையும். திருப்தியான ஓர் இடத்தில் நாப்கினை விரித்துக் கொண்டு உட்கார்ந்தான். கூடையிலிருந்த பதார்த்தங்களை எடுத்துப் பரப்பினான். பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது.

“அடேங்கப்பா, எவ்ளோ பலகாரம்! எனக்கில்லியா ராஜா!”

காக்கி உடையணிந்த ஒரு காட்டிலாக்காக்காரர் சிரித்துக் கொண்டு நின்றிருந்தார்.

“ஹை! எம்ப் பேர் ஒங்களுக்கு எப்படித் தெரியும் அங்க்கிள்?”

“அட, ஒம்ப் பேர் ராஜாவா? ராஜா மாதிரிதான் இருக்க நீ. அல்வாப் பொட்டலம் வச்சிருக்கியே, அல்வான்னா எனக்கு ரொம்பப் புடிக்குமே!”

*"எல்லாம் கொரங்குகளுக்குத்தான் அங்க்கிள். கொரங்கெல்லாம் எனக்கு ஃப்ரண்ஸ். கொரங்கு சாப்ட்டு மிச்சமிருந்தா ஒங்களுக்குத் தர்றேன், ஒக்கே அங்க்கிள்?"*

*"நிச்சயமா?"*

*"ப்ராமிஸ்."*

*காட்டிலாக்காக்காரர் குனிந்து அவன் கன்னத்தைச் செல்லமாய்த் தட்டினார்.*

*"இதே பாதையில நேரா வந்தா ஃபாரஸ்ட் ஆஃபீஸ் இருக்கு. அங்கதான் நா இருப்பேன். உன் ஃப்ரண்ஸ் மிச்சம் வச்சாங்கன்னா அத எடுத்துட்டு அங்க வர்றியா? அங்க வந்து பரதன் அங்க்கிள்னு கேளு, என்ன?"*

*"ஓ, வர்றேன் அங்க்கிள்."*

*கொரங்காவது மிச்சம் வக்யவாவது என்று திரும்பவும் சிரித்தபடி இவனை செல்லமாய்த் தட்டிக் கொடுத்துவிட்டு அவர் நகர்ந்தார்.*

*காக்கிச் சட்டை அகன்றதும் மற்ற விருந்தாளிகள் ஒவ்வொருவராய் ப்ரசன்னமானார்கள்.*

*அழகழகான குரங்குகள்.*
*அப்பாக் குரங்குகள், அம்மாக் குரங்குகள்,*
*பிள்ளைக் குரங்குகள், குட்டிக் குரங்குகள்...*

*அம்மாக் குரங்கொன்று, வயிற்றில் சுமந்த குட்டியோடு வந்திருந்தது. இப்படித்தான் இவனையும் ஒரு அம்மாக் குரங்கு சுமந்து வந்து தொட்டிலில் போட்டுவிட்டுப் போயிருக்கும்!*

*அந்த இனத்தின் மேலே ராஜாவுக்கு ஒரு பாசம் பிறந்தது. பழங்களையும் பதார்த்தங்களையும் இவன் நீட்ட, அந்தக் குரங்குகள் ஆச்சர்யமான கட்டுப்பாட்டுடன் ஒவ்வொன்றாய் வந்து இவனிடம் பெற்றுச் சென்று தின்றன. இவனுக்கும் அந்த வானர இனத்துக்கும் ஓர் அந்நியோன்னியம் ஏற்பட்டுவிட்ட நிலையில் அவை இவனை இன்னும் நெருங்கி வந்தன.*

*அந்த நேரத்தில் தான் அந்த அராஜகம் நிகழ்ந்தது. எங்கிருந்தோ வந்து விழுந்த வலையொன்று அந்தக் குரங்குக் கும்பலில் ஒரு பத்து பன்னிரண்டு குரங்குகளை லபக் கென்று கவ்விக் கொண்டது. தொடர்ந்து, நாலு முரட்டு உருவங்கள்.*

*"அள்ளுல பக்கிரி. நம்ம வேல இன்னிக்கி இவ்ளோ ஜல்தியா முடியும்னு நெனக்யவேயில்ல டேய்! இந்தச் சின்னப் பயலுக்குத்தான் டாங்ஸ் சொல்லணும். அள்ளு. அள்ளி, வண்டியில போடு. காக்கிச் சட்டக்காரன் எவனும் வாறதுக்கு முந்தி சிட்டாப் பறந்துரணும்."*

*"இந்தக் கொரங்கயெல்லாம் வெளிநாட்ல எண்ண பண்ணுவான் அண்ணாச்சி?"*

*“கசாப்புப் போடுவான். அதெல்லாம் நமக்கென்னத்துக்கு டேய். ஒரு கொரங்குக்கு சொளையா ஐநூறு ரூவா தாறான். தூக்கு சனியன. பெறாண்டிரப் போவுது, கவனமாத் தூக்கு.”*

*என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது ராஜாவுக்குப் புரிந்தபோது உடம்பும் மனசும் பதைபதைத்தன.*

*சத்தமில்லாமல் ஒரு கடத்தல் ஜீப் வந்து சமீபத்தில் நின்று கொண்டிருந்தது. வலைக்குள்ளே குரங்குகளின் காச் பூச்சென்ற கூச்சல். குட்டியைச் சுமந்து வந்த தாய்க் குரங்குகூட மாட்டிக் கொண்டிருந்தது.*

*இந்த மிருகங்களிடமிருந்து குரங்குகளைக் காப்பாற்றியாக வேண்டுமென்கிற துடிப்பு ராஜாவிடம் எழுந்தது. ஓர் ஆக்ரோஷத்தோடு அந்த அரக்கர்களின் பாதையை வழிமறித்துக் கொண்டு நின்றான், ரெண்டு கைகளையும் விரித்துக் கொண்டு, கண்களில் கோபத்தோடு, குரலில் வேகத்தோடு.*

*“இந்தாங்க, இது எல்லாம் என்னோட கொரங்கு, என்னோட ஃப்ரண்ஸ். அத நீங்க புடிச்சிட்டுப் போக முடியாது. நா விடமாட்டேன்.”*

*மூன்று முரடர்கள் இவனை அலட்சியப்படுத்த, ஒருவன் மட்டும் உறுமினான்.*
*“இந்தா பார்ல, மருவாதியா இப்படியே ஓடிரு. இல்ல, ஒன்னையுந் தூக்கிட்டுப் போயிருவோம்.”*

*“இப்படியே ஓடிரு” என்ற மிரட்டல் வார்த்தைகள் ராஜாவுடைய மண்டையில் மின்னலடித்தன.*

*ஓடினான்.*

*காக்கிச் சட்டை.... பரதன் அங்க்கிள்....*

*காட்டிலாகா அலுவலகத்தை அடைந்து மூச்சிறைக்க இவன் நடந்ததைச் சொல்லி வாயை மூடும் முன்னாலேயே காக்கிப் பட்டாளம் பரபரப்படைந்து புறப்பட்டுவிட்டது. பரதன் அங்க்கிள் இவனை வாரியெடுத்துக் கொண்டு ஓடி வந்தார்.*

*மரங்களுக்கும் பாறைகளுக்குமிடைய பாதையமைக்கத் திணறிக் கொண்டிருந்த கடத்தல் ஜீப் மடக்கப்பட்டது. குரங்குகள் விடுவிக்கப்பட்டன. விடுதலையடைந்த குரங்குகள் ராஜாவை நன்றியோடு பார்த்துவிட்டு மரங்களுக்குள்ளே மறைந்தன.*

*“இத்தன நாளா நமக்கு அல்வாக் குடுத்திட்டிருந்த களவாணிப் பயலுவ இந்தச் சின்னப் பையனால இன்னிக்கி மாட்டிக்கிட்டானுவப்பா.” வனத்துறை நிம்மதிப் பெருமூச்சு விட்டது.*

*பரதன் அங்க்கிள் ராஜாவை உயரத்தூக்கிக் கன்னத்தில் முத்தம் பதித்தார். அவரிடமிருந்து விடுவித்துக் கொண்ட ராஜா, கீழே கூடையிலிருந்து ஒரு பொட்டலத்தையெடுத்து அவரிடம் நீட்டினான்.*

*“அங்க்கிள் ஒங்களுக்கு ஹல்வா. கொரங்கு மிச்சம் வச்சது.”*

*“அட, இத்தன நாளா இவனுங்க அல்வா தந்தானுங்க. இப்ப நீ அல்வா தர்றியா !”*

*எல்லாரும் சிரித்தார்கள்.*

*அந்த நாலு மிருகங்களைத் தவிர.*

*(குங்குமம், 04.06.2004)*

# காமாட்சிபுரம்

*மொத்த கிராமமும் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது.*

*ஊர்ச் சாவடியில் எல்லாரும் கூடியிருந்தார்கள். ண்கள் பெண்கள் சிறுபிள்ளைகள் எல்லாரும் கூடியிருந்தார்கள்.*

*யார் யாருக்கு என்னென்ன புதுப்பெயர் என்கிற பட்டியல் மாரியப்பனிடம் இருந்தது. ஒவ்வொருத்தராய்க் கூப்பிட்டு, அவரவருக்குரிய புதுப்பெயரை மாரியப்பன் வாசிக்க வாசிக்க, அங்கே ஒரு கேலியும் கிண்டலும் சிரிப்பாணியுமா யிருந்தது.*

*அந்தக் குதூகலத்தைக் குலைக்கிற மாதிரி ரெண்டு அந்நியர்கள் அங்கே பிரசன்னமானார்கள். கூடியிருந்த காமாட்சிபுரத்துக்காரர்கள் எல்லாரும் நிசப்தமாகி அந்த அந்நியர்கள் மேல் பார்வைகளைப் பதித்தார்கள், ஆச்சர்யத்துடனும், லேசான கலவரத்துடனும்.*

*யாருக்கும் பேச்சு வரவில்லை.*

*அந்த ரெண்டுபேரில் ஒருவன் தான் நிசப்தத்தைக் கலைத்தான். "யார்ல இங்க தலைவன்?"*

*"தலைவர்னு யாரும் இல்லிங்க சாமி, எல்லாரும் இங்ஙன ஒண்ணுதா." தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மாரியப்பன் பதில் சொன்னான்.*

*"எசக்கிமுத்து, சின்னராசுன்னு ரெண்டு பயபுள்ள இருக்காம்ல, எங்க அவனுவள?"*

*"டவுனுக்குப் போயிருக்காவ சாமி, இப்ப வந்துருவாவ."*

*"நீங்க எல்லாரும் மதம் மாறப் போறீகளாம்ல, எல்லாம் அந்த ரெண்டு பயலுவ வேலதானா?"*

*"இல்லீங்க சாமி, நாங்க எல்லாருமா சேந்து பேசித்தான் முடிவெடுத்தோம்."*

*"ஏன், ஒங்களுக்கெல்லாம் என்ன கேடு வந்துச்சு? என்னத்துக்கு அப்படி ஒரு முடிவெடுத்தீக?"*

*"ஒண்ணுமில்ல சாமி, செறட்டயில காப்பித்தண்ணி குடிச்சிட்டுக் கெடக்கோமே, மத்தவுகளப்போல நாமளும் கோப்பையில காப்பி குடிச்சா என்னன்னு ஒரு ஆச தான்."*

"ஓம்பேர் என்னல தம்பி."

"ஐயோ, சாமி வாயால தம்பின்னு கூப்ட்டுட்டீயளே, மேலெல்லாம் புல்லரிக்கிது சாமி."

"பேரக் கேட்டாச் சொல்லுல."

"மாரியப்பன் சாமி."

"ஏல மாரியப்பா, ரொம்பத் தெனாவெட்டாப் பேசுதிய என்னல?"

"டவுனுக்கு ரெண்டு பயலுவ போயிருக்கானுவளே, அவனுவ வந்தானுவன்னா இன்னும் தெனாவட்டாப் பேசுவானுவ சாமியோவ்."

"நக்கலால பண்ணுத? செவுட்ல ஒண்ணு வுட்டேன்னா எல்லாப் பல்லும் களண்டு விழுந்துரும்."

"ஐயோ சாமி, அவனத் தொட்டு அடிச்சிறாதிய, தீட்டாயிரும். அடிக்கணும்னாச் சொல்லுங்க. பள்ளிக்கோடத் துலயிருந்து பெரம்பு எடுத்துட்டு வாறேன்." எலிமென்ட்டரி ஸ்கூல் வாத்தியார் சொன்னது திரும்பவும் எல்லாரிடமும் சிரிப்பை வரவழைத்தது. அந்த ரெண்டு அந்நியர்களைத் தவிர.

அந்த ரெண்டு பேரும் கடுகடுவென்று ஆனார்கள்.

"எல்லாப் பயலும் திமிர்ப் புடிச்சி அலையுதீக. கண்ட கண்ட பயல்களையெல்லாம் ஊருக்குள்ள விட்டிருக்கீக. அவனுங்க வந்து வயக்காட்டு சோலியப்பாத்துக்கிட்டு நல்லாயிருந்த பயபுள்ள மனசையெல்லாம் கெடுத்துப் போட்டுப் போயிருக்கானுவ."

சிரிப்பு மங்கி அங்கே திரும்பவும் மௌனம் படர்ந்தது. அதை விலக்கிக் கொண்டு மாடசாமிப் பெரியவர் பேசினார்.

"இங்ஙன யாரும் வெளியாட்க வரலீங்க சாமி. நாங்க தான் அவியளத் தேடிட்டுத் திருநவேலி சங்சனுக்குப் போனோம். நீங்க மவராசமார் எங்களக் கோவிலுக்குப் பக்கத்துலயே சேக்க மாட்டீய. ஆனா, அவிய கோயிலுக்குள்ள எங்களக் காலக்களுவிட்டு வரச் சொல்லிக் கூப்ட்டாவ. அவியளுக்குச் சமமா பாயில ஒக்காரவச்சுப் பேசுனாவ. அவியளும் நாங்களும் ஒரே மாறி கண்ணாடிக் கிளாஸ்ல சாயா குடிச்சோம். சடங்கெல்லாம் முடிஞ்சபெறவு அவிய கோவிலுக்குள்ள அவியளோட தோள்ப்பட்டயோட தோள்ப்பட்ட ஒரசிக்கிட்டு நின்னு நாங்களும் சாமி கும்புடாலாம்னாவ."

"தோள்ப்பட்டய ஒரசிக்கிட்டு சாமி கும்புடலாம்னு சொன்னாவளாக்கும்? சொல்லுவானுவல்ல, சொல்லுவானுவ. சொன்னவனும் கம்பியெண்ணப் போறான், நீங்களும் ஒருவழியாயிரப்போறீக. மதமாற்றத் தடைச் சட்டம்னு ஒண்ணு வந்திருக்கு, தெரியுமால?"

*அந்நியன் ஆவேசமாய்ப் பேசியதற்கு, அவன் தோளுக்குப் பின்புறமிருந்து ஒரு மறுப்புக்குரல் வந்தது.*

*"ஐயா, ஒரு திருத்தம்."*

*குரல் வந்த திசையை எல்லாக் கண்களும் மொய்த்தன. எசக்கிமுத்துவும் சின்னராசும் நின்றிருந்தார்கள். எசக்கிமுத்து தொடர்ந்து பேசினான்.*

*"ஐயா, அது மதமாற்றத் தடைச்சட்டம் இல்லீங்க. கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுங்க. இங்ஙன எங்கள யாரும் கட்டாயப்படுத்தி மதம் மாத்தலீங்க. நாங்களா இஷ்டப்பட்டுத்தான் போறோம். மேல் சாதிக் கொடுமையால மனசொடிஞ்சு போறோம். சுதந்திரத்தத் தேடிப் போறோம். மரியாதையத் தேடிப் போறோம். மனசார விரும்பிப் போறோம். மனுசனா வாழப் போறோம்."*

*"போவீக போவீக" என்று முஷ்டியை மடக்கினான் அந்நியன்.*

*"அது கட்டாயச் சட்டமோ வெறுஞ்சட்டமோ, சட்டம் எங்க கையில. அத எப்ப தட்டிவிடணும், எப்படித் தட்டிவிடணும்னு எங்களுக்குத் தெரியும். ஒரு பயலும் தப்பிக்க முடியாது. தொப்பி வச்சவன் ஒரு பய இனி இந்த ஊர்ப்பக்கம் தல காட்டப்படாது. ஒங்களயெல்லாம் எப்படி வழிக்கிக் கொண்டுட்டு வாறதுன்னு தெரியும்ல. இத பாருங்கல, இன்னிக்கி ஞாயித்துக் கெழம. நாளக்கழிச்சி செவ்வாய்க் கெழம காலைல பத்துமணிக்கி நாங்க திரும்பவும் வருவோம். எல்லாப் பயலும் பழைய படிக்கி ஒழுங்கா உண்டான சோலியப் பாத்துக்கிட்டுக் கெடக்கணும். மாறி, எவனாச்சும் மதம் மாறப் போறோம், மயித்தப் புடுங்கப் போறோம்னு வாயத் தொறந்தியளோ, தொலச்சிப்புடுவோம் தொலைச்சி."*

*எச்சரிக்கை விட்டுவிட்டு அகன்றார்கள் அந்நியர்கள்.*

*செவ்வாய்க்கிழமை வந்தது.*

*ஊர்ச்சாவடியில் கிராமம் திரண்டிருந்தது. சொன்ன மாதிரியே பத்து மணி சுமாருக்கு அந்நியர்கள் ரெண்டு பேரும் வந்தார்கள்.*

*ரெண்டு பேர் தனியாக வரவில்லை. பத்துப் பன்னிரெண்டு பேர் அடங்கிய ஒரு தொண்டர் படையோடு வந்தார்கள்.*

*ஊர்க்கூட்டத்தில், எசக்கிமுத்துவும் சின்னராசும் துண்டாய்த் தெரிந்தார்கள்.*

*அவர்களை நோக்கி அந்நியன் கேள்வியை விட்டான். "என்னல தலைவங்களா, என்ன முடிவு பண்ணீக? திருந்திட்டீகளா, இல்ல நாங்க திருத்தணுமா?"*

*"நாங்களே திருந்திட்டோம் தலைவா, ஒங்களுக்கு செரமமே வேண்டாம்" என்றான் அரும்பு மீசையுடனிருந்த சின்னராசு.*

*அரும்பு மீசை மட்டுமல்ல அது. குறும்பு மீசையுங்கூட.*

*பிறகு எசக்கிமுத்து வாயைத் திறந்தான். "ஐயா நீங்க சொன்னத யோசிச்சிப் பாத்தோம். ஒங்க மதமாற்றத் தடைச்சட்டத்தோட மோத வேண்டாம்னு முடிவெடுத்துட்டோம்."*

*"சபாஷ்" என்றான் அன்னியன்.*

*"சாமி அவசரப்பட்டு அவார்டு குடுத்துறாதீக. எசக்கி முத்து இன்னும் முடிக்கல" என்று புதிர் போட்டான் சின்னராசு.*

*பிறகு எசக்கிமுத்து தொடர்ந்தான். "அதனால ஐயா, நாங்க எல்லாரும் சாதி மாறிரலாம்னு ஏகமனதா முடிவு பண்ணிட்டோம்."*

*"ஜாதியா?"*

*"ஆமாங்க ஐயா, நாங்க சின்ன சாதியா இருக்கப் போய்த்தான நீங்க எங்களக் கேவலப்படுத்துதீக. அதனால நாங்களும் ஒங்களப்போல பெரிய சாதிக்கி மாறிக்கிரலாம்னு முடிவு பண்ணிட்டோம். மதம் மாறத்தான் தடைச்சட்டம் இருக்கு; சாதிக்கி அது கெடையாதுங்களே! இனி இந்த கிராமத்துல ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு சாதி. எல்லாம் டாப் சாதிதான். மாடசாமிப் பெரியவர் குடும்பம் முதலியார் சாதி. மாரியப்பன் குடும்பம் செட்டியார் சாதி. வாத்தியார் தேவர். இந்தப் பெரியவுக காளிமுத்து ஐயா தெலுங்கு நல்லாப் பேசுவாக. அதனால அவுக நாயக்கராகப் போறாக. இந்த சின்னப் பய செந்திலு பொனலூர்ல இருந்தவன். அதனால அவன் நாயர்."*

*"நாயர் இல்ல அண்ணாச்சி, நம்பூதிரி."*

*"ஓம் பிரியம்டா செந்திலு. பெறவு, நம்ம சொள்ளமாடன் வீர சைவப் புள்ளமார்…"*

*பட்டியலை நீட்டிக் கொண்டே போன எசக்கி முத்துவை இடைமறித்தான் அந்நியன்.*

*முழுக்கைச் சட்டையை மடக்கிவிட்டபடி கேட்டான். "அது சரிங்க. தலைவங்க நீங்க ரெண்டு பேரும் என்ன ஜாதின்னு சொல்லவேயில்லீங்களே!"*

*அந்நியர்களுக்குப் பின்னால் அணிவகுத்து நின்ற அடியாட்களில் ரெண்டு பேர் ஜிப்பாவை உயர்த்திப் பட்டை பெல்ட்டைக் கழட்டுவதைப் பொருட்படுத்தாமல் எசக்கிமுத்து சொன்னான்.*

*"ஓ, அதக்கேக்கியளா, இவன் ஐயருங்க; நா ஐயங்கார்."*

*(தீம்தரிகிட, செப்டம்பர், 2003)*

# கிரீடத்தைக் கழட்டி வை

*பரமக்குடி.*

*காரைக்குடிக்கு அடுத்தபடியாய், செட்டிநாட்டுக் கொடி உயரப் பறக்கிற பரமக்குடி.*

*ஊருக்கு நடுவிலே, மெய்ன் ரோடிலே, ஜெய்ஹிந்த் த்யேட்டர் நிமிர்ந்து நின்ற பரமக்குடி.*

*ரேவதி, ரவி என்கிற ரெண்டு டூரிங் டாக்கீஸ்கள் ஆற்றுக்கு அந்தப்புறம் ஆறுமாசத்துக்கொருதரம் வந்து வந்து போன பரமக்குடி.*

*இளையாங்குடி மீன் சைக்கிள்கள் சர்ர் சர்ர்ரென்று கடந்து போகிற பரமக்குடி.*

*அய்யாச்சாமிச் செட்டியார் ஆயிர வைஸ்ய ஹைஸ்கூலைக் கேம்ப்ரிஜ்ஜாய்க் கொண்ட பரமக்குடி.*

*அந்தப் பரமக்குடிக்குத்தான் நம்ம கதாநாயகன் குடிவந்தான், 1950களின் ஆரம்பத்தில்.*

*பரமக்குடி — மதுரை சாலையில், ஊரிலிருந்து ரெண்டரை மைல் மாட்டு வண்டியிலோ, சைக்கிளிலோ அல்லது மின்சார இலாக்கா ஜீப்பிலோ வந்தால் காட்டுப் பரமக்குடியை அடையலாம்.*

*அந்தக் காட்டுப் பரமக்குடிக்குப் பெருமை சேர்க்கிற புண்ணியஸ்தலம், சென்னை மாகாண மின்சார இலாகாவின் ஸப் ஸ்டேஷன். ஸப் ஸ்டேஷனுக்கு இந்தப் பக்கம் மதுரை தனுஷ் கோடி நெடுஞ்சாலை, அந்தப்பக்கம் ரயில் தண்டவாளம்.*

*போட் மெய்ல் போகிற தண்டவாளம். தனுஷ்கோடிக்குப் போகிற போட் மெய்ல்.*

*இப்போது போட் மெய்லுமில்லை, தனுஷ்கோடியு மில்லை.*

*காட்டுப் பரமக்குடி ஸப் ஸ்டேஷன் வளாகத்தில், மின்சார இலாகா அஸிஸ்ட்டன்ட் இஞ்சினியருக்கும் அவருக்குக் கீழே பணியாற்றுகிற சூப்பர்வைசர், எல்.ஐ., வயர்மேன், லயன்மேன், பிரமாண்டமான பென்ஸ் லாரி ஓட்டுகிற டிரைவர் கன்னையா நாயுடு — எல்லோருக்கும் வீடுகள் உண்டு.*

*ஸெயின்ட் ஜோஸப்ஸ் காலேஜுக்குப் படிக்கப் போன அப்துல் கலாம், ராமேஸ்வரத்திலிருந்து கிளம்பி, பாம்பன், மண்டபம், ராம்நாட், பரமக்குடி,*

*காட்டுப் பரமக்குடி, கமுதக்குடி, பார்த்திபனூர், மானாமதுரை, மதுரை, மேலூர், விராலிமலை, துவரங்குறிச்சி வழியாய்த்தான் திருச்சி போய்ச் சேர்ந்திருப்பார்.*

*பாம்பன் பாலத்தில் ரயில், மதுரை வரைக்கும் வாஹித் பஸ், மதுரையிலிருந்து திருச்சிக்கு ஸ்டேட் எக்ஸ்ப்ரஸ் பஸ் (நாகர் கோவில் ட்டு திருச்சி, தடம் எண் 511).*

*ராமேஸ்வரம் — திருச்சி ரூட்டிலிருக்கிற காட்டுப் பரமக்குடி ஸப் ஸ்டேஷனில் அஸிஸ்டன்ட் இஞ்சினியருக்கு மகனாய் நம்ப கதாநாயகன் குடி வந்தான்.*

*பதினோரு வயசுப் பையன். பெயர் இப்போது தேவையில்லை. எக்ஸ் என்று குறிப்பிடுவோம்.*

*நிற்க.*

*இப்போது களம், செட்டியார் ஸ்கூல் என்று அறியப்பட்ட அய்யாச்சாமிச் செட்டியார் ஆயிரவைஸ்ய உயர்நிலைப் பள்ளியின் ஆண் ஆசிரியர்களின் ஸ்டாப் ரூம்.*

*கணக்கு ஆசிரியர் பாண்டியன் கடுகடுவென்றிருந்தார். அவருடைய கடுகடுப்பைப் புரிந்து கொள்ள அல்லது மேலும் கடுப்பேற்ற சக ஆசிரியர்கள் குணசீலன், ராஜமாணிக்கம், மற்றும் இளங்கண்ணன்.*

*இளங்கண்ணனின் பெயர் அவர் தமிழ்ப்பற்று மிக்கத் தமிழாசிரியர் என்று பறை சாற்றும். தன்னுடைய அதீத தாய்மொழிப் பற்றினால், பாலகிருஷ்ணன் என்கிற தன்னுடைய இயற்பெயரை இளங்கண்ணன் என்று தமிழ்ப்படுத்திக் கொண்டவர்.*

*"நமக்கெல்லாம் வில்லனா வந்து வாச்சிருக்காம்ப்பு இந்தச் சின்னப் பயல். நம்மள வீட்டுக்கு அனுப்பிச்சிட்டுத் தான் மறு வேல பாப்பம் போல" என்று பாண்டியன் பொருமியதற்குத் தூபம் போட்டார் ராஜமாணிக்கம்.*

*"அந்த ஸ்டெல்லா டீச்சர் அவனத் தலையில தூக்கி வச்சுக்கிட்டு கூத்தாடற அசிங்கம் இருக்கே, ஐயோ கன்றாவிப்பு."*

*"அத விடுங்கப்பு. இன்னிக்கி இன்ஸ்பெக்ஷனுக்கு வந்த ஸ்கூல் இன்ஸ்பெக்டர்ட்டல்ல இந்தப் பய நம்மள மாட்டி விட்டுட்டான்! இன்ஸ்பெக்டர் பதிமூணாம் வாய்ப்பாடு கேட்டார். ஒரு பயலுக்கும் சொல்லத் தெரியல. இந்தப்பய எந்திரிச்சி பதிமூணாம் வாய்ப்பாடு மள மளன்னு ஒப்பிக்கிறான், அதுவும் இங்லீஷ்ல. நீ மட்டும் எங்கப்பா படிச்சன்னு இன்ஸ்பெக்டர் கேட்டதுக்கு இந்தப் பயல் சொல்றான், இந்த வாத்தியார் சொல்லித் தரல, நா பழைய ஸ்கூல்ல படிச்சதுங்கறான்."*

*"எந்த ஸ்கூல்ல படிச்சானாம்?"*

*"ஊட்டியில படிச்சானாம், என்னமோ ப்ரீக்ஸ் ஸ்கூலாம். அவங்கப்பா ஈபில ஏஇயாம், ஊட்டியிலயிருந்து ட்ரான்ஸ்பர் ஆகி இங்க வந்திருக்கார். இந்தப் பய, தர்ட் டர்ம்ல வந்து சேந்துக்கிட்டு நம்மக் கழுத்த அறுக்க வந்திருக்கான். "*

"அதிருக்கட்டும். நீர் ஏம்ப்பு பதிமூணாம் வாய்ப்பாடு சொல்லித்தரல?"

"ட எனக்கே தெரியாதேப்பு. நா படிக்கிற காலத்துல பதிமூணாம் வாய்ப்பாடு சொல்லித் தந்த அன்னிக்கி நா பள்ளிக்கூடத்துக்குப் போகலல்ல!"

இளங்கண்ணன் 'குபுக்' கென்று சிரித்தது பாண்டியனுக்கு மேலும் கடுப்பு.

"கண்ணா, சிரி. நாளக்கி மதியத்துல சோத்துக்கு வெஞ்சனம் இல்லன்னுட்டு நீ திரும்ப எங்கிட்டதான் வருவ. அப்பப் பேசிக்கிறோம்ப்பு."

பாண்டியன் இளங்கண்ணனைக் கருவிக் கொண்டிருந்த போது, சோர்ந்து போய் உள்ளே பிரவேசித்தார் ஆங்கில ஆசிரியர் அம்புரோஸ். எக்ஸ் குறித்து அவரிடமும் ஒரு பிராது இருந்தது.

"பயல், இன்ஸ்பெக்டர் முன்னால என்னத் தலகுனிய வச்சுட்டானே. செகண்ட் பார்ம் படிக்கிற பயலுக்கு ஷேக்ஸ்பியர் எதுக்குப்பு? பய டெம்பஸ்ட்லயிருந்து ஏரியல்ஸ் ஸாங் எடுத்து வுடறான். இன்ஸ்பெக்டர் மெய்ம்மறந்து கேட்டுட்டு இருந்துட்டு, போகும்போது, ஒங்களவிட இந்தப் பையன் நல்லாக் க்லாஸ் எடுப்பாம் போல இருக்கே சார்ன்னுட்டுப் போறார்."

பாண்டியனுக்குத் துணைக்கு ஆள் கிடைத்ததும் அவர் துள்ளினார்.

"அப்பு, இத நாம சும்மா விடக் கூடாது. ஹெட்மாஸ்டர்ட்ட போய் சொல்லுவோம். இந்தப் பயலுக்கு ட்டி ஸி குடுத்து அனுப்பச் சொல்லுவோம். அவங்க அப்பா வசதியானவர் தான். மதுர கிதுரயில போய் படிக்கப்போடட்டும். நம்ம பள்ளிக்கூடத்துக்கு இந்த மாதிரி பிஞ்சுல பழுத்ததெல்லாம் லாயக்குப்படாதுப்பு."

ஹெட்மாஸ்டரிடம் போனார்கள்.

'இந்த மாதிரி ஒரு அதிகப்பிரசங்கிப் பையன் இந்த ஸ்கூலில் இருப்பது மற்ற மாணவர்களிடையே ஒரு தாழ்வு மனப்பான்மையை வளர்க்கும், அது அவ்வளவு நல்லதல்ல' என்று தங்களுடைய வாதத்தை முன் வைத்தார்கள். "தாழ்வு மனப்பான்மை மற்ற மாணவர்களுக்கா இல்லை ஆசிரியர்களுக்கா" என்று ஹெட்மாஸ்டர் சங்கர நாராயணன் எதிர்க்கேள்வி கேட்டார். "இந்தப் பையன் ஒரு ஜீனியஸ் சார், ஒரு ப்ராடிஜி சார்" என்று அகமகிழ்ந்து சொன்னார் தலைமையாசிரியர்.

"இந்த மாதிரி ஒரு பையன் நம்ம ஸ்கூல்ல வந்து சேந்தது நமக்கெல்லாம் பெருமை சார். நீங்க சொல்றீங்கங்கறதுக்காக நா அவனுக்கு ட்டி ஸி குடுத்து அனுப்பப் போறதில்ல" என்று ஆணித்தரமாய்ச் சொன்ன ஹெட்மாஸ்டர், அடுத்த படியாய் ஓர் அணுகுண்டைத் தூக்கி டமாலென்று போட்டார்.

"இப்பத்தான் ஸ்டெல்லா டீச்சர் வந்துட்டுப் போறாங்க. இந்தப் பையனுக்கு செகண்ட் பாம்லயிருந்து போர்த் பாமுக்கு டபுள் ப்ரமோஷன் குடுக்கணும்னு

*கேட்டுட்டுப்போறாங்க. இதப்பத்தி நா கரஸ்பாண்டன்ட் கிட்டப் பேசலாம்னு இருக்கேன்."*

*இது ஏதுடா முதலுக்கே மோசமாப் போச்சே என்று அம்புரோகம் பாண்டியனும் ஒரே குரலில் "நோ நோ" என்றார்கள்.*

*"சார் நீங்க அவனுக்கு ட்டி ஸி குடுக்காட்டிப் பரவாயில்ல, ஆனா, டபுள் பிரமோஷன் மட்டும் குடுத்துராதீங்க" என்று மன்றாடினார் பாண்டியன்.*

*"நீங்க நெனக்கிற மாதிரி அவன் ப்ராடிஜியெல்லாம் ஒண்ணுமில்ல சார். ஊட்டியில அவன் ஒரு இங்லீஷ் ஸ்கூல்ல படிச்சிருக்கான். ஆலையில்லா ஊருக்கு இலுப்பப்பூ சக்கரன்னு இங்க வந்து அவனோட மேதாவித்தனத்தக் காட்டிட்டிருக்கான், அவ்ளோதான் சார்."*

*பாண்டியன் சொன்னதற்கு பலம்மாய் மண்டையை ஆட்டி ஆமோதிப்பைத் தெரிவித்தார் அம்புரோஸ்.*

*ஹெட்மாஸ்டர் அவர்களை சமாதானப்படுத்தினார். "இந்தப் பையன் டபுள் ப்ரமோஷன்க்குத் தகுதியுள்ளவனா இல்லியாங்கறதுதான் இப்ப கேள்வி, இல்லியா? அதுக்கு ஒரு டெஸ்ட் வச்சுப் பாப்போம். நீங்க ஒரு ஸப்ஜெட் குடுங்க. அத அவன்ட்ட சொல்லி அந்த ஸப்ஜெக்ட்ல டீச்சர்ஸ்க்கு க்லாஸ் எடுக்கச் சொல்வோம். அவன் வெற்றிகரமா க்லாஸ் எடுத்துட்டான்னா. அவன் உண்மையிலயே மேதைதான், அவனுக்கு டபுள் ப்ரமோஷன்தான். அவன் இந்த டெஸ்ட்ல ஜெயிக்கலன்னா டபுள் ப்ரமோஷன் இல்ல. என்ன ஸப்ஜெக்ட் சொல்லுங்க."*

*இளங்கண்ணன் 'ஷேக்ஸ்ப்பியர்' என்றார். குணசீலன் 'பதிமூணாம் வாய்ப்பாடு' என்றார். "நீங்க ரெண்டு பேரும் சித்த சும்மாயிருக்கப்பு" என்று அடக்கிவிட்டுப் பாண்டியன் 'ஜியாக்ரபி' என்றார். "அது வேண்டாம்பு. ஜியாலஜி" என்றார் அம்புரோஸ்.*

*ஒப்புக் கொள்ளப்பட்டது.*

*போகிற போக்கில் பாண்டியன் ஹெட்மாஸ்டரைப் பார்த்துச் சொன்னார்: "சார் இந்த ஸ்கூல்ல ட்டை கட்டிட்டு வர்றதுக்கு ஒங்களுக்கு மட்டுந்தான் ரைட் இருக்கு. இந்தச் சின்னப்பய டெய்லி ஒங்களுக்குப் போட்டியா ட்டை கட்டிட்டு வர்றான் சார்."*

*"இந்தச் சின்னப்பையன் எனக்குப் போட்டியில்ல பாண்டியன், நீங்க ட்டை கட்டிட்டு வந்தாத்தான் எனக்குப் போட்டி. சரி நீங்க கௌம்புங்க" என்று ஹெட்மாஸ்டர், பாண்டியனை மட்டந்தட்டி வழியனுப்பி வைத்தார்.*

*பழனி சேர்வை. நம்ம எக்ஸ்ஸுடைய தேர்ச் சாரதி.*

*பழனி சேர்வையுடைய ஜல்ஜல் ஒற்றைமாட்டு வண்டியில் தான் தினமும் எக்ஸ்ஸுக்கு சவாரி. வண்டிக்குள்ளே எக்கச்சக்கமாய் இடமிருந்தாலும் முன்னால், வண்டிக்காரருக்கு சமமாய்க் கோஸ்பெட்டியில் உட்கார்ந்து காலைக் கீழே தொங்கப்போட்டுக் கொண்டு வருவது தான் எக்ஸ்ஸுக்குப் பிடிக்கும்.*

*பழனி சேர்வை ஒரு சிவாஜி ரசிகர்.*

*ஸ்கூலுக்குப் போகிறபோதும் வருகிற போதும் ரெண்டு பேரும் பேசிக் கொண்டே தான் போவார்கள். ரெண்டு பேருக்கும் பொதுவான சப்ஜெக்ட் சினிமா. ஆனால் தனக்குத் தெரிந்திருப்பதைக் காட்டிலும் சினிமா பற்றியும் சிவாஜி கணேசன் பற்றியும் இந்தச் சின்னப் பயலுக்கு அதிக விவரங்கள் தெரிந்திருப்பது பழனி சேர்வையைப் பொறாமைப் படுத்தும்.*

*போன ஞாயிற்றுக் கிழமை மெனக்கெட்டு மதுரைக்குப் போய்ப் பரமேஸ்வரி டாக்கீஸில் 'தூக்குத் தூக்கி' பார்த்து விட்டு வந்திருந்தான் பழனி சேர்வை. அதை வைத்துத்தான் சாயங்காலம் இந்தச் சிறுவனை மடக்க வேண்டும்.*

*சாயங்காலம் பள்ளிக்கூட வாசலில் வண்டி பூட்டி ரெடியாயிருந்தது. நம்ம எக்ஸ் வண்டியில் ஏறுவதற்காக வந்த போது பின்னாலேயே ஓடிவந்தாள் ஸ்டெல்லா டீச்சர். எக்ஸுக்கு நடக்கவிருக்கும் டெஸ்ட்டைப் பற்றிச் சொன்னாள். நாற்பத்தெட்டு மணி நேரத்தில் எக்ஸ், ஜியாலஜி வகுப்புக்குத் தயார் பண்ணிக் கொண்டு வந்து, வெற்றிக் கொடி நாட்டி, எதிரிகள் முகத்தில் கரியைப் பூசி மகிழ வேண்டுமென்றாள்.*

*நாற்பத்தெட்டு மணி நேரம் அநாவசியம். நாளைக்குக் காலையிலேயே நான் ரெடி யென்று நெத்தியடி அடித்த எஸ்க்ஸைப் புளகாங்கித மிகுதியால் ஸ்டெல்லா டீச்சர், ஸ்கூல் வாசலில் வைத்தே இறுக்கிப் பிடித்து நெற்றியில் ஆவேசமாய் ஒரு முத்தம் பதித்தபோது, கழண்டு விழப்போன எக்ஸுடைய விசாலமான கண்ணாடியைப் பழனி சேர்வை மின்னல் வேகத்தில் வந்து காட்ச் பிடித்துக் காப்பாற்றினான்.*

*அடுத்த நாள், ஸிக்ஸ்த் பாம் வகுப்பறையில் எக்ஸுடைய க்லாஸ்க்கு ஏற்பாடாகியிருந்தது. வகுப்பு ஆரம்பிக்கு முன்னால், ஜியாலஜிக்குத் "தமிழ்ல என்னப்பு" என்று அம்புரோஸின் காதைக் கடித்தார் பாண்டியன்.*

*"மானத்த வாங்காதப்பு. வகுப்பக் கவனி" என்று அம்புரோஸ் தன்ஆசனத்தில் அமர்ந்தார்.*

*மாணவர்களாய்ப் பாண்டியன், குணசீலன், அம்புரோஸ், ராஜமாணிக்கம், மற்றும் ஸ்டெல்லா டீச்சர்.*

*ஸ்டெல்லா டீச்சருக்குப் பக்க பலமாய், கண்ணாடியணிந்த கமலா டீச்சர்.*

*ஆங்கிலமும் தமிழும் கலந்து க்லாஸ் எடுத்தான் எக்ஸ்.*

*"நம்முடைய பூமி, அதாவது எர்த்" என்று ஆரம்பித்தான். "நாம் வசிக்கிற இந்த பூமி, எழுபது சதவீதம் நீர்ப்பரப்பாலும், முப்பது சதவீதமே நிலப்பரப்பாலும் ஆனது" என்று கரும்பலகையில் எழுதினான். பிறகு, "பூமி என்றால் என்ன?" என்கிற கேள்வியை முன் வைத்தான்.*

*"பூமியானது, அதில் வாசம் செய்கிற ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாய் அர்த்தப்படுகிறது. ஓர் உழவனுக்கு, பூமியென்பது வளமான மண். சாலை*

அமைக்கிற தொழிலாளிக்கு, பூமி என்பது கடினமான பாறை. ஒரு கடல் மாலுமிக்கு, பூமி என்பது நாற்புறமும் நீர்ப்பரப்பு, ஓர்ஆகாய விமானிக்கு, பூமி என்பது கொஞ்சம் கடல், கொஞ்சம் மலை, கொஞ்சம் பச்சைப்பசேலென்கிற வயல் வெளி. வருங்காலத்தில் சந்திரமண்டலத்துக்குப் போகப் போகிற விண்வெளி வீரனுக்கு, பூமி என்றால் கோலப் பரப்போடு கூடிய ஒரு கோளம். இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாய் அர்த்தப்படுகிற பூமியைப் பற்றிய சரியான கணிப்பை யாரும் சொல்கிறார்களில்லை."

ஆரம்பமே அசத்தல்.

ஆசிரியர்கள் அசந்து போய் உட்கார்ந்திருக்க, நம்ப எக்ஸ், பூலோகத்திலிருந்து எம்பி, வான் வெளிக்குப் போனான். சூரியனை ஒன்பது கோளங்கள் சுற்றி வருகிற ஸோலார் ஸிஸ்டமைச் சொன்னான்.

அதைப் போல, பல கோடிக்கணக்கான ஸோலார் ஸிஸ்டம்களை உள்ளடக்கிய காலக்ஸியைப் பற்றிச் சொன்னான். இந்த காலக்ஸியைப் போல கோடானு கோடி காலக்ஸிகளை உள்ளடக்கிய யுனிவர்ஸைப்பற்றிச் சொன்னான். பிறகு திரும்ப பூலோகத்துக்குத் திரும்பினான்.

12 கோடி வருஷங்களுக்கு முந்தின க்ரிடாஷியஸ் காலத்துக்கும், 18 கோடி வருஷங்களுக்கும் முந்தின ஜுராஸிக் காலத்துக்கும், 35 கோடி வருஷங்களுக்கு முந்தின மிஸிஸிப்பியன் காலத்துக்கும், இவன் முன்னால் வாய் பிளந்து உட்கார்ந்திருந்த அனைவரையும் அழைத்துப்போய்த் திரும்பக் கொண்டு வந்து விட்டான்.

நிலநடுக்கம் மற்றும் பூகம்பங்கள் பற்றிய விளக்கங்களைப் புட்டுப்புட்டு வைத்தான்.

வாசலில் நின்று இந்தக் காட்சியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த ஹெட்மாஸ்டருக்கும் கரஸ்பாண்டன்ட்டுக்குமிடையே கிடைத்த இடைவெளியில் முகத்தை நுழைத்து இளங்கண்ணன் சிரித்துக் கொண்டிருந்தார். அம்புரோஸும் பாண்டியனும் உள் வெப்பத்தில் பொருமிக் கொண்டிருக்க, ஸ்டெல்லா டீச்சருக்குப் பெருமையோ பெருமை.

வேறே வழியில்லாமல் நம்ப எக்ஸின் மேன்மை ஏகமனதாய் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவனுக்கு டபுள் ப்ரமோஷன் என்பது உறுதி செய்யப் பட்டது.

அதன் பிறகு, எஸ்.எஸ்.எல்.ஸிக்கு அண்டர் ஏஜ் என்று எக்ஸ் ஒரு வருஷம் காத்திருந்தது, அவன் எஸ்.எஸ்.எல்.ஸி. எழுதின வருஷம் மாநிலத்திலேயே முதல் மாணவனாய்த் தேறி, செட்டியார் ஸ்கூலின் பேரை நாடறியச் செய்தது, அம்புரோஸ், பாண்டியன் உட்பட எல்லாஆசிரியர்களும் மனம் மாறி எக்ஸைக் கொண்டாடியது, எக்ஸ் பள்ளியை விட்டுப் போன போது ஸ்டெல்லா டீச்சர் அவனைக் கட்டிக் கொண்டு குமுறிக் குமுறி அழுதது, எல்லாம் ஐம்பது வருஷப் புராதனக் கதை.

புராதனம் என்றால் பழசு என்று அர்த்தமல்ல. பழம் பெருமை வாய்ந்தது என்று அர்த்தம்.

*சரி, இப்போது நிகழ்காலத்துக்கு வருவோம்.*

*இருபத்தொன்றாம் நூற்றாண்டு.*

*"என்னுடைய புத்திக் கூர்மையாலும் திறமையாலும் ஐ.ஏ.எஸ். தேறி மாநில அரசிலும் மத்திய அரசிலும் பல உயர்ந்த பதவிகள் வகித்து, பலருடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டு, பிறகு ரிட்டயராகி, இதோ நான் என்னுடைய பேரக் குழந்தைகளோடு உட்கார்ந்திருக்கிறேன், சென்னையில், ஷெனாய் நகரில்.*

*நான் என்றால் யார்?*

*நான் தான் உங்கள் எக்ஸ்."*

*இந்தப் பேரக் குழந்தைகளுக்கு இந்த எக்ஸ் கதை சுவாரஸ்யமாகவே இல்லை. "இந்த ஜியாலஜி சமாச்சாரம் எல்லாம் இப்ப கம்ப்யூட்டர்ல இருக்கே தாத்தா" என்றான் ஒருவன்.*

*"இன்ட்டர்நெட்டுக்கு உள்ள போனா ஒங்களுக்கு என்னென்ன வேணுமோ அதெல்லாம் கெடைக்குமே."*

*"பதிமூணாம் வாய்ப்பாடு கூட."*

*"கம்ப்யூட்டர்லயும் இன்ட்டர்நெட்லயும் இல்லாத விஷயமே ஒலகத்துல இப்ப கெடையாது தாத்தா."*

*"ஏன் தாத்தா, நீங்க ஸ்கூல்ல படிக்கிற காலத்துல கம்ப்யூட்டர் கெடையாதா?"*

*"நீ ஒண்ணு, பாட்டி சொன்னாங்க, தாத்தா படிக்கிற காலத்துல கால்க்குலேட்டரே கெடயாதாம், அப்புறம் எங்க கம்ப்யூட்டர்!"*

*"தாத்தா ஒங்களுக்குக் கம்ப்யூட்டர் தெரியுமா தாத்தா? நா வேணா கத்துத்தறேன் தாத்தா."*

*தப்பு. இந்த வாண்டுகளிடம் வாயைக் கொடுத்து என்னுடைய வீரப் பிரதாபங்களைப் பிரஸ்தாபித்ததே தப்பு.*

*தப்பித்தாக வேண்டும் இங்கேயிருந்து உடனடியாய். தப்பிக்க யத்தனித்த போது ஒரு வாண்டு கிண்டலாய்க் கேட்டது, "தாத்தா, கம்ப்யூட்டருக்கு ஸ்பெல்லிங்காவது ஒங்களுக்குத் தெரியுமா தாத்தா?"*

*"ஹ. பெரிய கம்ப்யூட்டர்! பெரிய ஸ்பெல்லிங்!"*

*வாண்டுகளை நோக்கி வீரத்துடன் திரும்புகிறேன். வாயைத் திறக்குமுன் வாய்க்குள்ளே சொல்லிப் பார்த்துக் கொள்கிறேன் ஸ்பெல்லிங்கை.*

*கடைசி ரெண்டு எழுத்து உதைக்கிறது. ஓ ரா அல்லது இ ரா? இ ரா அல்லது ஓ ரா?*

*ம்ஹூம். எட்டவில்லை.*

*என்னுடைய அவஸ்தையைப் பார்த்து என் பத்தினி என் உதவிக்கு வருகிறாள்.*

*"கொழந்தைங்களா, எல்லாரும் ஹோம் ஒர்க் செஞ்சாச்சா, போங்க போய்ப் படிக்க ஒக்காருங்க. தாத்தா படுக்கப் போறார்."*

*பிறகு என்னிடம் சொல்கிறாள்:*

*"ஒங்க காலம் மாதிரி இல்லிங்க இது, இந்த ஜெனரேஷன் வேற. இப்ப ஒவ்வொரு கொழந்தையும் ஒரு ஜீனியஸ். ஒவ்வொண்ணும் ஒரு ப்ராடிஜி. ஒங்க பழம் பெருமைய நீங்க இந்த இளைய தலைமுறைகிட்ட பேசிட்டிருக்காதீங்க."*

*ஆமாம். இவள் சொல்வது உண்மைதான். இது அறிவு செறிந்த ஒரு தலைமுறை. பிரகாசமான தலைமுறை. இந்தத் தலைமுறையின் ஒவ்வொரு குழந்தையும் ஒரு மேதை.*

*நான் பின்புறந் திரும்பி, இந்தியாவின் இளைய தலைமுறையைப் பெருமை பொங்கப் பார்க்கிறேன்.*

*மனசுக்கு ரொம்ப உற்சாகமாயும் சந்தோஷமாயுமிருக்கிறது.*

*(ஆனந்த விகடன், 15.12.2002)*

# கொல்லத்தான் நினைக்கிறேன்

*மவுன்ட் ரோடில், துப்பறியும் நிறுவனமொன்று திறந்து மூணு மாசமாகியும் விசேஷமாய் ஒன்றும் சாதிக்கவில்லையே என்று யோசனையாய் இருந்தது. கமிஷனரிலிருந்து கான்ஸ்ட்டபிள் வரைக்கும் அனைத்துப் போலீஸ்காரர்களுக்கும் சலாம் அடித்து வசியப்படுத்தி வைத்திருக்கிறதில் ஒரு பிரயோஜனமுமில்லை. அப்பப்ப டீச் செலவு, சிகரெட் செலவு, பிரியாணிச் செலவு என்றுதான் போய்க் கொண்டிருக்கிறதேயழிய என்னுடைய துப்பறியும் மூளையைச் செலவு செய்யக் காவல்துறையிலிருந்து அழைப்பே இல்லை.*

*காவல்துறைதான் கண்டுகொள்ளவில்லை என்றால், இந்த சென்னை மாநகரப் பொதுமக்களுக்குக் கடத்தல் விவகாரம், கள்ளக்காதல் விவகாரம் என்று ஒரு பிரச்சனையுமே இல்லாமல் போய்விட்டதா என்ன?*

*அட்லீஸ்ட் கல்யாணப் பெண்களை, மாப்பிள்ளைகளை மோப்பம் பிடிக்கக்கூட என்னைக் கூப்பிடுகிறார்களில்லை.*

*மதுபாலா என்கிற அழகான அம்சமான அசத்தலான துப்பறியும் நிபுணியை அஸிஸ்ட்டன்ட்டாய் அமர்த்திக் கொண்டதுதான் நான் கண்ட லாபம். அவளும் இல்லையென்றால் வாழ்க்கை ரொம்ப நொந்து போகும்.*

*மது கூட இன்னும் வந்து சேரவில்லையே என்று கவலையாயிருந்தபோது கதவு தட்டப்பட்டது. மதுபாலா தானோ? நோ நோ, அவளுக்குக் கதவைத் தட்டி விட்டு நுழைகிற மானர்ஸெல்லாம் கிடையாதே என்று யோசித்தவாறே "ப்ளீஸ் கம் இன்" என்றேன்.*

*ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாய் ஒருவன் வந்தான். எந்த அழகான பெண்ணையும் கட்சி மாறிவிடச் செய்யக்கூடிய விசேஷமான உருவம். கடவுளே, இவன் இங்கேயிருந்து கிளம்புகிற வரை மது வந்துவிடக் கூடாது.*

*"மிஸ்டர் பொற்கைப் பாண்டியன்?"*
*"நாந்தான். வாங்க சார், ஒக்காருங்க."*
*"சார், ஒங்ககிட்ட ஒரு உதவிக்கு வந்திருக்கேன்."*
*"அட் யுவர் ஸர்வீஸ்."*
*"சார், என் பேர் விக்ரம், என் ஒய்ஃப் பேர் சாதனா. "*
*"அழகான பேர். ஐ மீன், ஒங்க பேர்."*
*"சட்டுபுட்டுன்னு விஷயத்துக்கு வர்றேன்."*
*"வாங்க."*
*"சாதனாவுக்கு ஒரு காதலன்."*
*"நெனச்சேன்."*
*"இப்ப நா எதுக்காக ஒங்ககிட்ட வந்திருக்கேன்னா…"*

“தெரியும். அந்தக் காதலன் யார், அவன் எங்க இருக்கான், என்ன செய்யறான், எப்படி ஒங்க கண்ல மண்ணத் தூவிட்டு ரெண்டு பேரும் மீட் பண்றாங்க, மீட் பண்ணி என்ன என்ன பண்றாங்கங்கற வெவரமெல்லாம் நா சேகரிச்சு ஒங்களுக்கு ரிப்போட் தரணும்.”

“ஷிட். இந்த வெவரமெல்லாம் எனக்கு ஏற்கனவே தெரியும்.”
“அப்ப எனக்கு வேலையே கெடையாதா?”
“இருக்கு. அத விடப் பெரிய வேல.”
“?”
“சாதனாவ க்ளோஸ் பண்ணணும்.”

குபுக்கென்று நாற்காலியிலிருந்து எம்பினேன்.
“சாதனாவ?”
“க்ளோஸ். அதாவது கொலை.”

‘அடக் கொலைகாரப்பாவி! என்னைத் துப்பறியும் நிபுணன் என்று நினைத்தாயா, இல்லை தாவூத் இப்ராஹீமோட அடியாள் என்று நினைத்தாயா? ஆள் பஞ்சமா பாதகத்துக்கு அஞ்சாதவனாய் இருப்பான் போல. கவனமாய்க் கையாள வேண்டும்.’

“சார், அவ்வளவு பெரிய வேலயெல்லாம் செஞ்சு எனக்கு அனுபவம் இல்ல. நீங்க வேற பெரிய ஏஜன்ஸியாப் பாருங்க. இப்ப நான் வேறொரு வேலயா வெளியக் கௌம்ப வேண்டியிருக்கு. நீங்க கௌம்புனீங்கன்னா நானும் கௌம்பலாம்.”

சர்வ இளக்காரமாய் என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு, விக்ரம் வெளியேறினான்.

‘வந்த ஒரு கிராக்கியும் கொலைகாரக் கிராக்கியாகவா வர வேண்டும்!’ வெறுப்பாயிருந்து.

மதுபாலாவுக்கு உடம்பு சவுகரியமில்லை, இன்றைக்கு வரமாட்டாள் என்று ஃபோன் வந்தது. என்ன இழவுக்கு ஆஃபீஸைத் திறந்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டும். வீட்டில் போய் மிர்ச்சியோ சூரியனோ கேட்டுக் கொண்டு ஜாலியாய்ப் படுத்துக்கிடக்கலாம் என்று பூட்டிக் கொண்டு கிளம்பி விட்டேன்.

அடுத்த நாள் காலையில் மது வந்தாள். “ஸாரி பாஸ். நேத்து கௌம்புற நேரத்துல எனக்கு ச்சம் வந்துருச்சு, அதான் வரமுடியல” என்றாள்.

அடிப்பாவி, அச்சம் மடம் நாணம் ஏதுமில்லாமல் பச்சையாய்ச் சொல்கிறாளே என்றிருந்தது. இருந்தாலும், என்னிடத்தில் ஓர் அந்நியோன்னியம் இருக்கப்போய்த்தானே ஒளிவு மறைவில்லாமல் பேசுகிறாள் என்று ஆறுதலாயுமிருந்தது. போடி, உன் அந்நியோன்னியமெல்லாம் வெறும் வாய்ப்பேச்சோடு சரி.

*இவளோடு பேசிக் கொண்டாவது இருக்கலாம். நேற்று* Radio on demand *டில் பங்கு கொண்டதை இவளோடு பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டிருந்த போது, கதவில் நாக்கிங்.*

*'இன்றைக்கு என்ன கிராக்கியோ' என்று யோசித்தவாறே கம் இன் என்றேன். வந்தவன், ஷேவ் செய்யாத முகத்தோடும் சோகத்தோடும் வந்தான்.*

*"சார், எம்பேர் கிஷோர்."*
*"கிஷோர் குமார்?"*
*"நோ. வெறும் கிஷோர். நீங்கதான மிஸ்டர் பொற்கைப் பாண்டியன்?"*
*"ஆமா. சொல்லுங்க."*
*"என்னோட காதலிய ஒரு அயோக்கியன் நேத்து கொல பண்ணிட்டான் சார்."*
*'கொலை! காதல் கொலை!' எனக்கு வேலை வந்து விட்டது.*

*எழுந்து, அவனுடைய கைகளை ஆதரவாய்ப் பற்றிக் கொண்டேன்.*

*"கவலப்படாதீங்க கிஷோர். அந்த அயோக்கியன் யார்னு கண்டுபிடிச்சு தூக்குல ஏத்திருவோம்."*
*"நீங்க கண்டு பிடிக்க வேண்டாம் சார். யார்னு எனக்கேத் தெரியும்."*

*சப்பென்று ஆகிவிட்டது.*
*சோர்ந்து உட்கார்ந்தேன்.*
*"என் வேலய நீங்களே செஞ்சுட்டீங்க. யார்ங்க அந்தக் கொலகாரன்?"*
*"என் காதலியோட ஹஸ்பண்ட்."*
*நிமிர்ந்து உட்கார்ந்தேன்.*

*மூளையில் ஒரு பல்ப் மினுக்கென்றது.*

*"விக்ரம்?"*

*"யெஸ், யெஸ்" ஸென்று ஆச்சர்யப்பட்டான்.*

*"எப்படி சார் தெரியும் ஒங்களுக்கு? இந்தக் கேஸ் இன்னும் பேப்பர்ல வரலியே?"*

*பேப்பர் பாத்தா ஒரு டிடக்ட்டிவ் கேஸப்பத்தித் தெரிஞ்சுக்குவான்? பாவி விக்ரம் சாதனாவைக் கொலையே பண்ணிட்டானா!*

*"சாதனா" என்கிற பெயரை நான் உச்சரித்ததும் கிஷோர் நொறுங்கிப் போனான்.*

*"சாதனா, என் சாதனா" என்று அரற்றினான்.*

*"சாதானாவோட இனிஷியல் வி னா மிஸ்டர் கிஷோர்?"*

*"அதில்ல மிஸ்டர் பொற்கை. அவ என்னோட சாதனா. எனக்கே எனக்கான சாதனா. காலேஜ் டேய்ஸ்லயிருந்தே காதலிச்சோம் சார். உயிருக்குயிராக் காதலிச்சோம்."*

*ஒரு இன்ட்டர்வெல் விட்டான். கல்லூரிக் காதல் நாட்களை அசை போட்டிருந்திருப்பான்.*

*ஆச்சர்யமாயிருந்தது — பயல் மதுபாலாவின் பக்கம் பார்வையைத் திருப்பவேயில்லை.*

*உண்மையிலேயே சாதனாவை விசேஷமாய்க் காதலித்திருக்கிறான். விஸ்வாசமான காதல். பாசமுள்ள காதல்.*

*"அப்பறம்?" என்று நான் உசுப்பிவிட்டேன்.*

*"அப்பறம், இந்த வில்லன் விக்ரம் நடுவுல புகுந்தான். சாதனாவோட அப்பா மனசக் கெடுத்து, என்னோட சாதனாவக் கட்டாயக் கல்யாணம் பண்ணிக்கிட்டான். ஆனா, கல்யாணத்துக்கப்பறமும் சாதனாவும் நானும் ரகஸ்யமா மீட் பண்ணிட்டுதானிருந்தோம். விக்ரமுக்கு விஷயம் தெரிஞ்சு போச்சு. இதனால சாதனாவுக்கும் அவனுக்கும் அடிக்கடி சண்ட. சாதனாவுக்கு ஒரு பெண் கொழந்த பொறந்தது. அனுராதா."*

*"அனுராதா தனக்குப் பொறந்த கொழந்தயில்ல, அது கிஷோருக்கு, அதாவது ஒங்களுக்குப் பொறந்த கொழந்தன்னு விக்ரம் அபாண்டமாப் பழி சொமத்தினான்."*

*"அபாண்டமொண்ணுமில்ல பொற்கை, உண்மை அதுதான் (அடப்பாவி!). அனுராதாவுக்கு இப்ப நாலு வயசு. சரி, விஷயத்துக்கு வர்றேன். போன வாரம் ஒரு நாள் நான் சாதனாவோட ஒரு விவகாரமான வேலையில ஈடுபட்டிருந்தப்ப.."*

*"விகாரமான?"*

*"இல்ல. விவகாரமான."*

*"விவரமாச் சொல்லுங்க அந்த விவகாரத்த."*

*கிஷோர் தயங்கினான்.*

*"டாக்டர்ட்டயும் டிடக்ட்டிவ்ட்டயும் எதயும் மறக்யக் கூடாது கிஷோர்" என்று கீ கொடுத்தேன்.*

*முதன் முறையாய்க் கிஷோர் மதுபாலாவைப் பார்த்தான், சங்கடத்துடன்.*

*"மதும்மா, கீழ போய் டீ சொல்லிவிட்டு வாயேன்." என்று அவளை அப்புறப்படுத்திவிட்டு, ஆவலோடு கிஷோரைப் பார்த்தேன்.*

*"பொற்கை, அந்த விவகாரத்த இங்கிலீஷ்ல சொன்னாத்தான் ரசிக்கும்" என்றான்.*

*"எனக்கு இங்கிலீஷ் தெரியும், சொல்லு" என்றேன். ஏகவசனம் இயல்பாய் வந்துவிட்டது.*

*"அதாவது, சாதனாக்கிட்ட* when I was negotiating a curve, *விக்ரம் பாத்துட்டான்" என்று கிஷோர் அனுபவித்துச் சொன்னான்.*

*காதலியை இழந்த சோகத்துக்கு மத்தியிலும் ரசனையோடு அவன் சொன்ன ஆங்கில வாக்கியத்தை நானும் ரசித்தேன்.*

*"அப்புறம்?"*

*"அப்புறமென்ன, அப்பவே ப்ளான் பண்ணிட்டான் சாதனாவ க்ளோஸ் பண்ணிர்றதுன்னு. ஆள வச்சு வேலய முடிக்க ட்ரை பண்ணியிருக்கான். அது சரியா வராமப் போகவும் அவனே ஒரு மாஸ்டர் ப்ளான் போட்டு ஒரே கல்லுல ரெண்டு மாங்கா அடிச்சிட்டான்."*

*"அதாவது?"*

*"கொழந்த அனுராதா கைக்கு எட்டற மாதிரி துப்பாக்கிய லோடு பண்ணி வச்சிருக்கான், கொழந்த விளையாட்டுப் போல துப்பாக்கிய எடுத்து சாதனாவப் பாத்து ட்ரிகர அழுக்கிருச்சு. நெத்தியில புல்லட் பாஞ்சு ஸ்பாட்லயே சாதனா க்ளோஸ்."*

*நான் சுறுசுறுப்பானேன். மது ஆர்டர் செய்த டீ சுறுசுறுப்பை மேலும் கூட்டியது.*

*"இதப் பாத்தது யார்" என்றேன்.*

*"கொழந்தயே சொல்லுது" என்றவன், திரும்பவும் புலம்ப ஆரம்பித்து விட்டான்.*

*"பொற்கை, அனுராதாவ என்ன பண்ணுவாங்க? ஜுவனைல் ஸ்கூலுக்கு அனுப்பிச்சிருவாங்களா பொற்கை? ஐயோ, என்னோட கொழந்த எனக்கு வேணும் பொற்கை, சாதனா தான் போய்ட்டா, கொழந்தயவாவது எனக்கு மீட்டுக் குடு பொற்கை."*

*நான் அவனைத் தேற்றினேன்.*

*"அதெல்லாம் அனுராதாவுக்கு ஒண்ணும் ஆகாது கிஷோர். எனக்கு ஒரு க்ளூ கெடச்சிருக்கு, அது சரியா ஒர்க் அவுட் ஆகும்னு நம்பிக்கை இருக்கு. பயப்படாத, நா பாத்துக்கறேன். நீ எனக்கு ஒரேயொரு உதவி மட்டும் செய்."*

*"செய்றேன் பொற்கை, சொல்லு."*

"வாக்கியத்துக்கு வாக்கியம் பொற்கை பொற்கைன்னு கூப்புடாத. ஒண்ணு, முழுப்பேரச் சொல்லிக் கூப்புடு, இல்ல, பாண்டியன்னு கூப்புடு."

"சரி, இனிமே பாண்டியன்னே கூப்புடுறேன் பொற்கை" என்று முதன் முறையாய் சிரித்தான்.

அவனை ஸ்பாட்டுப் போய்க் காத்திருக்க அனுப்பி விட்டு, மதுபாலாவோடு பைக்கில் கிளம்பினேன்.

மதுவின் நெருக்கம் ஒரு மயக்கத்தைத் தந்தது. மதுபாலாவோடு பைக்கில் போவது வாழ்க்கையின் மிகச் சொற்பமான அற்ப சந்தோஷங்களில் ஒன்று.
சாதனாவின் வீட்டு ஹாலில் அஸிஸ்ட்டன்ட் கமிஷனர் ஹில்பர்ட், இன்ஸ்பெக்டர் பாஷா மற்றும் காவலர்கள் ஆஜராயிருந்தனர். எல்லாம் தோஸ்துகள் தான். டீ தோஸ்த், சிகரெட் தோஸ்த், பிரியாணி தோஸ்த்.

குழந்தை அனுராதா கலவரம் தோய்ந்த முகத்துடன் ஒரு மூலையில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தது. விக்ரமும் கிஷோரும் போலீஸோடு தனித்தனியாய் சம்பாஷணையில் இருந்தார்கள்.

மதுவும் நானும் உள்ளே நுழைந்ததும் விக்ரம் என்னைப் புதிராயும் எதிரியாயும் பார்த்தான்.

குழந்தையை நான் விசாரிக்க ஏஸியிடம் அனுமதி கோரினேன்.

"எத்தனையோ தடவ விசாரிச்சாச்சு" என்று பாஷா ஒப்புக்கு ஆட்சேபித்தார். அவரை மீறி எனக்கு அனுமதி கொடுத்து ஏஸி தன்னுடைய ஆளுமையை நிலை நாட்டினார்.

பீதியிலிருந்த குழந்தை தயங்கித் தயங்கிப் பேசியது.

"டாடி எனக்கு ஒரு ட்டாய் கன் வாங்கிக் குடுத்தாங்க அங்க்கிள். என்னோட டெடிபேரும் நானும் அந்த கன்ன வச்சு வெளயாடிட்டிருந்தோம். மம்மி அந்த ஸோஃபால ஒக்காந்து புக் படிச்சிட்டிருந்தாங்க. மம்மி, டெடி பேருக்கும் எனக்கும் பசிக்குது மம்மின்னு நா சொன்னேன். மம்மி சொன்னாங்க, ஒன் டெடிபேரும் நீயும் கொஞ்சம் வெய்ட் பண்ணுங்க, நா இந்த புக்க முடிச்சிட்டு வர்றேன். அப்டின்னு சொன்னாங்க. இப்ப ஒடனே நீங்க தரலன்னா நாங்க ஒங்கள ஷூட் பண்ணிருவோம்னு நா சொன்னேன். சீ போடின்னு சிரிச்சிட்டு மம்மி புக் படிச்சிட்டிருந்தாங்க. நா ஷூட் பண்ணேன். மம்மி நெத்தில புல்லட் பட்டுச்சு. மம்மி அப்படியே ஸோஃபால பின்னால சாஞ்சுட்டாங்க. எனக்கு பயம்மாயிருந்தது அங்க்கிள். அப்பறந்தான் டாடி வந்தாங்க. போலீஸ்காரங்க வந்தாங்க. அது ட்டாய் கன் இல்லியாம். டாடியோட நிஜத் துப்பாக்கியாம். எங்கையில ரேகை எடுத்தாங்க. மம்மிய ஹாஸ்பிடலுக்குக் கொண்டுபோயிருக்காங்க. மம்மி எப்ப வருவாங்க அங்க்கிள்?"

அந்தத் தாயில்லாக் குழந்தையைப் பார்க்கப் பாவமாயிருந்தது.

*இது தனக்குப் பிறந்த குழந்தையில்லையென்று விக்ரம், இதையும் ஒரு வழி பண்ணிவிட சதித்திட்டம் தீட்டியிருக்கிறான். கிஷோர் சொன்ன மாதிரி ஒரே கல்லில் ரெண்டு மாங்காய். ஆனால், கிஷோருக்குப் புலப்படாத ஒரு விஷயம் என்னுடைய துப்பறியும் மூளைக்கு எட்டியது.*

*குழந்தை அனுராதாவின் கையில் விளையாட்டுத் துப்பாக்கியைக் கொடுத்தேன்.*

*"பாப்பா, மம்மிய நீ ஷூட் பண்ணப்ப நீ எங்கயிருந்த?"*

*"நானும் என்னோட டெடிபேரும்."*

*"அதான். நீங்க ரெண்டு பேரும் எங்க இருந்தீங்க?"*

*அனுராதா பொஸிஷனுக்கு வந்தாள்.*

*"இந்த டீப்பாய் பக்கத்துலதான் ரெண்டு பேரும் ஒக்காந்து வெளயாண்டுட்டிருந்தோம் அங்கிள். டீப்பாய் மேல கன் இருந்தது. நா அத எடுத்து, நின்னுக்கிட்டு மம்மிய ஷூட் பண்ணேன். மம்மி அந்த ஸோஃபால இருந்தாங்க."*

*மதுபாலாவின் கையில் ஒரு புஸ்தகத்தைக் கொடுத்து புஸ்தகம் வாசிக்கிற மாதிரி ஸோஃபாவில் அமரச் செய்தேன்.*

*"இப்டித்தான் மம்மி ஒக்காந்திருந்தாங்க" என்று உறுதி செய்தது குழந்தை.*

*இன்ஸ்பெக்டர் பாஷா முணுமுணுத்தார். "நீங்க ஏன் நடுவுல புகுந்து குட்டயக் கொழப்பறீங்க பாண்டியன். கொழந்தயோட ஃபிங்கர் ப்ரின்ட்ஸ் மாட்ச் ஆகுது, புல்லட் மாட்ச் ஆகுது. விக்ரம் அஜாக்கிரதையா விட்டுப்போன துப்பாக்கி கொழந்த கையில மாட்டிக்கிச்ச, அம்மா கத முடிஞ்சி போச்சு, அவ்ளோ தான் மேட்டர்."*

*நான் பாஷாவிடம் என் கேள்வியை வைத்தேன். "அது எப்படி சார் இந்தக் கொழந்த குறிபாத்து நடு நெத்தியில சுட முடியும்?"*

*பாஷா சர்வ அலட்சியமாய் பதில் சொன்னார். "நடு நெத்தி இல்ல பாண்டியன். இடது பக்க நெத்தி."*

*"அப்படி வாங்க வழிக்கி" என்று நான் பாய்ன்ட்டைப் பிடித்தேன்.*

*"கொழந்த ஸோஃபாவுக்கு வலது பக்கம் நிக்கிது. இந்த பொஸிஷன்லயிருந்து ஷூட் பண்ணா, புல்லட் நெத்தியில வலது பக்கம்தான் பாயும். இடது பக்க நெத்தியில புல்லட் பாயச் சான்ஸே இல்ல."*

*ஏஸி சுவாரஸ்யமானார். "பாண்டியன், நீங்க என்ன சொல்றீங்க?"*

"விளையாட்டுத் துப்பாக்கி இருந்த எடத்துல நெஜத் துப்பாக்கி வந்தது. தற்செயலோ, அஜாக்கிரதையாலேயோ இல்ல, அது திட்டமிட்டுச் செய்யப்பட்டது."

"இருக்கலாம், ஆனா தான் தான் சுட்டதாக் கொழந்த சொல்லுதே பாண்டியன்?"

"கொழந்த ட்ரிகர அழுத்தியிருக்கலாம். புல்லட் எங்கேயாவது சுவர்ல பட்டுத் தெறிச்சிருக்கலாம், இல்லாட்டி ஸோஃபாக்குள்ள போயிருக்கலாம்."

"அப்ப விக்ட்டிம்மோட நெத்தியில இருந்த புல்லட்?"

"வேற ஒரு இதே மாடல் துப்பாக்கியால இடது பக்கம் மறைவா இருந்து வேற ஒருத்தர் ஷூட் பண்ணியிருக்கார்."

"வேற ஒருத்தர்ன்னா?"

"இந்தத் துப்பாக்கியோட சொந்தக்காரர்தான். இதே மாடல் துப்பாக்கி அவர் ரெண்டு வாங்கியிருக்கார்."

"இல்லியே ரிஸீப்ட்டக் காட்டினாரே விக்ரம், ஒண்ணுதான வாங்கியிருக்கார்!"

"ரெண்டு துப்பாக்கிக்கி ரெண்டு ரிஸீட் வாங்கியிருக்கலாம். இல்லாட்டி, வேற வேற சந்தர்ப்பத்துல வாங்கியிருக்கலாம்."

ஏ.ஸி. யோசனையிலாழ்ந்தார்.

நான் தொடர்ந்தேன்.

"கொழந்தயோட விளையாட்டுத் துப்பாக்கி இருந்த எடத்துல, கொழந்தயோட கண்ணுல படற மாதிரி, கைக்கு எட்ற மாதிரி ஒரு நிஜத்துப்பாக்கிய ரெடி பண்ணி வச்சிட்டான் விக்ரம். கொழந்த ட்ரிகர அமுக்கினா அம்மா க்ளோஸ். இருந்தாலும் அது மிஸ்ஃ பயர் ஆயிருச்சின்னா என்ன பண்றதுன்னு எச்சரிக்கையா தானும் இன்னொரு துப்பாக்கியோட மறஞ்சிருந்திருக்கான். அவன் பயந்த மாதிரியே கொழந்த சுட்டது மிஸ்ஃபயர் ஆயிருச்சு. இவன் வேலய முடிச்சிட்டான். கொழந்த தான் தான் சுட்டேன்னு கன்ஃபஸ் பண்ணும்னு விக்ரமுக்குத் தெரியும்."

"யூ ஆர் ரைட் பாண்டியன்!"

அங்கேயிருந்து மெல்ல நழுவ யத்தனித்த விக்ரமை பாஷாவும், ரெண்டு காவலர்களும் ஒரே அமுக்காய் அமுக்கிப் பிடித்தார்கள்.

குழந்தையை நோக்கிக் கிஷோர் ஓடினான்.

"அனு, என் அனு. என்னோட கொழந்த!" என்று அதை வாரியெடுத்துக் கொண்டு முத்த மழை பொழிந்தான்.

*இன்னும் ஸோஃபாவில் ஜம்மென்று உட்கார்ந்திருந்த மதுபாலாவைப் பார்த்து நான் கண்ணடித்ததை ஆமோதித்து அவள் அழகாய்ச் சிரித்தாள்.*

*அந்தக் கோணத்தில் அவளுடைய அங்க லட்சணங்களை அவதானித்தபோது, வளைவுகளைப் பற்றிக் கிஷோர் சொன்ன ஆங்கில வாக்கியம் நினைவுக்கு வந்தது.*

*(குங்குமம், 14.11.2003)*

# தர்ட் க்லாஸ்

*"எக்மோர் ஸ்டேஷனுக்குப் போறதுக்குக் கால்டாக்ஸி ஒண்ணு அமத்திக்கிருவோமா டேய்" என்று சித்தப்பா கேட்டதற்கு, "கால் டாக்ஸி போறாது சித்தப்பா, முழு டாக்ஸியே போவோம்" என்று நான் ஜோக் அடித்ததை ரசிக்காமல், சித்தப்பா முறைத்தார்.*

*ஏற்கனவே என் பேரில் அதிருப்தியாயிருக்கிறார். நான் தமாஷ் பண்ணியிருக்கக் கூடாது.*

*மத்யானந்தான் சிங்கப்பூரிலிருந்து ப்ளைட்டில் வந்தார். என்னை ஏர் போர்ட்டுக்கு வரவேண்டாமென்று சொல்லியிருந்தார். தானாகவே ஒரு டாக்ஸி பிடித்துக் கொண்டு ஹாஸ்டலுக்கு வந்து சேர்ந்து விட்டார்.*

*சில மணி நேரம் என்னுடைய அறையில் ஓய்வு எடுத்துவிட்டு, ராத்திரி நெல்லை எக்ஸ்ரஸ்ஸில் ரெண்டு பேரும் திருநெல்வேலிக்குக் கிளம்புவதாய் ஏற்பாடு.*

*வந்தவர், "ஏ பாவி, என்ன டேய் ஒங்க மெட்ராஸ்ல வெயில் இந்தக் கொளுத்துக் கொளுத்துது!" என்று தாகத்துக்குத் தண்ணி கேட்டார்.*

*அப்போது தான் நான் அந்தத் தப்பைச் செய்தேன். கவனமில்லாமல், அந்த டம்ளரில் தண்ணீர் கொண்டு கொடுத்தேன்.*

*டம்ளரில் மேலே பொறித்திருந்த வாக்கியத்தைப் பார்த்து விட்டார். "என்னது டேய் இது?"*

*"எதக் கேக்கிக சித்தப்பா."*

*"தெரியாத மாறி கேக்கியே என்ன டேய்? இது கீதா கபேயில் திருடியதுன்னு இதுல எழுதியிருக்குல்லா, அதத்தாம்ல கேக்கேன்."*

*"அது... சித்தப்பா... இது என் ரூம் மேட்டோட டம்ளர் சித்தப்பா."*

*"ஒன் ரூம் மேட் படிக்யானா, இல்ல இப்படியொரு தொழில் செஞ்சுக்கிட்டு அலையுதானா?"*

*"நல்ல பையன் சித்தப்பா அவன். நம்ம ஊர்க்காரந் தான். புள்ளமார்ப்பையன். நல்லா படிப்பான்."*

*"அதெல்லாஞ் சரிதாண்டேய். களவாணிப் பயபுள்ளயா இருப்பாம் போலயிருக்கே."*

*"அது... சும்மா ஒரு த்ரில்லுக்காக செய்யறது சித்தப்பா... இந்த வயசுல எல்லாரும் செய்யறதுதான சித்தப்பா..."*

*"ஆமாண்டேய், நாங்கள்ளாம் இப்படித்தான் களவாண்டுக்கிட்டு அலஞ்சோமாக்கும்?"*

*"சும்மா ஜாலிக்கி இப்படிப் பண்ணுவான் சித்தப்பா. பெறவு, சத்தங்காட்டாமக் கொண்டுகிட்டுப் போய் எடுத்த எடத்துல வச்சிருவான்."*

*"மாட்டிக்கிட்டா எப்படியிருக்கும் தெரியும்லா? இந்த மாதிரிச் சேட்டக்காரப் பயகூடல்லாம் சேராத டேய். அவன எங்க, இங்ஙனதான் இருக்கானா?"*

*"இல்ல சித்தப்பா, ஸெமஸ்டர் முடிஞ்சி நேத்தே ஊருக்குக் கெளம்பிட்டான். நாந்தான் ஒங்களுக்காகப் பின்தங்கிட்டேன்."*

*"திரும்பி வந்தாம்னா, அவனக் களட்டி வுட்டுட்டு மறு சோலி பாரு. இல்லாட்டி நீ வேற ரூம்புக்கு மாறிக்க. என்ன டேய் நாஞ் சொல்றது?"*

*"ஆட்டும் சித்தப்பா" என்று சித்தப்பாவுக்கு ஒப்புக்கு ஒரு ஒப்புதல் அளித்துவிட்டுட் டாப்பிக்கை மாற்றினேன்.*

*"இந்தாங்க சித்தப்பா டிக்கட். நெல்லை எக்ஸ்ப்ரஸ். டிபாச்சர் ஏழு ப்பது. பஸ்ட் க்லாஸ்."*

*"ப்ஸ்ட் க்லாஸா? ஸெகண்ட் ஏஸில்ல டேய் எடுக்கச் சொன்னேன்?"*

*"அதவிட இது காசு கம்மி சித்தப்பா."*

*"அடக் கோட்டிக்காரா, பத்து இருவது கூட ஆனாலும் ஏஸி ஏஸி தானல. இந்த வேக்காட்ல திருநவேலி போய்ச் சேர்றதுக்குள்ள மனுசன் செத்து சுண்ணாம்பால்ல போயிருவான். சொன்னதச் செய்ய மாட்டிங்கியே, முந்திரிக் கொட்ட வேல பாக்கியே டேய்."*

*சித்தப்பாவுக்கு காசு மிச்சம் பிடித்துக் கொடுக்கிற முயற்சியில் அவரிடம் வாங்கிக் கட்டிக் கொண்டது தான் மிச்சம். பிறகு அவரிடம் பேச்சுக் கொடுக்கவில்லை.*

ஒரு டாக்ஸியில் லக்கேஜை ஏற்றிக் கொண்டு ரெண்டு பேரும் எழும்பூர் வந்து சேர்ந்தோம். ஊருக்குப் போய் அப்பா அம்மா தங்கச்சிகளைப் பார்க்கப்போகிற சந்தோஷத்தோடு, வாழ்க்கையில் முதல் முதலாய் முதல் வகுப்பில் பிராயணஞ் செய்கிற உற்சாகமும் சேர்ந்து கொண்டது.

சித்தப்பா சொன்னது போல, ஸெகண்ட் ஏஸி என்றால் இன்னும் விசேஷமாய்த்தான் இருந்திருக்கும் போல. பரவாயில்லை, படிப்படியாய் முன்னேறுவோம்.

*"ஏஸின்னா, அவனே பெட் ஸ்ப்ரட், பிளாங்க்கட், பில்லோ எல்லாம் குடுத்துருவான்" என்று சொல்லிக் கொண்டே சித்தப்பா அவருடைய பிரம்மாண்டமான ஸூட்கேஸைத் திறந்து ஒரு தலகாணியும் போர்வையும் எடுத்து லோயர் பர்த்தில் அவருடைய படுக்கையை ஒழுங்கு செய்து கொண்டார்.*

*"ஒனக்கு விரிச்சிப் படுக்க என்னமும் இருக்கா டேய்?"*

*"எனக்கு வேண்டாம் சித்தப்பா."*

*"சரி இந்தப் பில்லோவ வேணா தலக்கி வச்சிக்க."*

*விமானப் பயண அடையாளமாய் டாக் ஒன்று தொங்கிய தன்னுடைய ஹாண்ட் பாகேஜின் ஸிப்பைத் திறந்து சித்தப்பா ஒரு குட்டித் தலகாணியை எடுத்தார். "புதுசு டேய், அழுக்காக்கிராமப் பாத்துக்க" என்கிற வேண்டுகோளோடு அதை என்னிடம் தந்தார்.*

*சிக்கனமாய்க் கைக்கு அடக்கமான, அழகான, விசேஷமான மினி பில்லோ.*

*அதன் ஒரு முனையில், சின்னதாய் அழகாய் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்தது சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் என்று.*

*(நன்றி :ஆனந்த விகடன்)*

# நான் பேச நினைப்பதெல்லாம்

*"என்ன கம்னு ஆட்டீங்க?" என்றாள்.*

*கம்னு ஆகாமல் என்ன செய்வது. இன்றைக்கு எனக்கு தியேட்டருக்குப் போய்ப் படம் பார்க்கிற மூடே இல்லை. டிவியில் லேட்டஸ்ட் ஜேம்ஸ் பாண்ட் படம் போடுகிறான். நொறுக்குத் தீனியைக் கொறித்துக் கொண்டு வீட்டில் உட்கார்ந்து ஆங்கிலப் படத்தை எஞ்ஜாய் பண்ணுவதை விட்டு விட்டு....*

*படம் முடிந்து, தியேட்டரிலிருந்து வெளியேறினோம்.*

*"நா டிரைவ் பண்றேங்க ப்ளீஸ்", என்று இவள் கேட்கவில்லை.*

*காரின் கதவை நான் திறந்து விட்டதும் சமர்த்தாய்ப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.*

*பிறகு மெல்ல வாயைத் திறந்தாள்.*

*"க்ளைமாக்ஸ்ல சண்ட ஸீன் நல்லா எடுத்திருக்காங்க இல்ல?"*

*"இதெல்லாம் ஒரு சண்டயா? ஜாக்கிச்சான் படத்துலயும், ஸில்வஸ்டர் ஸ்டால்லோன் படத்துலயும் சண்டயப் பாத்துட்டு, இந்தத் தமிழ்ப்பட சண்டயெல்லாம் பார்க்க முடியுமா? "*

*"பாட்டு பரவாயில்லல்ல? இப்ப வர்ற படங்கள்ல உள்ளப் பாட்டுக்களப் பார்க்க இது எவ்வளவோ தேவல. இல்லிங்க?"*

*"ஆலையில்லா ஊருக்கு இலுப்பப்பூ சக்கர. இதெல்லாம் ஒரு பாட்டா? எம்.எஸ்.விஸ்வநாதன், கேவி மஹாதேவன் மாதிரி வருமா?"*

*"புதுசா ஒரு வில்லன் வர்றானே, ஆள் வித்யாசமா இருக்கான் இல்ல? நல்ல செலக்ஷன். "*

*"ஐயே, ஓமக்குச்சி மாதிரி ஙேன்னு இருக்கான். என்ன நல்ல செலக்ஷன்?"*

*"சரி, காமெடியாவது புடிச்சதா ஓங்களுக்கு?"*

*"நாகேஷ் காமெடியையும் சந்திரபாபு காமெடியையும் ரசிச்சிட்டு, இந்தக் காமெடியையெல்லாம் சகிச்சிக்கணும்னு தலையெழுத்து. கஷ்டம்டா சாமி."*

*"என்னங்க இவ்வளவு சலிச்சிக்கிறீங்க. இந்தப் படத்துல எதுவுமே புடிக்கலியா ஓங்களுக்கு?"*

"ஓ புடிச்சதே. ஹீரோயின், மலையாள புதுமுகம். ஆள் ஸ்வீட்டா இருக்கா."

"ஐயோ பாவம்னு இருக்கா. ஐயாவுக்கு ஸ்வீட்டா இருக்காளாம்ல!" சிரித்தபடியே தாடையில் ஒரு இடி இடித்தாள்.

"ஒங்களுக்கும் எனக்கும் ஏங்க டேஸ்ட்ல இவ்வளவு வித்யாசம் இருக்கு!"

வழியில் ஒரு ரெஸ்ட்டாரன்ட்டில் சாப்பிட்டுவிட்டு, வீடு வந்து சேர்ந்தபோது மணி பதினொண்ணைத் தாண்டி விட்டது.

வீட்டை நெருங்கினபோது கேட்டில் ஒரு தடங்கல்.

ஒரு ப்ளாட்ஃபாம் குடும்பம், பாதி கேட்டை மறித்துக் கொண்டு படுத்திருந்தது.

படுத்திருந்தவர்களை எழுப்பி நகர்த்தாமல் கார் உள்ளே போக முடியாது.

காரிலிருந்து இறங்கிக் குரல் கொடுத்தேன்.

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார்கள்.

அரை நித்திரையில், எழும்ப உடன்படாத சிறுவனுக்கு ரெண்டு அடி விழுந்தது.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்து அலைக்கழிக்கப்பட்ட கைக்குழந்தை. நடு ராத்திரியின் நிசப்தத்தைத் துவம்சம் செய்கிற மாதிரி ஓங்கி அழுதது.

காரை உள்ளே நிறுத்திப் பூட்டிவிட்டு, "இப்ப நீங்க படுத்துக்கலாம் என்றேன்."

அந்த நடைபாதைக் குடும்பத்துக்குத் தங்கு தடையின்றிக் கிடைக்கிற ஒரே விஷயமான உறக்கத்தைக்கூடப் பறிக்க நேர்ந்தது குறித்து வருத்தமாயிருந்தது ரொம்ப.

அந்த வருத்தத்தைத் தணிக்க இவள் ஏதாவது பேசுவாள் என்றால், வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே பிரவேசித்த பின்னாலும் இவள் மௌனமாயிருந்தாள், வழக்கத்துக்கு மாறாய்.

"என்ன கம்னு ஆய்ட்ட" என்றேன்.

"பாவம்ங்க, அவங்கள டிஸ்ட்டர்ப் பண்ணாமக் கார நாம வெளியவே நிறுத்தியிருக்கலாம்ல?" என்றாள், என்னவள்.

கல்கி, 16.11.2003
(அவனுக்கும் அவளுக்கும்)

# பெண் பால்

*"ஏம் மச்சான், ஒங்காத்தா எப்ப வரும்?"*

*மாராப்பு மறைவில் குழந்தைக்குப் பால் புகட்டிக் கொண்டிருந்த சிவகாமி புருஷனைக் கேட்டாள்.*

*"என்னத்துக்குக் கேக்க?"*

*"என்னத்துக்கா, கொழந்தயப் பாக்கத்தான். ஒங்காத்தா வந்துச்சுன்னா நம்ம புள்ளக்கி என்ன பேரு வக்யன்னு ஆத்தாவயும் கேட்டுக்கலாம்ல?"*

*சிவகாமி ஆசையோடு பேசினதைக் காதில் வாங்கிக் கொள்ளாத மாதிரி பீடி ஊதியபடி உட்கார்ந்திருந்தான் மாடசாமி.*

*"ஒன்னயத்தாங்கேக்கேன் மச்சான், நம்ம புள்ளக்கி..."*

*அவள் வாக்கியத்தை முடிக்குமுன் மாடசாமி வழி மறித்தான்.*

*"அட, சும்மாக் கெட புள்ள. ஆத்தாட்ட கேட்டா அல்பாயுசுன்னு பேரு வக்யச் சொல்லும்."*

*சிவகாமி அதிர்ந்து போனதில், குழந்தையின் வாய் விடுபட்டுப்போய் அது அழத்தொடங்கியது.*

*"என்ன மச்சான் இப்டி அபசகுனமாப் பேசுத. பேரு என்ன வக்யலாம்னு கேட்டா..."*

*"அதத்தாம்புள்ள சொல்லுதேன். ஆத்தா ரொம்பக் காட்டத்துல இருக்கு. பலவேசம் அண்ணாச்சி நேத்து ஆத்தாவப் பாத்தாவளாம். பேத்தியப் பாக்கப் போவலியான்னு கேட்டிருக்காவ. ஆமா போவணும், கள்ளிப் பாலுக்குச் சொல்லி வச்சிர்க்கேன், அத வேங்கிட்டுத்தாம் போவணும்ன்னுச்சாம்."*

*கிலிபிடித்த குரலில் கணவனைக் கேட்டாள், "என்ன சொல்லுத மச்சான், ஒங்காத்தா எம்புள்ளயக் கொல்லவாப் பாக்குங்க?"*

*இவளுடைய பதற்றத்தை அங்கீகரிக்காமலே மாடசாமி பேசினான்.*

*"பெரிய வார்த்தயெல்லாஞ் சொல்லாத புள்ள. ஊரு ஒலகத்துல நடக்கதுதான இது? ஆத்தா அன்னிக்கே சொல்லிச்சி திருநவேலியில பெரவேட் ஆசுபத்திரியில வயித்துக்குள்ள இருக்க புள்ள ஆம்பளயா பொம்பளயான்னு கண்டு பிடிச்சிச் சொல்ல மிசின் இருக்காம். போய்ப் பாருங்க. பொட்ட புள்ளன்னா அங்னயே*

*கலச்சிப் போட்டு வந்துருங்க, செலவ நாம் பாத்துக்கிருதேன்னு சொல்லிச்சி. நீதான் கெத்தா முடியாதுன்ட்ட. இப்ப பொட்ட புள்ளயாப் போச்சி. ஆத்தாக்கு ஆங்காரம் வரத்தான செய்யும்?"*

*சிவகாமிக்குக் கண்ணீரும் வியர்வையும் கலந்து முகத்தில் வியாபித்தன.*

*"ஏம் மச்சான், அது சரிதான்னு நீயும் சொல்லுதியா? எப்டி மச்சான் இந்தப் பச்ச மண்ணக் கொல்லணும்னு மனசால சொல்லுத. நீ பெத்த புள்ள மச்சான்!"*

*"இனியும் பொறத்தான போறேன். அடுத்தவாட்டி உருப்படியா ஒரு ஆம்பளப் புள்ள பெத்துக்குடு. அட என்னத்துக்குப் புள்ள வெட்டியா அளவுத! போன மாசங்கூட மேலத் தெருவு எச்சுமி வூட்ல இது நடக்கலியா? அதுக்கும் ஆத்தாவத்தாங் கூப்ட்டாவ! ஆத்தா பேய்த்தாங் கமுக்கமாக் காரியத்த முடிச்சிப்போட்டு வந்திச்சி. அதுக்கு முந்தி எங்க தச்சநல்லூர்ப் பெரியம்மா வூட்ல…"*

*"ஒங்க ஆத்தா இதே சோலியா அலையுது போல."*

*"எளா, முந்தாநாள் பொறந்த பொட்டக் களுதக்யாக ஆத்தாதாவக் குத்தம் புடிக்காத, பெறவு எனக்குக் கெட்ட கோவம் வரும் பாத்துக்க."*

*இவனுடைய ஆத்தாளை எதிர்கொள்ள நேரும் முன் இவனைச் சரிக்கட்டியாக வேண்டும். அது எப்படி என்று யோசனையாயிருந்தது. குழந்தை உறங்கி விட்டிருந்தது. அதைக் கைகளில் ஏந்திக் கொஞ்சம் எட்டப் பிடித்துப் பார்த்தாள், கண்ணீரினூடே. பிறகு குழந்தையை நெஞ்சோடு பதித்து நெற்றியில் முத்தமிட்டாள் வாஞ்சையோடு. தூளியில் குழந்தையைத் தூங்கப் போட்டுவிட்டுப் புருஷனை நோக்கி வந்தாள், ஒரு தப்பித்தல் திட்டத்தோடு.*

*"மச்சான் எனக்கு ஒரேயொரு ஒத்தாச மட்டும் பண்ணு மச்சான்" என்று கெஞ்சினாள்.*

*நுரையீரல் நிரம்ப பீடிப்புகையை இழுத்து விட்டு, "என்ன பண்ணச் சொல்லுத" என்றான் சர்வ அலட்சியமாய்.*

*"என்ன வல்லநாட்டுக்கு பஸ்ல ஏத்தி வுட்ரு மச்சான். நா எங்கப்பன் வூட்டுக்குப் போயிருதேன், எம்புள்ளயக் கொண்டுக்கிட்டு. எங்க அம்மெ உசுரோட இருந்திருந்தா அங்ஙன வல்லநாட்ல வச்சே பெரசவம் பாத்துருப்பாவ. நா நாதி கெட்ட அநாதியாப் பேய்ட்டேனேய்யா! நல்லாயிருப்ப மச்சான், இந்த ஒபகாரம் மட்டும் செஞ்சிரு மச்சான். ஒங்காலப்புடிச்சிக் கேக்கேன். எம்புள்ளயக் காப்பாத்து மச்சான்!"*

*தடாலென்று தரையில் விழுந்து அவனுடைய கால்களைக் கட்டிக்கொண்டு கதறினாள்.*

*"சீ, எந்தி புள்ள" என்று மாடசாமி கால்களை உதறியபடி எழுந்து கொண்டான்.*

*"இந்தா பாரு, ஆத்தாட்ட மல்லுக்கட்ட என்னால ஏலாது. ஆத்தாக்கு இது பளக்கப்பட்ட சமாசாரந்தா, புள்ளக்கி நோவே தெரியாம சுளுவாக் காரியத்த முடிச்சிப்புடும். ஒரு நாலு நாளக்கி நீ பெனாத்திட்டிருப்ப, அப்பால எல்லாஞ் சரியாப் போயிரும். மேக்கொண்டு ஒனக்குப் புள்ள பொறக்காமயா போயிரப் போவுது?"*

*தரையில் விழுந்திருந்த நிலையிலிருந்து எழுந்து நின்ற சிவகாமி, கூப்பிய கரங்களோடு புலம்பினாள். "வேணாஞ்சாமி, எம்புள்ளயக் கொன்னுப்புடாதீக. என்ன பஸ்ஸு ஏத்தி வுட்ருங்க. நாம் போயிருதேன். எங்கப்பன்ட்ட சொல்லி மொறப்பநாட்டு வயக்காட்ட ஒம்பேருக்கு எளுதிக் குடுக்கச் சொல்லுதேன் மச்சான்."*

*உதட்டிலிருந்த பீடியைப் பிடுங்கியெறிந்து விட்டு மாடசாமி அவளைப் பார்த்தான்.*

*"சும்மனாத்துக்கும் சொல்லுத புள்ள. ஒங்கப்பன் வயக்காட்ட எழுதிக் குடுப்பான்னாக்கும்?"*

*இந்த அஸ்திரம் கொஞ்சம் வேலை செய்யும் போலத் தெரிந்தது. சிவகாமி இதையே கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள்.*

*"சத்தியமாச் சொல்லுதேன் மச்சான். எம்புள்ள மேல சத்தியம். ஊரு போய்ச் சேந்தவொடன மொத வேலயா எங்கப்பங் கையக் காலப் புடிச்சி வயக்காட்ட எளுதிக் குடுக்கச் சொல்லுதேன். நீ சந்தேகமே படாத மச்சான்."*

*வயக்காடு வேலையைக் காட்டியது. மாடசாமி கொஞ்சம் இறங்கி வந்தான்.*

*"ஒத்தயில என்னமாப் போவ?"*

*"அபிசேகப்பட்டி வெலக்குல பஸ்ஸு ஏத்தி வுட்ரு மச்சான், நாம் போயிருவேன்"*

*"சங்சன்ல எறங்கி பஸ்ஸு மாறனும்லா?"*

*"நாஞ் சமாளிச்சிருவேன் மச்சான். வெசாரிச்சிப் போயிருவேன்."*

*"அதெல்லாஞ் சரி வராது புள்ள. ஒத்தயில நீ பேய்க்கிர மாட்ட. திருநவேலி வரக்யும் நா வாறேன். அங்ஙன தூத்துக்குடி பஸ்ஸுல ஏத்திவுட்டா வல்லநாட்ல கண்ட்ரக்டர்ட்ட கேட்டு எறங்கிருவேல்லா?"*

*"மவராசனாயிருப்ப, கெளம்பு மச்சான், ஒங்காத்தா கண்ணுல மாட்டதுக்கு முந்தி வெரசாப் போயிருவோம்."*

*தூளியில் கிடந்த குழந்தையை அவசரமாய் அள்ளிக் கொண்டாள். மாற்றுத் துணிமணிகளோ வேறு எந்தப் பொருளையுமோ எடுத்துக் கொள்ளத் தோணவில்லை. 'குழந்தை, குழந்தை என் குழந்தை.' குழந்தையைத் தாண்டி சிந்தனை ஓடவில்லை. 'அந்த ராட்சசி எந்த நேரத்திலும் வரக்கூடும். அதற்கு முன்னால் இங்கிருந்து காணாமல் போய்விட வேண்டும்.'*

*"பூட்டு எங்க புள்ள வச்ச?"*

*"பூட்ட வேணாம் மச்சான். ஆத்தா வந்து பூட்டுன கதவப் பாத்தா நம்ம பொறத்தாலேயே வந்தாலும் வந்துரும் சும்மா சாத்திட்டு வா. இங்ஙனதாம் பக்கத்துல போயிருக்காவன்னு நெனச்சிக்கிரட்டும்"*

*குழந்தையைப் பாதுகாப்பாய் அணைத்தபடி ஓட்டமும் நடையுமாய் வரப்புகளையும் ஒத்தையடிப் பாதைகளையும் கடந்தாள். பின்தொடர்ந்து வந்த மாடசாமிக்கும் இவளுக்கும் இடைவெளி விரிவடைகிறபோது, தவிப்போடு சில விநாடிகள் நின்று மூச்சு வாங்கிக் கொண்டாள்.*

*அவனைத் துரிதப்படுத்த முடியாது. இருந்தாற்போல அவன் முரண்டு பிடித்து விட்டால் காரியம் கெட்டுப் போகும்.*

*அபிஷேகப்பட்டி விலக்கையடைந்து, திருநெல்வேலி பஸ்ஸில் ஏறி உட்கார்ந்த பிறகுதான் பாதி உயிர் வந்தது.*

*பஸ் கிளம்புகிற போது, ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள், இவர்கள் நடந்து வந்த பாதையை. யாரும் பின் தொடரவில்லை.*

*கடவுளே!*

*பஸ், திருநெல்வேலி ஜங்ஷனை அடைந்ததும் அடுத்த இடி காத்திருந்தது.*

*பஸ் ஸ்டாண்டில் எங்கே நோக்கினாலும் பரபரப்பு.*

*திருநெல்வேலியையும் பாளையங்கோட்டையையும் இணைக்கிற தாமிரபரணிப் பாலத்தை யொட்டிப் பெரிய கலவரமாம். போலீஸ் துப்பாக்கிச் சூடாம். ஆற்றுக்குள்ளே அநியாயத்துக்குப் பிணங்களாம்!*

*"கொக்கர கொளத்துல என்னமோ கலாட்டாவாம் புள்ள, பஸ்ஸ¬ எதுவும் போவலேங்காவ. இங்ஙனயே குத்தவச்சி இரி. நாம் போய் வெசாரிச்சிட்டு வாறேன்."*

*இவளைத் தனியாய் விட்டு விட்டு மாடசாமி நகர்ந்தான்.*

*'இது என்ன ஆண்டவா புதுச் சோதனை' என்று வேதனையோடு நட்டமாய் நின்று கொண்டிருந்தாள், குழந்தையை மார்பில் ஏத்தியபடி.*

*பஸ் ஸ்டாண்ட் முழுக்கப் போலீஸ் தடியடி, துப்பாக்கிச் சூடு என்று தான் ஆளாளுக்குப் பேச்சு.*

*இவளுக்கு சமீபத்தில் ஏழெட்டு ஆண்களின் ஒரு சிறு கூட்டம். நடுவில் கழுத்தில் காமரா தொங்க ஓர் இளைஞன், கலவர நிகழ்ச்சிகளை மற்றவர்களுக்கு விவரித்தபடி.*

*சிவகாமி அந்தக் கும்பலை நெருங்கி, அவர்களின் கவனத்தைக் தன்பக்கம் ஈர்த்தாள்.*

*"ஐயா, வல்லநாட்டுக்கு பஸ்ஸு ஏதும் இப்பப் போவாதுங்களா?"*

*கிட்டத்தட்ட எல்லாரும் இவளைப் பார்த்தார்கள். அவர்களில் ஒருவன் எகத்தாளமாய்ப் பார்த்தான்.*

*"வாம்மா, ஒன்னயத்தான தேடிட்டிருக்கோம்! அவனவன் துண்டக்காணும் துணியக்காணும்னு ஓடிட்ருக்கான். ஒனக்கு வல்லநாட்டுக்கு பஸ்ஸா! காலாகாலத்துல வீட்டுக்குப்போய்ச் சேரும்மா, ரெண்டு நாளக்கி பஸ் ஸ்டாண்ட் பக்கமே வராத."*

*இன்னொரு பெரியவர் கொஞ்சம் சமாதானமாய்ப் பேசினார்.*

*"பாலத்தத் தாண்டி வண்டி ஏதும் ரெண்டு நாளக்கிப் போகாதும்மா. ஊரே டென்ஷனாக் கெடக்கு. ஊரடங்கு உத்தரவு போடப் போறாங்காக. வெள்ளன வீடு போய்ச் சேரு. கொளந்தய வேற வச்சிருக்க. தனியாவா வந்த?"*

*"இல்லிங்கய்யா, எங்க மச்சான், எம்புருசன் வந்தாவ. பஸ்ஸு வெசாரிச்சிட்டு வாறேம்னுட்டுப் போனாவ. இன்னா வந்துட்டாவளே, மச்சான் பஸ்ஸு ஏதும் இப்பப் போவாதுங்காவளே, பெசல் பஸ்ஸு ஏதும் வல்ல நாட்டுக்கு வுட்ருக்காவளான்னு கேட்டியா?"*

*இறுக்கத்தை மீறி ஒரு சிரிப்பெழுந்தது அந்தச் சிறு கூட்டத்தில். மாடசாமிக்கோ சரியான கடுப்பு.*

*"பெசல் பஸ்ஸும் கெடயாது, ஒரு தாலியுங் கெடயாது. சத்தங்காட்டாம வா, ஊரப்பாக்கப் போவலாம்."*

*"சார், இவ்ளோ நேரம் சொல்லிட்டிருந்தாரே கேக்கலியாம்மா? எல்லாத்தையும் போட்டோ புடிச்சி வச்சிர்க்கார். நாளக்கிப் பேப்பர்ல வரும் பாரு."*

*சிவகாமிக்கு ஓர் அசட்டு தைரியம் வந்தது. அந்தக் காமராக்கார இளைஞனைக் குறித்துக் கேட்டாள்.*

*"இந்த அண்ணாச்சி பேப்பர்க்காரவுளா?"*
*"அவிய யாராயிருந்தா ஒனக்கென்ன புள்ள? கெளம்பு. பெறவு தேரஞ் செல்லச் செல்ல எல்லா பஸ்ஸயும் நிறுத்திப் புடுவாக"*

*தன்னுடைய கையைப் பற்றியிழுத்த கணவனைப் பொருட்படுத்தாது அந்த காமராக் காரனை எதிர் கொண்டாள், இன்னுங்கொஞ்சம் தைரியமாக.*

*"அண்ணாச்சி நா ஒங்கட்ட ஒரு சாமாசாரம் பேசணும்."*

*அவன் அவளை அக்கறையாய்ப் பார்த்தான். "என்ட்டயா. என்ன விஷயம்மா? எதாவது இன்ட்ரஸ்ட்டிங் ஸ்டோரி வச்சிருக்கியா?"*

*லேசாய்ச் சிரித்தான் அவன்.*

*"எளா, இப்ப நீ வாறியா, நாம் போவட்டா?" மாடசாமி அவளை மிரட்டிப் பார்த்தான்.*

*காமராக்காரன் மாடசாமியை மடக்கினான்.*

*"கொஞ்சம் இருங்கண்ணாச்சி. அந்தம்மா என்னமோ சொல்ல வருது. சொல்லட்டுமே. நீ சொல்லும்மா. சீக்கிரஞ் சொல்லு."*

*குரலில் தெம்பை வரவழைத்துக் கொண்டு சிவகாமி பேசினாள்.*

*"அண்ணாச்சி, எங்க ஊர்ல ஒரு அக்கரமம் நடந்துட்டிருக்கு. பொறந்த பொட்டப்புள்ளகளயெல்லாம் கள்ளிப் பாலக் குடுத்துக் கொல்லுதாவ."*

*எல்லாக் கண்களும் சிவகாமியின் மேலே. அங்கேயிருந்த எல்லோருக்கும் சுவாரஸ்யம் தட்டியது, காமராக்காரனைத் தவிர. அவன் அலட்டிக் கொள்ளாமல் சொன்னான், "இது ரொம்பப் பழைய ஸ்டோரிம்மா. ஏற்கனவே வேற பத்திரிகையில வந்திருச்சி. வேறே ஏதாச்சும் விசேஷம் உண்டா ஒங்க ஊர்ல?"*

*சிவகாமிக்கு சப்பென்று ஆகிவிட்டது. இருந்தாலும் நம்பிக்கையை முழுமையாய் இழந்துவிட மனசில்லை.*

*"என்னண்ணாச்சி அவ்ளோ சுளுவாச் சொல்லிப் பிட்டீய! எம்புள்ளயக் கொல்ல வாராக அண்ணாச்சி. அதான். பயந்துக்கிட்டு நாம் பொறந்த வூட்டுக்குப் பொறப்பட்டேன்."*

*"ஒம் புள்ளயக் கொல்ல வாறாகளா, யாரது கொல்ல வாறது?"*

*இந்தக் கட்டத்தில் அவளுடைய காலை மிதித்துக் குறிப்பறிவித்தான் மாடசாமி.*

*சிவகாமி சமாளித்தாள்.*

*"அது வந்து, தெரிஞ்ச பொம்பளதான். பக்கத்து ஊர்க்காரப் பொம்பள."*

*"கொல்ல வந்ததாகதான, கொல்லலியே?"*

*"அப்ப உசுரு போனப் பெறவுதா நீங்கக் காப்பாத்த வருவியளாக்கும்?"*

*"காப்பாத்தறது பத்திரிகைக்காரன் வேலயில்லம்மா. நீங்க போலிஸ் ஸ்டேஷன்ல போய்க் கம்ப்ளய்ன்ட் குடுங்க"*

*பத்திரிகைக்காரன் சொல்ல விட்டுப் போனதை இன்னொருவன் சொன்னான்.*

*"போலீஸ் ஸ்டேஷன் பக்கம் இன்னிக்கிப் போயிராதீக. போலீஸ்காரன் ஒவ்வொர்த்தனும் கையில லத்தியக் கொண்டுக் கிட்டு எவனச் சாத்தலாம்னு கோட்டி புடிச்சி அலயுதான்."*

*சிவகாமிக்குள்ளே சின்னதாய்த் துளிர்த்த ஒரு நம்பிக்கையும் தகர்ந்து போனது.*

*"சொல்லி முடிச்சாச்சில்லா, கௌம்பு" என்று மாடசாமி அவளை நெட்டித் தள்ளினான்.*

*"அண்ணாச்சி. கொஞ்சம் இருங்க. ஒங்கபேரு என்ன அண்ணாச்சி?"*

*பத்திரிகைக்காரன் கேட்டதற்கு மாடசாமி நின்று தன்னுடைய பெயரைச் சொன்னான்.*

*"மாடசாமியண்ணாச்சி. ஒங்க ஊர்ல போன் இருக்கா?"*

*"அங்ஙன ஏதுங்கய்யா போன். அபிசேகப்பட்டிக்கித்தா வரணும்."*

*"படிக்கத் தெரியுமா?"*

*"அஞ்சாப்பு படிச்சிருக்கேங்கய்யா. இவ என்ன விட சாஸ்தி படிச்சிருக்கா. எதுக்குக் கேக்கிய?"*

*"ஒண்ணுமில்ல, இந்தக் கார்ட வச்சிக்கிருங்க. எதாச்சும் சமாசாரம் நடந்தா எனக்கு போன் பண்ணுங்க. நாங்க வந்து போட்டோ எடுப்போம். ஒங்க பேரு படமெல்லாம் பத்திரிகையில வரும். அப்ப நாங் கௌம்பறேன். மெட்ராஸ்க்கு ஸ்டோரி அனுப்பணும்."*

*அவனை வழிமறித்து, அந்தக் காமராவைப் பிடுங்கி அதைக்கொண்டு அவன் மண்டையைப் பிளக்க வேண்டுமென்றிருந்தது சிவகாமிக்கு. அவன் சொன்னதன் உள்ளர்த்தம் உறைத்தபோது ரத்தம் உறைந்தது.*

*இனி செய்வது என்ன என்று தெரியவில்லை. தெய்வத்தில் நம்பிக்கை வைத்து, கடவுளை உச்சரித்துக் கொண்டே கணவன் பின்னால் நடந்தாள், குழந்தையை இறுக அணைத்தபடி.*

*அபிஷேகப்பட்டி விலக்கு வழியாய்ப் போகிற பஸ் கிளம்பத் தயாராய் இருந்தது.*

*மெய்ன் ரோடில் இறங்கி கிராமத்தைப் பார்க்க நடந்த போது சூரிய வெளிச்சம் மயங்க ஆரம்பித்திருந்தது.*

*எந்த உறுத்தலுமில்லாமல், ஒரு பீடியைப் பற்ற வைத்து இழுத்தபடி மாடசாமி முன்னே நடக்க, 'கடவுளே, கடவுளே' என்கிற ஜெபத்தோடு அவனைப் பின் தொடர்ந்தாள் சிவகாமி.*

குடிசையை அடைந்த போது, சாத்திவிட்டுப் போன கதவு கொஞ்சம் விலகியிருப்பது புலப்பட்டது.

'ஆத்தா வந்திருக்கும்' என்ற ரெண்டே வார்த்தைகளில் இவளுக்கொரு கிலியைக் கொடுத்து விட்டு, கதவை மெல்லத் தள்ளித் திறந்து உள்ளே பார்வையைச் செலுத்தினாள் மாடசாமி.

பிறகு, இவளைப் பார்க்கத் திரும்பினான்.

"ஆத்தா அசந்து தூங்குது. சத்தங்கித்தம் போடாம உள்ள போய் இரி. புள்ள அளாமப் பாத்துக்க, ஆத்தாத் தூங்கங் கெட்ரப் போவுது. நா ஓட வரக்யும் போய்ட்டு வந்திருதேன்."

திரும்பவும் ஒரு பீடியைப் பற்ற வைத்துக்கொண்டு மாடசாமி ஓடையை நோக்கி எட்டி நடந்தான்.

அவன் பார்வையிலிருந்து மறைந்த பின்னால் சிவகாமி உறங்கிக் கொண்டிருந்த குழந்தையைப் பூப்போல தரையில் கிடத்தினாள், வாசலுக்கு வெளியே.

பிறகு ஓசையில்லாமல் வாசல் கதவைத் திறந்தாள். மங்கலான வெளிச்சத்தில் மாமியார் மல்லாக்கப் படுத்துக் கிடந்தது தெரிந்தது.

குறட்டையோடு கூடிய சுகமான உறக்கம்.

திறந்த வாயோடு உறங்கிக் கொண்டிருந்த மாமியார்க் காரியைப் பார்த்த போது சிவகாமி, அவள் எதிர் பாராமலேயே ஓர் அனுகூலமான சந்தர்ப்பம் அவளுக்கு அமைந்து விட்டதை உணர்ந்தாள்.

மிக நுட்பமான சாதுர்யத்தோடு இதை பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

மாடாக்குழியில் பார்வையைச் செலுத்தினாள். நினைத்தது சரிதான்.

மாடாக்குழியில் ஒரு கிண்ணம். பழைய அட்டை கொண்டு மூடப்பட்டிருந்த கிண்ணம்.

அட்டையை விலக்கிப் பார்த்தாள்.

அரைக்கிண்ணத்துக்கு வெள்ளையாய் ஒரு திரவம். பால் மாதிரி.

பால் தான்.

கள்ளிப் பால்.

கவனமாய்க் கிண்ணத்தைக் கைகளிலேந்திக் கொண்டு படுத்திருந்த மாமியார்க்காரியை நோக்கி அடிமேலடி வைத்து முன்னேறினாள்.

மெல்ல மெல்ல மெல்ல மெல்ல.

*பட பட‌த்த நெஞ்சின் அதிர்வில் கிண்ணம் நடுங்கியது,*

*தோல்ப் பரப்பிலிருக்கிற வியர்வைச் சுரப்பிகளெல்லாம் படு சுறுசுறுப்பாய் இயங்க ஆரம்பித்திருந்தன.*

*கடவுளே, கடவுளே, கடவுளே, கடவுளே*

*பாதுகாப்பான அருகாமையில் மாமியார்க்காரியின் முகத்தை நோக்கிக் குனிந்தாள். சாராய நெடி மூச்சு முட்டியது.*

*நடுங்கும் கரங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, திறந்திருந்த வாய்க்குள்ளே கிண்ணத்தைக் கவிழ்த்தாள்.*

*க்ளக் களக் க்ளக்.*

*அந்த ஒட்டைக்குச்சி உடம்பு ரெண்டு முறை சிலிர்த்து அடங்கியது.*

*ஒரேயடியாய் அடங்கிப் போனது.*

*அந்தக் குரூரமான முகத்தை சலனமற்றுச் சில விநாடிகள் பார்த்தபடியிருந்தாள் சிவகாமி. மனசு சமனப்பட்டது.*

*காலிக் கிண்ணத்தை மாடாக்குழியில் வைத்து அட்டையால் மூடினாள்.*

*சீலைத்தலைப்பால் முகம், கழுத்து, கைகளையெல்லாம் அழுந்தத் துடைத்தபடி வாசலுக்கு வந்தாள்.*

*அப்போதுதான் கண்விழித்த குழந்தை தாயைப் பார்த்து முதன் முறையாய் சிரித்தது. அதை வாரியெடுத்து, ரெண்டு கன்னங்களிலும் மாறி மாறி முத்தங்களைக் பதித்தாள்.*

*"எம்புள்ளக்கி என்ன பேர் வக்யலாம்?"*

*"சூரி சம்ஹாரி!"*

*பின்விளைவுகளைப் புறக்கணித்துப் புன்னகை பூத்தாள் சிவகாமி.*

*சுவாசப் புன்னகை. வெற்றிப் புன்னகை.*

*பிறகு, திரும்பவும் அதை உச்சரித்தாள்.*

*"சூரி சம்ஹாரீ!"*

*ஓடைக்குப் போயிருந்த மாடசாமி திரும்பி வந்தான்.*

*"என்ன புள்ள வெளிய நிக்ய? ஆத்தா முழிச்சிரும்னு புள்ளய வச்சுக்கிட்டு வெளியவே நிக்கியாக்கும்?"*

*"ம்"*

*அவன், இவளைத் தாண்டிக்கொண்டு குடிசைக்குள் நுழையப் போனபோது அவனை நிறுத்தினாள்.*

*"மச்சான், கொஞ்சம் நில்லு"*

*"என்னத்துக்குப் புள்ள?"*

*"சங்சன்ல அந்தப் போட்டோக்கார ஆளு ஒரு கார்டு குடுத்தானே வச்சிர்க்கியா?"*

*"ஆமா, சட்டப்பையில இருக்கு. எதுக்குக் கேக்க?"*

*சிவகாமி அவனை ஊடுருவிப் பார்த்தாள். பிறகு பிசிறில்லாத குரலில் கணவனுக்குக் கட்டளையிட்டாள்:*

*"இப்படியே நட. அபிசேகப்பட்டிக்கிப் போயி அந்த ஆளுக்கு போன் போட்டுக் பேசு. எங்க கிராமத்துல ஒரு சமாசாரம் நடந்திருக்கு, வந்து போட்டோ புடிச்சிட்டுப் போன்னு சொல்லு."*

*(முடிந்தது)*

*(குமுதம், 15.10.2001)*

# மத்தாப்புக் கொளுத்தும் மனசு

*தீபாவளிக்கு முந்தின நாள் பாரிஸுக்குப் பயணமானேன். ஃப்ரான்ஸிற்கும் பாண்டிச்சேரிக்கும் தலைநகரமான பாரிஸ் அல்ல; நம்ம மெட்ராஸின் தலைப்பிரதேசத்திலிருக்கிற பாரிஸ் கார்னர்.*

*"ஒங்க நான்—ஹிண்டு ஃப்ரண்ஸ்க்கெல்லாம் டிஸ்ட்ரிபியூட் பண்றதுன்னா, வீட்ல செய்யற பலகாரம் பத்தாதுங்க. ஒங்களுக்குப் புடிச்ச ஸ்வீட் கடையில போய் ஒங்களுக்குப் புடிச்ச ஸ்வீட் வெரய்ட்டி ஒரு மூணு கிலோ வாங்கிட்டு வந்துருங்க" என்று என்னுடைய சரோஜினி ஆலோசனை சொன்னதன் பேரில், பாரிஸில் கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலிருக்கிற பிரபலமான மிட்டாய்க் கடைக்குப் போனேன்.*

*போனால், கடையையொட்டிக் கால் கிலோ மீட்டர் நீளத்துக்கு அநியாயத்துக்கு ஒரு க்யூ, என்னமோ தர்மத்துக்கு ஸ்வீட் கிடைக்கிற மாதிரி!*

*மழைத் தூறல் போடுகிறது.*

*வரிசையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க போலீஸ்காரர்கள் அவ்வப்போது லாட்டியால் தட்டுகிறார்கள்.*

*ஸ்வீட் எங்கே வாங்கினாலும் ஒரே மாதிரி இனிப்புத்தானே, வாலிப வயோதிக அன்பர்களே, மழையில் ஊறிக் கொண்டு க்யூவில் நின்று, போலீஸ்காரனிடம் செல்ல அடியும் வாங்கிக்கொண்டு, இவ்வளவு தொலைவு வந்து காசு கொடுத்து ஸ்வீட் வாங்கித் தின்னாவிட்டால்தான் என்ன என்று அந்தப் பரிதாப ஜீவன்களைப் பார்த்து அனுதாபப்பட்டுவிட்டுத் திரும்ப அண்ணா நகருக்கே வந்து ஏஸி கடையொன்றில் ஸ்வீட் வாங்கி என் சரோஜினியிடம் சமர்ப்பித்து விட்டுச் சொன்னேன்,*

*"சரோ, போன மாசம் அந்த மூணாம் நம்பர்க்குக் குடி வந்தாங்களே ஒரு முஸ்லிம் ஃபேமிலி, அவங்களுக்குக் காலைல தீபாவளிப் பலகாரம் குடுத்தனுப்பணும், மறந்துராத."*

*"அவங்க யார்ன்னே நமக்குத் தெரியாதேங்க?" என்று ஆட்சேபித்தாள்.*
*"தெரிஞ்சிக்குவோம்"என்றேன்.*
*"நமக்கு அறிமுகமே இல்லியேங்க?"*
*"அறிமுகப்படுத்திக்குவோம்."*

*"அவங்க முஸ்லிம்ஸ்ங்க. ஒரு மாசத்துக்குப் பகல்ல எதுவும் சாப்புட மாட்டாங்க. அவங்களுக்கு இது ரம்ஜான் மாசம்."*

"அதுக்குத்தான் மண்டு சொல்றேன்" என்று அவளுடைய மண்டையில் ஒரு காதல் குட்டு வைத்தேன்.

"சாயங்காலம் விரதம் முடிச்சிட்டு சாப்புடுவாங்க. ரம்ஜான் மாசம் முடியப்போகுது. இன்னும் மூணு நாள்ல ரம்ஜான் பெருநாள் வருது. தீபாவளிக்கி நாம பலகாரம் குடுத்து விட்டோம்னா ரம்ஜானுக்கு அங்கயிருந்து பிரியாணி வரும். முஸ்லிம் வீட்டு பிரியாணி டேஸ்ட் பண்ணியிருக்கியா நீ? ஹா!"

"ஓஹோ, கத அப்படிப் போகுதா!" என்று சரோ என் காதல் குட்டைத் திருப்பித் தந்தாள். காலையில் ஸ்பெஷல் தீபாவளிக் குளியலொன்று போட்டுவிட்டு, ஹாலில் பேப்பர் பார்த்துக் கொண்டிருந்தபோது, கிச்சனில் மாலாவுக்கும் சரோஜினிக்குமிடையே நடந்து கொண்டிருந்த உரையாடல் காதில் விழுந்தது.

"அண்ணி, அண்ணி, அந்த மூணாம் நம்பர் வீட்டுக்குப் பலகாரம் நான் போய்க் குடுத்துட்டு வர்றேன் அண்ணி."

"எந்த மூணாம் நம்பர் மாலா?"

"அதான், அந்த முஸ்லிம் வீடு. நீங்களும் அண்ணாவும் ராத்திரி பேசிட்டிருந்தீங்களே, பிரியாணி, சிக்கன் ஃப்ரை, அது இதுன்னு..." "நீ ஒட்டுக் கேட்டுட்டிருந்தியாக்கும்?"

"ச்சீ, ஒட்டெல்லாம் கேக்கல, சும்மா வாசம் புடிச்சேன். அந்த வீட்டுக்குப் பலகாரம் நா கொண்டு போறேன் அண்ணி, ப்ளீஸ்."

"அந்த வீட்டுக்கெல்லாம் நீ போக வேண்டாம், போகக் கூடாது."

"ஐயோ, ஏண்ணி?"

"வயசுப் பையன் ஒர்த்தன் இருக்கான் அந்த வீட்ல."

"யாரு, ஒயரமா செக்கச் செவேல்னு இருப்பானே, அந்தப் பையனா அண்ணி?"

"ஆமா. அந்தப் பையன் தான்."

"நெறைய்ய தலைமுடி, எண்ணை தேய்க்காம ஸ்டைலாக் கலச்சு விட்டிருப்பானே, அந்தப் பையனா அண்ணி?"

"ஆமா."

"ஹ்ரித்திக் ரோஷன் மாதிரி கண்ணு ரெண்டும் பளபளன்னு இருக்குமே, அந்தப் பையனா?"

"ம்."

"வித்யாசமா, வலது கையில வாச்சக் கட்டிக்கிட்டு அசத்துவானே, அந்தப் பையனா?"

"ம்? அவனோட வலது கையையும் நா பாக்கல. வாச்சையும் பாக்கல. நீ போய் வேற வேல இருந்தா பார்."

"ஐயோ, இப்படிச் சொன்னா எப்படி அண்ணி, நா எதுக்குச் சொல்றேன்னா...."

"சொல்லு."

"அந்தப் பையன், ஐ மீன் அந்தப் பையர் எங்க அஃபீஸ்ல தான ஒர்க் பண்றார்."

"பண்ணிட்டுப் போறார். அதுக்கென்ன?"

"வந்து, அவர் என்னப் புடிச்சிருக்குன்னு சொன்னார் அண்ணி."

"ஓஹோ, கத அப்படிப் போகுதா!"

"அண்ணாட்ட நீங்கதான் சொல்லணும் அண்ணி. ப்ளீஸ்ண்ணி."

"ம். பாக்கலாம். இப்ப நீ போய்ப் பலகாரம் குடுத்துட்டு வா. மத்த விஷயங்களப் பத்தி யோசிப்போம்."

"எப்ப யோசிப்பீங்களாம்?"

"ராத்திரி யோசிப்போம்"

"மை ஸ்வீட் அண்ணீ. தாங்க் யூ அண்ணீ!"

சாயங்காலம் சிநேகிதர்களை விஸிட் அடித்துவிட்டு நான் வீடு திரும்புகிறபோது, மூணாம் நம்பர் வாசலில் பையன் பட்டாசு கொளுத்திக் கொண்டிருந்தான்.

"என்னைப் பார்த்ததும் அடையாளங் கண்டு கொண்டு, ஹாப்பி தீவாளி சார்" என்று வாழ்த்தினான்.

"என்ன தம்பி, ஒங்களுக்கும் தீபாவளியா?" என்று நான் சிரித்ததற்கு, "ஏன் சார் எங்களுக்கு என்ன?" என்று பதிலுக்கு சிரித்தான்.

"இல்ல, தீபாவளி இந்துப் பண்டிகையாச்சேன்னு கேட்டேன்."

"நோ சார். இந்துப் பண்டிகையில்ல. தீபாவளி இந்தியப் பண்டிகை."

"அந்த நெத்தியடி எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு."

ராத்திரி உணவுக்குப் பின்னால், காலையில் அரியர்ஸாய்ப் போன ஹிண்டு தலையங்கங்களை ஆறுதலாய் மேய்ந்து கொண்டிருந்தபோது, மெல்ல சமீபித்து சரோஜினி தொண்டையைச் செருமினாள். மறைவாய் மாலா.

"சப்ஜெக்ட் என்னவென்று எனக்குத் தெரிந்திருந்தபடியால், பேப்பரிலிருந்து பார்வையை விலக்காமலேயே, இன்னா மேட்டர் மேடம்?" என்றேன்.

"வந்து.... மாலாவுக்கு வயசாயிட்டே போகுது."

"ஒனக்குந்தான் வயசு ஆய்ட்டே போகுது."

*"எனக்கு ஆனா ஆய்ட்டுப் போகுது. எனக்குத்தான் கல்யாணம் ஆயிருச்சே!"*

*"கல்யாணம் ஆய்ட்டாப் போதுமா? அதுக்கப்புறம் வயித்துல இந்த புழு பூச்சியெல்லாம் வக்கிறதுன்னு சொல்லுவாங்களே, அதெல்லாம் ஒண்ணையுங் காணோமே..."*

*"ஷ்ஷ்... மாலா ஒளிஞ்சி நின்னு பாத்துட்டிருக்கா, நீங்க ட்ராக்க மாத்தாதீங்க. நா சொல்ல வந்த விஷயம் வேற."*

*"இன்னா விஷயம் அது, சொல்லு" என்று நான் தலை நிமிர்ந்தேன்.*

*"மாலாவுக்கு வரன் பாக்க வேண்டாமா?" என்று என்னை நோட்டம் பார்த்தாள்.*

*"பாக்கணும். அவ பாக்கலைன்னா நாம தான் பாக்கணும்."*

*"வந்துங்க... அடுத்த தீபாவளி நம்ம மாலாவுக்குத் தலை தீபாவளியா இருந்தா எப்படியிருக்கும்னு கொஞ்சம் யோசிச்சுப் பாருங்களேன்."*

*"யோசிச்சுப் பாத்தேன். தலை தீபாவளிக்குப் பின்னாலேயே இன்னொண்ணும் வரும்னு தோணிச்சு."*

*"இன்னொண்ணு?"*

*ஹிண்டுவை மடித்து வைத்துவிட்டு நான் சொன்னேன்: "தலை ரம்ஜான்."*

*என்னுடைய நெத்தியடி சரோஜினிக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு என்பது அவளுடைய விழிகள் அகலமாய் விரிந்ததில் தெரிந்தது. மறைவிடத்திலிருந்த உருவம் முகத்தை மெல்ல வெளியே காட்டியது.*

*சஸ்பென்ஸை சட்டுபுட்டென்று ஒரு முடிவுக்குக் கொண்டு வர நான் தொடர்ந்து பேசினேன்.*

*"அந்த முஸ்லிம் பையன நா மீட் பண்ணேன் சரோ. எனக்கு ஓக்கே. அவங்க அப்பா அம்மாட்ட போய்ப் பேசறேன்."*

*மறைந்திருந்த மாலா புளகாங்கிதத்தோடு வெளிப்பட்டு, என்னை நோக்கி ஓட்டமாய் ஓடி வந்து 'அண்ணா' என்று கண்ணீர் பொங்க சினிமாத் தங்கைகள் மாதிரிக் கட்டிக் கொள்வாள் என்று எதிர்பார்த்து ஏமாந்தேன்.*

*என்னைப்பற்றி அக்கறையே படாமல் அண்ணியும் நாத்தனாரும் உணர்ச்சிபூர்வமாய் ஒருத்தரையொருத்தர் கட்டிப் பிடித்துக் கொண்டார்கள்.*

*கதை எப்படிப் போகுது பாத்தீங்களா!*

*(க்ருஹஷோபா, நவம்பர் 2004)*

# வெளிச்சம்

ஒரு சாவி தொலைந்து போனது.

புருஷன் பொண்டாட்டி ரெண்டு பேரும் வேலைக்குப் போகிற வீட்டில், வாசல் கதவுக்கு ரெண்டு சாவி அவசியம்.

ரெண்டு சாவி இருந்தது. என்னிடம் ஒண்ணு அவளிடம் ஒண்ணு.

அதில் ஒரு சாவி தொலைந்து போனது.

தொலைந்து போனது இவளுடைய சாவியாயிருந்திருந்தால், இவளுடைய பொறுப்பின்மையையும் அஜாக்கிரதையையும் சுட்டிக்காட்டித் திட்டித் தீர்த்திருப்பேன்.

தொலைந்து போனது என் கைவசமிருந்த சாவி.

ராத்திரி மெல்ல இவளிடம் விஷயத்தைச் சொன்ன போது, 'சரி, அதுக்கென்ன, வேற டியூப்ளிக்கேட் சாவி செஞ்சிருவோம்' என்றாள், முகத்துப் புன்னகை கொஞ்சமும் தணியாமல்.

"சாவி செய்றவங்க ஒரு அஞ்சாறு பேர் வரிசையா ஒக்காந்துருப்பாங்க. அமஞ்சிக்கர மார்கெட் ரோடுல. சரி, அதுவா இப்ப முக்கியம்? நா காலிஃப்ளவர் வதக்கி வச்சிருந்தேனே எப்படியிருந்ததுன்னு நீங்க சொல்லவேயில்லியே?"

காலையில் ரெண்டு பேரும் அமஞ்சிக்கரைக்குப் போனோம்.

இவள் சொன்னமாதிரியே, சாவி செய்யும் தொழிலாளிகள் ஏழெட்டுப் பேர் நியாயமான இடைவெளி விட்டு உட்கார்ந்து, தொழில் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒய்வாயிருந்த சாவிக் கலைஞன் ஒருவரை சமீபித்து, ஒரிஜினல் சாவியைக் கொடுத்து விட்டு, மாற்றுச் சாவிக்குக் காத்திருந்தோம்.

ரெண்டு மூணு சாவிக் கலைஞர்கள், நிழலுக்காக ஆளுக்கொரு குடையை நட்டுவைத்திருந்தார்கள்.

நம்ம ஆளிடம் குடை இல்லை.

நல்ல வெயில் (அல்லது மோசமான வெயில்!).

வெயிலிலிருந்து பாதுகாப்புத்தர ஒரு மரமோ, வேறு அம்சமான இடமோ அருகாமையில் இல்லாததால், இந்த ஆள் சாவி செய்யும் நேர்த்தியைப்

*பாத்தவாறே நின்றிருந்தோம், வெயிலில், இந்தப்பக்கம் நானும் அந்தப்பக்கம் அவளும்.*

*"அங்க ஏன் போய் நிக்கற, இந்தப்பக்கம் வாயேன்" என்று அழைப்பு விடுத்தேன்.*

*"நீங்க இந்தப்பக்கம் வாங்க" என்றாள்.*

*முஹம்மது மலைக்கு வராவிட்டால், மலை முஹம்மதிடம் போகுந்தானே?*

*போனேன்.*

*என்னோடு இவளும் வெயிலில் காய்ந்து கொண்டிருந்தது மனசுக்குக் கஷ்டமாயிருந்தது.*

*"நா சாவியத் தொலச்சது ஒனக்கு எவ்வளவு சங்கடம் பார், வெட்டியா வெயில்ல வந்து நிக்கற" என்று என் அனுதாபத்துக்குக் குரல் வடிவம் கொடுத்தேன்.*

*"இதென்னங்க சங்கடம், நீங்க நல்ல காரியந்தானேங்க பண்ணியிருக்கீங்க" என்று சிரித்தாள்.*

*"நல்ல காரியமா, எது, சாவியத் தொலச்சதா?"*

*"சனிக்கிழம தொலச்சது. இதுவே ஒரு வீக்டேயா இருந்திருந்தா, இப்படி ஜாலியா சூரிய வெளிச்சத்துல வந்து நின்னுட்டிருக்க முடியுமா? இன்னிக்கி ஸண்டேயாப் போனது எவ்வளவு வசதி."*

*தன்னுடைய பாஸிட்டிவ் மனோபாவத்தால் என்னைத் திக்குமுக்காட வைத்தவள், என் கையைப் பற்றி வெடுக்ன தன்னை நோக்கி என்னை இழுத்து மூச்சு முட்ட வைத்தாள்.*

*"எதுக்கு இவ்வளவு gap விட்டு நிக்கிறீங்க. we are not just lovers anymore. இப்ப புருஷன் பொண்டாட்டி. கொஞ்சம் ஒட்டித்தான் நில்லுங்களேன்."*

*இவளுடைய கட்டளையை ஏற்று ஒட்டினேன், ரோட்டில் எல்லோரும் பார்க்கிற மாதிரி உரசிக் கொண்டு நிற்க சங்கோஜமாயிருந்தாலும்.*

*சாவி வேலை முடிந்த பின்னால், ஸ்கூட்டரில் போகிற போது பக்கவாட்டில் கழுத்தைத் திருப்பி, இவளிடம் கேட்டேன்.*

*"ஏம்மா, இன்னிக்கி ஸண்டே தான, இந்த ஒட்டல் ஒரசல் எல்லாம் வீட்லபோய் வச்சுக்கலாம்ல, ரோட்ல நிக்கிறபோது ஒரசிக்கிட்டு நிக்கிறது அவசியந்தானா?"*

*"அது ட்டூ இன் ஒன்ங்க" என்று இவள் சிரித்தாள்.*

*"அப்டீன்னா?"*

*"ஒண்ணு, ஒங்களோட இரண்டறக் கலந்திருக்கிறதுல உள்ள சொகம். இன்னொண்ணு..."*

*"இன்னொண்ணு?"*

*"பாவம் அந்த சாவி செய்யற ஆள், வேகாத வெயில்ல ஒக்காந்து வேல செய்யறான். நாம ரெண்டு பேரும் வெய்யில்ல நிக்கிறது தான் நிக்கிறோம், கொஞ்சம் நெருங்கி நின்னோம்னா, சூரியன மறச்சிக்கிட்டு நின்னோம்னா, அந்த நேரத்துக்காவது அந்த ஆளுக்குக் கொஞ்சம் நெழல் கெடக்யும்ல?"*

*கல்கி, 27.07.2003*
*(கொஞ்சம் நெருங்கி)*

# அப்பன் தொழில்

*ஷட்டரைத் தூக்கிவிட்டு, செருப்பை வெளியே கழட்டி விட்டுக் கடைக்குள்ளே பிரவேசித்தேன். ஊதுவத்திக் கொளுத்தி, கல்லாவுக்கு மேலாய் வரிசையாய் மாட்டியிருந்த தெய்வங்களின் படங்களின் முன்னால் கண்மூடிக் கரங்குவித்து நின்ற போது, ஊதுவத்தி மணத்தைத் தூக்கியடிக்கிற சாம்பராணிப் புகை மணம் குப்பென்று வியாபித்து மனசை சிலிர்க்கச் செய்தது.*

*கடவுளை வேண்டிவிட்டுக் கண் திறந்து பார்த்த போது, புகை பரப்புகிற சாம்பராணித் தட்டோடும், பச்சைத் தலைப்பாகையோடும், தெய்வீகப் புன்னகையோடும் அந்த மனிதர் நின்று கொண்டிருந்தார்.*

*"மொதலாளி நேத்து தான் யாவாரம் ஆரம்பிச்சீக போல. நேத்து வந்தேன். ஒரே கூட்டமா கெடந்துச்சி. சரி, தொந்தரவு பண்ண வேண்டாம் நாளக்கி வருவோம்ன்னுட்டுப் போய்ட்டேன். அல்லா அருளால யாவாரம் அட்டகாசமா நடக்கும் மொதலாளி. மொதலாளி சரின்னீகன்னா நெதம் வந்து சாம்பராணி வாசம் காட்டிட்டுப் போறேன்" என்று சிநேகப்பூர்வமாய் சிரித்த அந்த மனிதரை முதல் சந்திப்பிலேயே எனக்குப் பிடித்துப் போய்விட்டது.*

*"நல்ல சமாச்சாரத்துக்கு வேண்டாம்னா சொல்லப் போறேன்? டெய்லி வாங்க பாய்" என்று அவருடைய தட்டில் ஒரு அஞ்சு ரூபாய் நாணயத்தைப் போட்டேன். தட்டில் பரவலாய்க் கிடந்த நாணயங்களிலிருந்து மூன்று ரூபாய் நாணயங்களைப் பொறுக்கியெடுத்து என்னிடம் நீட்டினார்.*

*"சில்ற எதுக்கு பாய், அஞ்சு ரூவாயா இருக்கட்டும்" என்ற என்னுடைய தாராளமயமாக்கலைப் பெருந்தன்மையாய் மறுத்தார்.*

*"இல்ல மொதலாளி, நமக்கு உண்டானது ஒரு ரூவா, ரெண்டு ரூவாதான். அதுக்கு மேல வாங்கறது ஞாயமில்ல. நாளக்கி வர்றேன் மொதலாளி. அல்லா ஆசீர்வாதம்."*

*அல்லாவின் ஆசிர்வாதத்தை என் மேலே இறக்கி வைத்து விட்டுப் படியிறங்கி நடந்த மனிதரின் கால்களில் செருப்பில்லை. ஆனால், செருப்புக்கு பதிலாய்ப் பாதங்களில் சக்கரங்களைப் பொருத்தி விட்ட மாதிரி அப்படியொரு வேகம், சுறுசுறுப்பு!*

*செருப்பின்மையைப் பற்றிப் பிறிதொரு நாளில் கேட்ட போது அவர் சொல்லுவார்:*

*"மொதலாளி, நீங்க செருப்புக் காலோடயா ஒங்கக் கடைக்குள்ள காலெடுத்து வக்கீக? செருப்ப வெளிய கெளட்டிப் போட்டுட்டுத்தான போறீக? ஏன்னா, இது*

*நீங்க தொழில் செய்ற எடம். ஒங்களுக்கு சோறு போடற எடம். அதுல செருப்புக்கால் படப்படாது. எனக்கு இந்த தெரு பூரா, இந்த ஏரியா பூரா தொழில் பண்ற எடம், சோறு போடற எடம். செருப்புக் காலக் கொண்டு இந்த பூமிய நா மிதிக்கலாமா?"*

*நறுமணத்தோடு நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன. சாம்பராணிப் புகை போட வருகிறவர், அவருடைய அவசரத்திலும் என்னிடம் நல்லதாய் நாலு வார்த்தை பேசிவிட்டுத்தான் நகர்வார். "அல்லா ஆசீர்வாதம்" தினந்தினம் உண்டு.*

*தொழில் ரீதியான உறவையும் மிஞ்சிய ஓர் ஈடுபாடு ஏற்பட்டுப் போன பின்னால் ஒரு நாள் இந்தத் தொழிலைப் பற்றிப் பேச்சுக் கொடுத்தேன்.*

*"ஏம் பாய், இந்தத் தொழில்ல அப்படி என்ன வருமானம் கெடக்கிது ஒங்களுக்கு?"*

*"வருமானம் கம்மி தான் மொதலாளி, என்ன செய்றது, வேற தொழில் தெரியாதுங்களே! எங்க வாப்பா என்னப் படிக்க வக்யல. அவங்க வாப்பா பண்ணிட்டிருந்த தொழில அவர் பண்ணினார். அதே தொழில நா தொடர்ந்து பண்ணிட்டிருக்கேன். சில்லற கம்மின்னாலும், எங்கயும் மரியாதக் குறைவு கெடயாது மொதலாளி. வாசம் புடிக்கிற வேல பாத்தீகளா, அதனால இந்தத் தொழிலுக்கு ஒரு மரியாத இருக்கு. அதுக்கு மேல, ஒங்களப் போல நல்லவங்களோட அன்பும் ஆதரவும் கெடைக்குதே, அந்த சந்தோஷம் போதுமே மொதலாளி!"*

*தினமும் தனியாய் வருகிறவர், இருந்திருந்தாற் போல ஒருநாள் இன்னொரு மினி பச்சைத் தலைப்பாகையோடு வந்தார். பள்ளி மாணவன் தோற்றத்திலிருந்த ஒரு டீன் ஏஜர்.*

*"இது யார் பாய், ஒங்க சக்கரத்துக்கு ஸ்டெப்னியா?" என்று நான் சிரித்ததற்கு, "நம்ம மூத்த பையன் மொதலாளி, இன்னிக்கித்தான் மொதோ தடவையா எங்கூட இட்டுட்டு வந்திருக்கேன்" என்று பையனைத் தட்டிக் கொடுத்தார்.*

*இது எனக்கு ஒவ்வாததாயிருந்தது. பையனைத் தட்டிக் கொடுத்தது அல்ல, இவனை இந்த மனிதர் தொழில் செய்ய அழைத்துக் கொண்டு வந்தது. என்னுடைய அதிருப்திக்கு சொல் வடிவம் கொடுத்தேன்.*

*"என்ன பாய், ஒங்க வாப்பா தொழில நீங்க செய்யறது ஒங்க தலமுறையோட தல முழுக வழி பண்ணக் கூடாதா? புள்ளைங்கள ஸ்கூல்ல போட்டுப் படிக்க வக்யலாம்ல?"*

*"தப்பு மொதலாளி" என்று சிரித்தார் அவர். "மொதலாளி தப்பாப் புரிஞ்சிக்கிட்டீக. இவன் நம்ம தொழில் வாரிசு இல்லீங்க மொதலாளி. பதினொண்ணாங் கிளாஸ் படிக்கிறான். மூணு புள்ளைங்களுமே கார்ப்பரேசன் பள்ளிக் கூடத்துல படிக்கி. ஆண்டவம் புண்ணியத்ல புள்ளைங்க மூணுமே நல்லாப் படிக்கி. ப்ளஸ் ட்டூ முடிச்சிட்டு தொர இஞ்ஜினியர்ப் படிப்புப் படிக்கப் போறேங்கார். ரொம்பச் செலவாகும்னு சொல்றாக. என்னமோ கொஞ்சம் சேத்து வச்சிருக்கேன். எம் படிப்புக்கு நானுங் கொஞ்சம் சம்பாரிக்கேன் வாப்பா, லீவ்*

*நாள்ல ஒங்க கூட நானும் வர்றேன்னான். அதான் கூட்டிக்கிட்டு வந்திருக்கேன். ரெண்டு நாள் ட்ரெய்னிங் குடுத்து வேற ஏரியாவுல வுட்றலாம்னு இருக்கேன்."*

*"எந்த ஏரியாவுல வேணாலும் விடுங்க பாய், ஆனா ஒங்கள மாதிரி செருப்பில்லாம வெறுங்காலோட மட்டும் நடக்க விட்ராதீங்க."*

*"அதெப்படி விடுவேன் மொதலாளி, அவன் என்ன இந்தத் தொழிலா செய்யப் போறான்? ஸ்கூலுக்குப் போட்டுட்டுப் போறதுக்கு பூட்ஸ் வேங்கிக் குடுத்துருக்கேன், மித்தநேரம் போட்டுக்கறதுக்கு ரப்பர் செருப்பு இருக்கு. கால்ல கல்லு முள்ளு குத்த நான் சம்மதிப்பேனாக்கும்? செல்லமா வளந்த புள்ள! வருங்கால இஞ்ஜினியர்ல்லா!"*

*"வெரி குட் வெரி குட்" என்று என் பாராட்டுக்களைத் தெரிவித்தேன்.*

*"அவனுடைய படிப்புக்காகப் பார்ட் டைம் வேல பாத்து அவனே சம்பாதிக்கிறது ரொம்ப நல்ல விஷயம் பாய். தம்பி, இஞ்ஜினியராகப் போறியாக்கும்? அட்வான்ஸ் வாழ்த்துக்கள். நல்லா படிக்கிறியா? ப்ளஸ் ட்டூல எத்தன மார்க் வாங்குவ?"*

*"தொண்ணூறுக்கு மேல வாங்குவேன் அங்க்கிள்" என்று உற்சாகத்தோடு மறுமொழி தந்த பையனுக்காக நான் இன்னொரு வெரிகுட் போட்டுக் கொண்டிருந்தபோது, நறுக்கென்று ஒரு குட்டு விழுந்தது, அந்த செல்லமாய் வளர்ந்த பிள்ளையின் தலையில்.*

*"அங்க்கிள் என்னடா அங்க்கிள்? மரியாத வேணாம்? மொதலாளின்னு சொல்லுவியா, அங்க்கிளாம்ல!"*

*"அட சும்மா விடுங்க பாய்" என்று அவருடைய கையை நான் எட்டிப் பிடித்தேன்.*

*"இது ஒரு தப்பா? இதுக்குப் போய் ஒரு குட்டு வச்சிட்டீங்களே! தம்பி, நீ அங்க்கிள்னே கூப்புடுப்பா. நல்லா படிக்கணும் என்ன? நீ சொன்ன மாதிரி தொண்ணூறுக்கு மேல வாங்கணும்."*

*"வாங்குவேன் அங்க்கிள்."*

*"வெரிகுட், வாப்பாகூட அப்பப்ப வந்து போய்க்கிட்டு இரு."*

*"வறேன் அங்க்கிள்."*

*ஆனால் அதன் பின்னால் வாப்பா தனியாய்த்தான் வந்தார். லீவ் நாட்களில் பையன் அவருடன் வரவில்லை. கேட்டதற்கு, வேறே ஏரியாவில் அவன் பார்ட் டைம் செய்து கொண்டிருப்பதாய்ச் சொன்னார்.*

*அவனுடைய படிப்பைப் பற்றிய பேச்சு அடிக்கடி எழும். பையன் நன்றாய்ப் படிப்பதாய் அவனுடைய ஆசிரியர்கள் பாராட்டிச் சொன்னதைச் சொல்லிப் பூரித்துப் போவார். பையன் ப்ளஸ் ட்டூவுக்குப் போய்விட்டான். படிப்பு ஒரு*

பக்கம் இருக்க, பார்ட் டைம் சாம்பராணிப் புகைத் தொழிலில் அவன் தன்னந்தனியாய் நாலாயிரம் ரூபாய் போல சம்பாதித்து வைத்திருக்கிறானாம்!

ப்ளஸ் ட்டூ பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கிற கால கட்டத்தில் அவனைத் தொழிலுக்கு அனுப்ப வேண்டாம் என்கிற என்னுடைய அபிப்ராயத்தை ஏற்றுக் கொண்டு அவனுடைய பார்ட் டைமை நிறுத்தி விட்டதாய்ச் சொன்னார்.

ஆனால், ஃபுல் டைம் பார்த்துக் கொண்டிருந்த இந்த மனிதரைக் கூட ரொம்ப நாளாய்க் காணவில்லை.

ஸ்டடி லீவில் பையனுக்கு அருகிலேயே இருந்து பொறுப்போடு அவனையும் அவனுடைய படிப்பையும் கவனித்துக் கொள்கிறாராயிருக்கும். ரொம்ப நல்ல விஷயந்தான்.

காலைகளில், கடை திறந்ததும் நான் ஊதுவத்திக் கொளுத்தி வைத்து இறை வணக்கம் செய்கிற போது அந்தப் பையனுக்காவும் ப்ரார்த்தித்துக் கொண்டேன். ப்ளஸ் ட்டூ பரீட்சைகள் தொடங்கின அன்று விசேஷ ப்ரார்த்தனைகள். ஊதுவத்திக் கொளுத்தி, கல்லாவுக்கு மேலாய் வரிசையாய் மாட்டியிருந்த தெய்வங்களின் படங்களின் முன்னால் கண்மூடிக் கரங்கூப்பி நின்ற போது, ஊதுவத்தி மணத்தைக் தூக்கியடிக்கிற சாம்பராணிப் புகை மணம் குப்பென்று வியாபித்து மனசைச் சிலிர்க்கச் செய்தது.

ஆஹா! நறுமண நண்பர் திரும்பவும் வந்து விட்டார் என்று கண் விழித்துப் பார்த்தபோது அங்கே கண்ணில் பட்ட உருவத்தைப் பார்த்து அதிர்ந்தேன்.

"தம்பி, வாப்பா வரல? நீ எக்ஸாம் எழுதப் போகல? இன்னிக்கித் தானே எக்ஸாம் ஆரம்பம்?"

"வாப்பா வரல. வர மாட்டாங்க" என்றான் பையன் விழிகளில் கண்ணீர் முட்ட.

என்னமோ விபரீதம் என்பது மட்டும் புரிய, "என்ன, என்ன ஆச்சு தம்பி?" என்று பதறினேன்.

சோகங்கப்பிய முகத்தோடு பையன் விவரம் சொன்னான். "போன மாசம் ஒரு நாள் சாயங்காலம், வாப்பா வேலய முடிச்சிட்டுப் போயிட்டிருந்தப்ப, குடிச்சிப்புட்டு ஒரு ஒயின் ஷாப்புக்கு முன்னால நின்னுட்டிருந்த நாலஞ்சு பேர், அந்த ஒயின் ஷாப்புக்குள்ளயும் பக்கத்துலயிருந்த பாருக்குள்ளயும் சாம்பராணிப் பொக காட்டச் சொன்னாங்களாம். வாப்பா மாட்டேன்னுட்டார். அவனுங்க தகராறு பண்ணியிருக்காங்க. ஹராமான எடத்துல நா வேல செய்ய முடியாதுன்னு வாப்பா மாட்டவே மாட்டேன்னுட்டார். குடிகாரப் பசங்க எல்லாருஞ் சேந்து வாப்பாவ அடி அடின்னு அடிச்சிப் போட்டுட்டுப் போய்ட்டாங்க. ஒடம்பெல்லாம் ரத்தக் காயம். அதோட உள்க் காயம் வேற. ஆஸ்பத்திரியில வச்சு வைத்தியம் பாத்தோம். வாப்பா சேத்து வச்சிருந்த பணம் தான் கை குடுத்துச்சி. ஆனா ஒண்ணும் ப்ரயோஜனமில்ல. போன வாரம் வாப்பா மவுத்தாயிட்டாங்க."

அதிர்ச்சியில் நான் சொல்லிழந்து நின்றேன்.

*பையனே தொடர்ந்து பேசினான். "இன்னிக்கிப் பரிச்ச ஆரம்பிக்குது. ஆனா நா பரிச்ச எழுதப் போகல. வாப்பா தொழில இன்னிலயிருந்து நா பாக்கப் பேறேன். நெறய்ய சம்பாரிக்கப் போறேன். நா இஞ்ஜினியரிங் படிக்காட்டிப் பரவாயில்ல. தம்பி, தங்கச்சி ரெண்டு பேரையும் நல்லாப் படிக்க வச்சி ரெண்டு பேரையும் இன்ஷா அல்லா, இஞ்ஜினியராக்கிருவேன்."*

*அவனுடைய குரலில், சோகத்தை மீறிய ஒரு உறுதி வெளிப்பட்டது. "தம்பி, தங்கச்சி ரெண்டு பேரையும் நா இஞ்ஜினியராக்கிருவேன்' என்று திரும்பவும் அவன் சொன்னபோது, கண்ணீர்த் துளிர்ப்பை ஊடுருவிக் கண்களில் மின்னலடித்தது.*

*இதயத்தின் கனம் வார்த்தைகளை அழுத்திப் பிடித்துக் கொண்டிருக்க, இன்னும் வாய் பேச முடியாமலிருந்த நான், ஒரு பத்து ரூபாய்த்தாளை எடுத்து அவனுடைய தட்டில் போட்டேன். தட்டில் பரவலாய்க் கிடந்த நாணயங்களிலிருந்து எட்டு ரூபாய் நாணயங்களைப் பொறுக்கியெடுத்து என்னிடம் நீட்டினான்.*

*"நமக்கு உண்டானது ஒரு ரூவா, ரெண்டு ரூவாதான். அதுக்கு மேல வாங்கறது ஞாயமில்ல. நாளக்கி வர்றேன் மொதலாளி. அல்லா ஆசீர்வாதம்."*

*ஆண்டவனின் ஆசீர்வாதத்தை எனக்கு அருளிவிட்டுப் படியிறங்கி அவன் சுறுசுறுப்பாய் நடந்தான். செருப்பில்லாத கால்களோடு.*

*(தினமலர் வாரமலர், 22.06.2008)*
*(செருப்பில்லாத கால்)*

# அமாவாசையும் அப்துல்காதரும்

*ஒரிஜினல் ஹல்வாவுக்கும் அதைவிட ஒரிஜினல் தமிழுக்கும் பேர் போன திருநெல்வேலிச் சீமையிலே சின்னதாய் ஒரு மாஜி சமஸ்தானம். சமஸ்தான மஹாராஜாவுக்கு முத்து முத்தாய் மூணு வாரிசுகள்.*

*முருகேச பாண்டியன், கணேச பாண்டியன், ஹரிஹரப் பாண்டியன்.*

*அண்ணன்மார் ரெண்டு பேரையும் ஓரங்கட்டி விட்டு சமஸ்தானத்தை சாதூர்யமாய்க் கைப்பற்றிக் கொண்ட சின்னவர் ஹரிஹரப் பாண்டியன் திடீரென்று காணாமல் போனார். மூத்த பாண்டியர்கள் ரெண்டு பேர் மேலும் சந்தேகம். ஆனால் தடயம் எதுவும் கிடைக்க வில்லை. எதையும் நிரூபிக்க முடியவில்லை.*

*கண்ணீரோடும் கனத்த நெஞ்சோடும் ஹரிஹரனின் ராணி காயத்ரி தேவி சமஸ்தானப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்.*

*காயத்ரி தேவிக்கு கனம் நெஞ்சில் மட்டுமல்ல, முழு உடம்பும் கனம்தான்.*

*கணவரை இழந்த சோகம் அடங்கிப் போனபின், உடம்பின் கனத்தை இன்னுங் கொஞ்சம் கூட்டிக் கொண்டாள். ரெண்டே முக்கால் கிலோ தங்க நகைகளைக் கழுத்திலும் கைகளிலும் தன்னந்தனியாய்ச் சுமக்க, அப்படியொரு ஹெவிவெய்ட் சரீரம் தேவையாய்த்தானிருந்தது.*

*காயத்ரி தேவியின் நாக்குக்கு ருசியாய் சமைத்துப் போட பட்லர் மாணிக்கம். அவனுடைய உதவிக்கு சிவகாமி.*

*சிவகாமிக்கும் மாணிக்கத்துக்கும் ஒத்துப்போகவில்லை.*

*காயத்ரி தேவியிடம் சிவகாமியைப் பற்றி வத்தி வைத்து அவளை அரண்மனையிலிருந்து அகற்றி விட்டான் மாணிக்கம். சிவகாமியின் இடத்துக்கு, போன மாசந்தான் ஒரு புது உதவி பட்லர் வந்தான், சிவகாமியைப் போலவே அனாதை, ஆதரவற்றவன் என்கிற தகுதிகளோடு.*

*அப்துல்காதர்.*

*அப்துல்காதருக்கும் மாணிக்கத்துக்கும் நன்றாய் ஒத்துப்போனது. ரெண்டுபேரும் சேர்ந்து வகை வகையாய் ஆக்கிப் போட்டு காய்த்ரி தேவியின் சுற்றளவு கொஞ்சமும் குறைந்து விடாமல் கவனமாய்ப் பார்த்துக் கொண்டார்கள்.*

அன்றைக்கு ராத்திரி, வழக்கம் போல காயத்ரி தேவிக்குச் சப்பாத்தியும் சிக்கனும், இடியாப்பமும் பாயாவும், முட்டை ஆப்பமும் தேங்காய்ப் பாலும் பரிமாறிக் கொண்டிருந்த மாணிக்கத்தைப் பாசத்துடன் பார்த்துப் பக்கத்தில் அழைத்தாள் காயத்ரி தேவி.

"இந்தாடா மாணிக்கம், ஒன்ட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும். இந்தப் புதுப் பையனுக்குக் கிச்சன்ல ஏதாவது வேல சொல்லி அனுப்பிச்சிட்டு நீ மட்டும் இங்ஙனயே இரு."

ராணியம்மா என்றைக்குமில்லாமல் இன்றைக்குத் தன்னிடம் என்ன முக்கியமான விஷயத்தைப் பகிர்ந்து கொள்ளப் போகிறாள் என்கிற புதிரோடு மாணிக்கம், அப்துல்காதரை உள்ளே அனுப்பி விட்டு, ராணியம்மாவின் முன்னே வந்து பணிவாய் நின்றான்.

குரலைத் தணித்து காயத்ரி தேவி பேசினாள்.

"புதுப் பையன் உள்ள போய்ட்டானா?"

"போய்ட்டான் ராணியம்மா."

"நம்ம சிவகாமி இங்கயிருந்தாளே, இப்ப அவ எங்க இருக்கான்னு தெரியுமா?"

"அவ இப்ப எதுக்கு ராணியம்மா?"

"கேட்டதுக்கு பதில் சொல்லுடா."

"தெரியும் ராணியம்மா. திருநவேலி டவுன்ல நெல்லையப்பர் கோவில்ப் பக்கம் பூ வித்துட்டிருக்கப்ப ரெண்டு வாட்டி பாத்திருக்கேன்."

"அவ குடும்பம்?"

"அவளுக்கேது குடும்பம் ராணியம்மா? அனாதிக் கழுத தான அது. புள்ள உண்டாகலன்னு புருஷனும் வெரட்டி விட்டுட்டான். அனாதியாத்தான அவ அரண்மனக்கி வந்தா."

"அப்பாடி, அதான் எனக்குத் தேவ. நீ இப்ப என்ன பண்ற, நாளக்கிக் காலைல திருநவேலிக்கிப் போயி அந்த சிவகாமியப் பாத்துப் பேசி இங்கக் கூட்டிட்டு வாற."

"ஐயைய, என்னத்துக்கு ராணியம்மா?"

"சொன்னதச் செய்டா. இந்தப் புதுப்பையன்ட்ட சொல்லி நாளக்கி லஞ்ச்க்கு ஸ்பெஷல் ஐட்டம் ரெண்டு மூணு செய்யச் சொல்லிட்டு நீ திருநவேலிக்கு போ. சிவகாமிக்கு நாளக்கி இங்க விருந்து."

மாணிக்கத்துக்கு ஒண்ணும் புரியவில்லை. சிவகாமி ஒரு ராங்கிக்காரி. இவனுக்குக் கீழ்ப்படியாதவள். அவளை எதற்கு ராணியம்மா அரண்மனைக்குக்

*கூப்பிடுகிறாள்? அதுவும் விருந்துச் சாப்பாடாம்! அழுத்திக் கேட்டால் ராணியம்மா எரிந்து விழுவாள். வேண்டாம். மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.*

*ராணியம்மா சாப்பிட்டு முடித்துக் கை கழுவும் வரை மாணிக்கம் வாயைத் திறக்கவில்லை. பிறகு மெல்ல வாயைத் திறந்தான்.*

*"அப்ப ராணியம்மா, நாளக்கிக் காலைல நாம்ப் போய்…" ராணியம்மா கொஞ்சம் கீழே இறங்கி வந்து மாணிக்கத்தை ஆமோதித்தாள்.*

*"ஆமா, காலைல நீ போய் சிவகாமியக் கூட்டிட்டு வந்துரு. அம்பாஸடர நீயே எடுத்துட்டுப்போ. டிரைவர் வேணாம். இங்க பார், நீ போறதும் வாறதும் அவளக் கூட்டிட்டு வாறதும் யாருக்கும் தெரியக்கூடாது, என்ன?"*

*அடுத்த நாள் காரைப்போட்டுக் கொண்டு மாணிக்கம் திருநெல்வேலி டவுனுக்குப்போய், சிவகாமியை சமாதானப் படுத்தி அரண்மனைக்குக் கூட்டிக் கொண்டு வந்தான். சிவகாமியைப் பார்த்ததும் ராணியம்மாவுக்கு சந்தோஷமோ சந்தோஷம், என்னமோ ஒரு புதையல் கிடைத்து விட்ட மாதிரி. அவளை எதிர் கொண்டு வரவேற்றாள்.*

*'எப்படி எளச்சுப் போட்டியே சிவகாமி' என்று வருத்தப் பட்டாள்.*

*சிவகாமியுடைய ஒட்டுப் போட்ட அழுக்குப் புடவை அந்த அரண்மனைச் சூழலுக்கு ஒவ்வாதிருந்தாலும் ராணியம்மா முகஞ்சுளிக்காமல் அவளைக் கையைப் பிடித்து வாஷ்பேசினுக்கு வழி நடத்திச் சென்றாள்.*

*முகம், கை அலம்பிக்கொண்டு வந்தவளை சாப்பாட்டு மேஜைக்கு முன் அமர்த்தினாள். மாணிக்கமும் அப்துகாதரும் கொண்டு வந்த ஐட்டங்களைத் தன் கையால் தானே சிவகாமிக்குப் பரிமாறி அனைவரையும் அசத்தினாள். திக்குமுக்காடிப்போன சிவகாமி, சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே ராணியம்மாவிடமிருந்து ஆறுதல் வார்த்தைகள் வந்தன.*

*"நேத்துத்தான் இந்தப் பய மாணிக்கம் சொன்னாம்மா, புள்ள உண்டாகலன்னு ஒன்ன ஒதுக்கி வச்சிட்டானாமே ஒம் புருஷன், என்ன அநியாயம்டி இது! புள்ள இல்லாதது ஒரு கொறையா? அப்படிப் பாத்தா எனக்குந்தான் புள்ள இல்ல, ஆனா நா எப்படி ராணியாட்டமா இருக்கேன் பாத்தியா?"*

*"நீங்க உண்மயிலேயே ராணி தானே ராணியம்மா?"*

*"ஒன்னயும் ராணி மாதிரியே நா வச்சிக்கிருதேன் சிவகாமி. இந்த ஒட்டுப்போட்ட புடவையெல்லாம் கழட்டி எறி. நா ஒனக்கு நல்ல துணிமணி தாறேன். நீ வேல ஒண்ணும் செய்ய வேண்டாம். எனக்குத் தொணையா இரு, போதும்."*

*சிவகாமிக்கு ராணியம்மா செய்கிற உபசரணைகளைப் பார்த்த போது இந்தப் பொம்பளக்கிக் கோட்டி கீட்டி புடிச்சிருச்சா என்று மாணிக்கத்தின் நினைப்பு ஓடியது. ஒன்றும் பேச முடியாமல் மாணிக்கம் பொறுமையிழந்து காத்திருந்தான்,*

*தன்னுடைய செயல்களுக்கு ராணியம்மா ஒரு விளக்கம் வைத்திருப்பாள், தன்னிடம் சொல்லுவாள் என்று.*

*சிவகாமிக்கு விருந்து படைத்து, உடுத்திக் கொள்ள நல்ல உடைகள் எடுத்துத்தந்து, அவளுக்கென்று ஒதுக்கியிருந்த அறைக்கு ஓய்வெடுக்க அவளை அனுப்பிவிட்டு ராணியம்மா மாணிக்கத்தைப் பார்த்து ஒரு விஷ(ம)ப் புன்னகை சிந்தினாள். அது மாணிக்கத்துடைய குழப்பத்தை அதிகரித்தாலும், இதில் ஏதோ விஷ(ய)ம் இருக்கிறது என்பது மட்டும் புரிந்தது.*

*மாணிக்கம் பரிமாற, ராணியம்மா மதிய உணவை ஒரு பிடி பிடித்தாள். பிறகு மாணிக்கத்திடம், சாப்பிட்ட பிறகு தன்னுடைய அறைக்கு வரும்படிச் சொல்லிவிட்டுப் போனாள்.*

*சஸ்பென்ஸ் தாங்காத மாணிக்கம், மளமளவென்று அள்ளிக் கொட்டிக் கொண்டு அடுத்த ஆறாவது நிமிஷம் ராணியம்மாவின் அறையில் ஆஜரானான்.*

*அறையில் வைத்து ராணியம்மா மாணிக்கத்திடம் கேட்ட முதல் கேள்வி, 'புதுசா வந்திருக்கானே பையன், ஒன் அஸிஸ்ட்டன்ட், அவன் ஆள் என்ன மாதிரி?'*

*மாணிக்கம் கொஞ்சமும் தயங்காமல் அப்துல்காதருக்கு ஸர்ட்டிஃபிகேட் வழங்கினான்.*

*"சுறுசுறுப்பான பையன் ராணியம்மா. நல்ல கெட்டிக்காரன்."*

*"ஆயுசும் கெட்டிதான் அவனுக்கு."*

*"என்ன சொல்றீங்க ராணியம்மா?"*

*"வெவரமா சொல்றேன், கவனமாக்கேளு. ஒம்மேல நம்பிக்க வச்சு இதச் சொல்றேண்டா மாணிக்கம், வெளிய யாருக்கும் தெரியக்கூடாது."*

*"சொல்லுங்க ராணியம்மா."*

*"இந்த சிவகாமிய நா எதுக்குக் கூட்டிட்டு வரச் சொன்னேன் தெரியுமா?"*

*"அது தெரியாமத்தானே ராணியம்மா நேத்துலயிருந்து நா மண்டைய ஒடச்சிட்டிருக்கேன்.!"*

*"நா சொல்றதக் கேட்டு ஷாக் ஆயிராத. இந்த சிவகாமிய நம்ம தோட்டத்துல பலி குடுக்கப் போறேன். நர பலி."*

*அதிர்ந்து போனான் மாணிக்கம்.*

*"ராணியம்மா!"*

குரல் வளைய அழுத்திக் கொண்டு ஒலியெழுப்ப முயல்கிற மாதிரி, வால்யூமைக் குறைத்து அலறினான்.

'டென்ஷன் ஆகாதடா மாணிக்கம்' என்று ராணியம்மா அவனை சமனப்படுத்தினாள்.

"நீ இந்த சமஸ்தானத்துக்கு விஸ்வாசமானவன். ஒம்மேல நம்பிக்க வச்சித்தான் இந்த ரகசியத்த ஒன்ட்ட சொல்றேன். உணர்ச்சி வசப்படாம கேளு. நீ என்னோட ஒத்துழச்சா ஒனக்கு வெகுமதி கெடக்யும். என்ன, சொல்லட்டுமா?"

தோள்ப்பட்டைப் பட்டியில் சொருகியிருந்த மேஜை துடைக்கிற துணையை எடுத்து முகத்து வியர்வையை அழுத்தித் துடைத்தபடி 'சொல்லுங்க ராணியம்மா' என்றான் மாணிக்கம்.

ராணியம்மா ஒரு திகில்க் கதை சொன்னாள்.

"நம்ம தோட்டத்ல புதையல் ஒண்ணு இருக்குன்னு ஒரு மநதிரவாதி சொன்னாண்டா மாணிக்கம். எக்கச்சக்கமான தங்க நகை இருக்குன்னு மை போட்டுப் பாத்துச் சொன்னான். ஆனா அத எடுக்கணும்னா ரெண்டு நரபலி குடுக்கணும். எனக்கு இந்தப் புதுப்பையன் ஞாபகந்தான் சட்னு வந்தது. ஆனா, மந்திரவாதி அத ஒத்துக்கல. ஒரு பெண்பலி தான் குடுக்கணும்ங்கறான். ஏற்கனவே ஒரு ஆண்பலி குடுத்துட்டதால, இப்பப் பெண்பலி தான் குடுக்கணுமாம்."

இந்த இடத்தில் ராணியம்மா நிறுத்தினாள்.

'ஏற்கனவே ஒரு ஆண்பலி குடுத்துட்டதால' என்கிற வாக்கியம் மாணிக்கத்தின் கண்களை அகலமாய் விரிய வைக்கும் என்று அவளுக்குத் தெரியும்.

மாணிக்கம் அவளை அகலப் பார்வை பார்த்துக் கொண்டிருக்க, ராணியம்மா தொடர்ந்தாள்.

"மஹாராஜா திடீர்னு காணாமப் போனது யார் வேலன்னு நெனக்கிற? அந்த மந்திரவாதி வேல தான். சரியாச் சொல்லப் போனா, அது என்னோட வேல. அடேய் மாணிக்கம், வாரிசு இல்லாத சமஸ்தானம்டா இது. வாரிசு இல்லாமப் போனதுக்கு யார் காரணம்னு நெனக்கிற? சிவகாமி மாதிரி நா மலடியா? இல்லவே இல்ல. எனக்கு வாய்ச்ச புருஷன், ஒங்க மஹாராஜா ஒரு வடிகட்டின மலடன். ஆண்மையில்லாத ஆத்மா. அந்த ஆளால எனக்கு வாழ்க்கையில ஒரு சந்தோஷமுமில்ல, ஒரு ப்ரயோஜனமுமில்ல. புதையல எடுக்கவாவது அந்த மனுஷன் ப்ரயோஜனப் படட்டுமேன்னு மந்திரவாதி கூட சேந்து மஹாராஜாவப் பரலோகத்துக்கு அனுப்பி வச்சேன். இப்ப மந்திரவாதி சொல்றான், அந்தப்பலி பத்தாது, ஒரு பெண் பலியும் இருந்தாத்தான் பலி பூரணமாகும், அப்பத்தான் புதையல் எடுக்க முடியும்னு. அதுக்காகத்தான் இந்த சிவகாமியத் தள்ளிட்டு வர ஒன்ன அனுப்பிச்சேன். இல்லாட்டி இந்த சனியனுக்கு எங்கையால விருந்து பரிமாறணும்னு எனக்கென்ன தலையெழுத்தா! அனாதிக் கழுத. கமுக்கமா காரியத்த முடிச்சிட்டா கேக்க ஆளிருக்காது. நீ என்ன செய்ற, ராத்திரி சாப்பாட்டுக்குப் பெறகு ஐஸ்க்ரீம்லயோ காப்பிலயோ மயக்க மருந்து கலந்து

*சிவகாமிக்கிக் குடுத்துர்ற. ராத்திரி மந்திரவாதி வருவான். மீதி வேலய அவன் பாத்துக்குவான். ராத்திரி கவனமாயிரு. இப்ப நீ போகலாம்."*

*நடைப்பிணம் மாதிரி ராணியம்மாவின் அறையிலிருந்து வெளியே வந்தான் மாணிக்கம். அவனுடைய பேயறைந்த முகத்தைப் பார்த்துக் கலவரமடைந்த அப்துல்காதர், என்ன விஷயமென்று விசாரித்ததற்கு பதிலெதுவும் சொல்லாமல் பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டு கொஞ்ச நேரம் தனிமையிலிருந்தான்.*

*தனிமையில் சிந்தனை கன்னாபின்னாவென்று ஓடியது.*

*அந்த சிவகாமி இவனுக்குக் கீழ்ப்படிய மறுத்தவளாயிருக்கலாம். அதற்காக அந்த அப்பாவிப் பெண்ணைக் கொலை செய்வதற்குத் தான் உடந்தையாயிருப்பதா? புதையலுக்காகப் புருஷனையே தீர்த்துக் கட்டினவளாமே இந்த ராணியம்மா! இந்தப் பஞ்சமா பாதகியிடமிருந்து அந்த அபலைப் பெண்ணைக் காப்பாற்ற ஏதாவது செய்தாக வேண்டுமே என்று சிந்தித்தான். சின்னதாய் ஒரு பொறி தட்டியது. சுதாரித்துக் கொண்டு போய் ராணியம்மாவின் அறைக்கதவைத் தட்டினான். மதியத் தூக்கம் தடைப்பட்ட கடுப்பில் கதவைத் திறந்து இவனை முறைத்த ராணியம்மாவைப் பணிவாய் நமஸ்கரித்து, 'ராணியம்மா, நீங்க கோச்சுக்கலன்னா நா ஒரு சின்ன யோசன சொல்லலாமா' என்றான். வேண்டா வெறுப்பாய் அவள் அனுமதி கொடுத்ததும் இவன் ஆண்டவனை நினைத்துக் கொண்டு வார்த்தைகளை விட்டான்.*

*"ராணியம்மா, இந்த மந்திரவாதி, புதையல், சமாசாரம் நானும் எங்க கிராமத்துல கேள்விப்பட்டிருக்கேன். பலியாகிற ஆள் சத வச்சு வாட்டசாட்டமா இருந்தாத்தான், புதையலக் காவல் காக்கற சாத்தான் பலிய ஏத்துக்குமாம். இந்த சிவகாமி மாதிரி எலும்புந் தோலுமான ஒரு பொம்பளப்பலி குடுத்தா, அத ஏத்துக்காதுன்னு சொல்லுவாங்க. மஹாராஜா வெய்ட் கூடின ஆள், சரி. ஆனா, இந்த நோஞ்சான் பொம்பளயப் பலி குடுத்து அது வீணாப் போயிரக் கூடாது ராணியம்மா."*

*"அதுக்கு என்ன செய்யணுங்கற?"*

*"நம்ம தோட்டத்துப் புதயல் எங்க போயிரப் போகுது ராணியம்மா? கொஞ்சம் லேட் பண்ணுவோம். ஒரு ரெண்டு மாசம் நல்ல தீனி போட்டு இந்தப் பொம்பளயத் தேத்துவோம். ரெண்டு மாசத்துல ஒங்கள மாதிரி கொழு கொழுன்னு ஆயிருவா. அதுக்கு நா கியாரண்டி. அதுக்குப் பெறவு ஜோரா பலி குடுப்போம்."*

*ராணியம்மா யோசனையில் ஆழ்ந்தாள். மாணிக்கத்துக்கு நம்பிக்கை வந்தது.*

*'நீ சொல்றதும் சரியாத்தாண்டா தெரியுது மாணிக்கம்' என்றாள் ராணியம்மா.*

*"கெணத்துத் தண்ணிய வெள்ளமா கொண்டு போயிரப் போகுது? மந்திரவாதி வந்தான்னா நா அவனத் திருப்பி அனுப்பிச் சிர்றேன். நீ சொல்ற மாதிரி நாம லேட் பண்ணுவோம். சனியன் நல்லாக் கொழுக்கட்டும்."*

நிம்மதிப் பெருமூச்சோடு மாணிக்கம் தன் இடத்துக்குத் திரும்பினான். சிவகாமி மேலே அவனுக்கொரு பரிவு ஏற்பட்டது. அரண்மனைச் சாப்பாட்டை நன்றாய் சாப்பிடட்டும் என்று அவளுக்கு விதவிதமாய் ஆக்கிப் போட்டான்.

ஒரு மாதம் விர்ரென்று ஓடிவிட்டது.

அன்றைக்கு மதிய உணவு நேரம், ராணியம்மா மாணிக்கத்தைத் தனியாய் அழைத்தாள். 'நேத்து மந்திரவாதி ஃபோன் பண்ணாண்டா மாணிக்கம். இன்னிக்கி நைட்ல காரியத்த முடிச்சுப் புடலாம்னான்' என்றொரு குண்டைத் தூக்கிப் போட்டாள்.

மாணிக்கத்துக்கு பகீரென்றது.

"இது... வந்து.... ராணியம்மா, இன்னும் ரெண்டு மாசம் முடியலியே ராணியம்மா!"

'ரெண்டு மாசம்னு ஒரு கணக்காடா இருக்கு?' என்று அவனை மறுத்தாள் ராணியம்மா.

"இன்னிக்கி அமாவாசயாம் இன்னிக்கி செஞ்சிருவோம்னான், நானும் சரின்னுட்டேன். இந்தச் சனியன் என்ன தீவனம் திங்கிது! இதுக்கு ஆக்கிப் போட்டே கஜானா காலியாயிரும் போலயிருக்கு. சரி, நீ என்ன செய்ற, அன்னிக்கி சொன்ன மாதிரி இன்னிக்கி நைட் சாப்பாட்டுல ஒரு ஐட்டத்ல இந்த மருந்தக் கலந்து குடுத்துர்ற. மத்தத நா பாத்துக்கறேன். இதப் பத்தி யார்ட்டயும் மூச்சு விடக்கூடாது. தெரிஞ்சதா?"

ராணியம்மா கொடுத்த 'மருந்து'ப்புட்டியை எந்திரம் மாதிரி பெற்றுக் கொண்டான் மாணிக்கம்.

ஐயையோ, இப்போது என்ன செய்வது, இன்னும் சில மணிநேரமே உள்ள நிலையில் இந்தக் கொலையை எப்படித் தடுப்பது? யாரிடம் போய் யோசனை கேட்பது, யாரிடம் உதவி கோருவது?

மாணிக்கத்தின் முன்னே அப்துல்காதர் ஒருவன் மட்டுமே இருந்தான்.

அப்துல்காதரால் என்ன செய்யக்கூடும் என்கிற அவநம்பிக்கை இருந்தாலும், அவனோடு இந்த விஷயத்தைப் பகிர்ந்து கொள்வதையன்றி இப்போது வேறெதுவும் செய்வதற்கில்லை யென்கிற சூழ்நிலையில், அப்துல்காதரை இழுத்துக் கொண்டு, அவர்கள் படுக்கிற அறைக்குள் போய்க் கதவைத் தாளிட்டான்.

பிறகு, கலவரக் குரலில் எல்லாவற்றையும் கடகடவென்று அவனிடம் ஒப்பித்தான்.

மஹாராஜாவை சிவலோகப் பதவியடையச் செய்தது, சிவகாமியைக் காவு கொடுக்க ஏற்பாடாகியிருப்பது எல்லாவற்றையும் விலாவாரியாய்ச் சொன்னான்.

*எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட அப்துல் காதர் நம்பிக்கையோடு பேசினான்.*

*"நீங்க கவலையேப்படாதீங்க அண்ணாச்சி. நானும் எல்லாத் தையும் நோட் பண்ணிக்கிட்டுத்தான் இருக்கேன். சிவகாமியக் காப்பாத்திருவோம். இந்த ராட்சசி ராணியம்மாவையும் அந்த மந்திரவாதியையும் புடிச்சி உள்ள தள்ள ஏற்பாடு பணிருவோம். எங்கிட்ட பொறுப்ப விட்டுட்டு நீங்க நிம்மதியாயிருங்க."*

*"நீ என்ன தம்பி எரும மாட்டு மேல மழ பெஞ்ச மாதிரி சாவகாசமாப் பேசிட்டு நிக்கிற. டைம் ஓடிட்டிருக்கு. சிவகாமிய எப்பக் காப்பாத்தப் போற, எப்படிக் காப்பாத்தப் போற."*

*படபடவென்று பேசிய மாணிக்கத்தை முதுகில் தட்டி அப்துல்காதர் சமாதானப்படுத்தினான்.*

*"அண்ணாச்சி, பொறுமையாயிருங்க அண்ணாச்சி. நீங்க என்ட்ட ஒரு பெரீய ரகசியத்தச் சொன்னீக. இப்ப நா ஒங்ககிட்ட ஒரு சின்ன ரகசியத்தச் சொல்லுதேன், கேக்கிகளா?"*

*மாணிக்கம் அவனை வெறுமையாய்ப் பார்த்துக் கொண்டிருக்க, அப்துல்காதர் அழுத்தமாய்ச் சொன்னான்:*

*"அண்ணாச்சி, நா ஒரு அநாதையுமில்ல, நா பட்லருமில்ல, எம்ப்பேர் அப்துல்காதருமில்ல."*

*"பெறவு?"*

*"நா ஒரு போலீஸ் ஸி ஐ டி."*

*(சமநிலைச் சமுதாயம், ஜூன் 2008)*